# பட்டினத்தார் பாராட்டிய மூவர்

737

1. சிறுத்தொண்டர்
2. திருநீலகண்டர்
3. கண்ணப்ப நாயனர்

ஆசிரியர் :
...டி தி. நீலாம்பிகையம்மையார்

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை.

கழக வெளியீடு: அ

# பட்டினத்தார் பாராட்டிய மூவர்

க. சிறுத்தொண்டர்

உ. திருநீலகண்டர்

ங. கண்ணப்பர்

787
UNIVERSITY EXTENSION LIBRARY
26 SEP 1961
MADURAI

மறைமலையடிகளின் புதல்வியாரும்,
சென்னை நார்த்விக் மகளிர் கல்லூரித் தலைமைத்
தமிழாசிரியராயிருந்தவருமாகிய
திருமதி தி. நீலாம்பிகையம்மையார்
எழுதிப் பதித்தது

மீனாட்சி புத்தக நிலையம்
60 மேலக்கோபுரவாசல்
மதுரை

கிடைக்குமிடம்:—
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை 1.

First Edition : Dec., 1934
Reprint : Aug., 1953

[All Rights Reserved]

*Published by* :
THE AUTHOR

Appar Achakam, 2/140, Broadway, Madras-1

# முகவுரை

‘வாளால் மகவரிந்து ஊட்டவல் லேனல்லன
மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன்
தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந்து அப்பவல் லேனல்லன்
நானினிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி
அப்பருக்கே.’ —**பட்டினத்தடிகள்.**

**சேக்கிழாரடிகள்** அருளிச்செய்த பெரிய புராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகள் சைவர்களாற் பெரிதும் பாராட்டப் பட்டு வருகின்றன. அப்பெரியார்கள், எல்லாம் வல்ல கடவுளிடத்து வைத்த பேரன்பு காரண மாகப் பல செயற்கருஞ் செயல்களைச் செய்து தம் வினையறப் பெற்று இறைவனருள் கூடினர். அவ்வாறு அரனருள் பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்களுள் **சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர்** ஆகிய இம் மூவரையும் முற்றத் துறந்த **பட்டினத்தடிகள்** சிறந்தெடுத்துக் கூறி யருளினர். ஏனெனில், இவர்கள் தங்களையும், தங்களைப் பற்றிய எல்லாப் பொருள்களிடத்தும் வைத்த பற்றையும் அறவேவிட்டு இறைவனிடத் துப் பேரன்பு வைத்த முறையினர். இம் மூவரது அருஞ்செயல்களுக்கு மேற்பட்ட படி யில்லை.

நாம் காணும், பழகும், நுகரும் பொருள்களிடத்தும் உயிர்களிடத்து மட்டுமே நமக்கு அன்பும், பற்றும் உண்டாவதியற்கை. ஆனால், இங்கே குறிப்பிடப்படும் சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர் ஆகிய மூவரோ தாம் பழகிய உயிர்களில், பொருள்களில், வைத்த பற்றை விட்டுத் தாம் காணாத, பழகாத எல்லாம் வல்ல இறைவனிடத்துப் பேரன்பு வைத்தனர். அவ்வன்பு காரணமாகத் தாம் பழகிய உயிர்களில் வைத்த பற்றை அறவே ஒழித்துத் தம் அருமை மகவை அரிந்தும், இளமை இன்பத்தைத் துறந்தும், உறுப்பிற் சிறந்த கண்ணை இடந்து அப்பியும் புரிந்த செயற்கருஞ் செயல்கள் வேறெவரும் செய்தலாகாமையின் அம் மூவரையும் பட்டினத்தடிகள் தனிப்ப எடுத்துரைத்துப் புகழ்வாராயினர்.

யான் இம்மூவரது வரலாற்றையும் அவற்றின் அருங்கருத்துக்களையும் இறையருளால் ஒருவாறு விரித்தெழுதலானேன். இதனைப் பார்த்துத் தந்த என் அருமைத் தந்தையாரவர்கட்கு எனது நன்றி உரியதாகும்.

பாளையங்கோட்டை,
26—12—34.

தி. நீலாம்பிகை.

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| க. | சிறுத்தொண்டர் வரலாறு | 1 |
| | சிறுத்தொண்டர் வரலாற்றின் ஆராய்ச்சி | 11 |
| உ. | திருநீலகண்டர் வரலாறு | 23 |
| | திருநீலகண்டர் வரலாற்றின் ஆராய்ச்சி | 32 |
| ங. | கண்ணப்ப நாயனர் வரலாறு | 1 |
| | கண்ணப்ப நாயனர் வரலாற்றின் ஆராய்ச்சி | 21 |
| | திருக்காளத்திக் காட்சி | 69 |

# சிறுத்தொண்டர் வரலாறு

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

ஓம்

# சிறுத்தொண்டர் வரலாறு

காவிரியாறு சூழ்ந்த சோழநாட்டின்கட் செங்காட்டங்குடி என்னும் ஓர் ஊர் இருக்கின்றது. இது நீர் வளம் நிலவளம் முதலியவைகளால் நிறையப் பெற்றது.

இவ்வூரில் மாமாத்திரர் குலத்திற் றோன்றிய பரஞ் சோதியார் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். இவர் நல்லியல்புகள் மிக்கவராதலின் எல்லாரும் இவரைப் புகழ்ந்து பாராட்டி வந்தனர். இவர் தமது இளமைக் காலத்தில் மருத்துவநூல்கள், வடமொழி நூல்கள் முதலிய்வற்றை முறையாகக் கற்று அவற்றிற் சிறந்த புலமை நிரம்பினார். இதுவுமன்றி, இவர் படைக் கலத் தொழிலிலும், யானையேற்றங் குதிரையேற்றங்களிலும் மிக வல்லவரானார். மேலும், இவர் அறிவுப் பெரு நூல்கள் பலவும் நன்கு கற்றுணர்ந்து அவ்வுணர்வின் முடிந்த பயனாகச் சிவபிரானே முழுமுதற் கடவுளென்றும் அவன் திருவடிகளை அடைதலே பேரின்ப மென்றுமுணர்ந்தார். உணர்ந்து அவர் சிவபிரானிடத்தும், அவன் மெய்யடியாரிடத்தும் பேரன்பு பூண்டு ஒழுகிவரலானார்.

இவர் படைத் தொழிலில் மிகச் சிறந்தவராதலாற் சோழமன்னனுக்கு அணுக்கராயினர். இவர், தம் அரசனுடைய படைகளுக்குத் தலைவராயமர்ந்து, அவற்காக

யானைப் படைகளோடு போய் அவன் பகை யரசர்க ளொடு பொருது அவர் தம்மை யெல்லாம் வென்று, அவர் தம் நாடுகளைத் தம் அரசர்க்கு உரிமையாக்கி அவனாற் பெரிதும் நன்கு மதிக்கப்பெற்றார். ஒருமுறை இவர் தம் அரசனை எதிர்த்த, வடநாட்டிற் புகழ்பெற் றோங்கிய **வாதாவி** நாட்டரசனாகிய புலிகேசனோடு பொருது, அவனைப் புறங்கண்டு. அவன்பாலிருந்த பலவகை ஒளி மணிக் கற்களையும், பெரும்பொருட் குவையினையும், யானைப் படை, குதிரைப் படைகளையும் எண்ணுக்கடங்காமற் கொணர்ந்து தம் அரசன் முன்னே சேர்ப்பித்தார். இது கண்டு அரசன் இவரது யானையேற்றத்திறமையினைப் பெரிது வியந்து பாராட்டினான். இஃதறிந்த அமைச் சர்கள் அரசனை நோக்கி, "அரசர் பெருமானே! இவர் சிவபிரானுக்குப் பேரன்பொடு திருத்தொண்டு செய்பவர்; இத் தொண்டின் வன்மையினாலேயே இவ்வுலகில் இவர்க்கு எதிர்நிற்பார் எவருமிலர்" என்று கூறினார்கள். இதுகேட்ட அரசன், நம் படைத்தலைவர் சிவனடியாரென்ப தறியாது அஞ்சத் தக்க கொடிய போர்முனையில் அவரை விட்டிருந்தேனே! ஆ! கெட்டேன்! என்று அஞ்சி வருந்திக் கூறிப் பரஞ்சோதியாரை வணங்கி, "எம் பெருமானே! யான் செய்த இப்பிழையைப் பொறுத்தருள்க!" என வேண்டினான். அரசன், தம்மை வணங்குவது கண்ட பரஞ்சோதியார் தாமும் அவனை எதிர்வணங்கி, "அர சனே! யான் என் கடமைக்குரிய தொழிலைச் செய் தேன்; அரசனாற்றீங்கொன்றுமில்லை" என அவற்கு ஆறுதல் மொழிந்தார்.

அரசனே பரஞ்சோதியாரை இனித் தன் படைக் குத் தலைவராக வைத்திருந்தால் அவரது திருத்தொண்டு இனிது நடைபெறாதென எண்ணி, அப்போதே அவர்க்கு

வேண்டும் பொருட்குவைகளும் நில முதலிய ஏனை உரிமைகளுங்கொடுத்து, "நீர் இது காறும் இறைவனிடத்து வைத்துள்ள பேரன்பினிலையை யானறியாவாறு நடந்து வந்தீர்; இனி நீர் என் கருத்திற்கிசைந்து நீர் விரும்பியவாறே சிவபிராற்கும், அவனடியார்க்கும் நன்றாகத் திருத்தொண்டு செய்ம்மின்!" என நயன்று அவர்க்கு விடைகொடுத்தான். விடை கொண்ட பரஞ்சோதியார் மகிழ்வொடு திருச்செங்காட்டங்குடிக்கு வந்து, அங்குக் கணபதீச்சரத்தில் எழுந்தருளியிருக்குஞ் சிவபிரானைப் பேரன்பொடு வணங்கித் தம் திருத்தொண்டுகளை முன்போற் சிறிதுந் தவறாமல் முறைப்படி செய்து வருவாராயினர். இவர் தம் கருத்துக்கிசைந்து ஒழுகும் திருவெண்காட்டுநங்கை என்னுந் தம் அருமை மனைவியாரோடு இல்லறத்தைச் செவ்விதின் நடாத்தி வந்தார்.

நாடோறுஞ் சிவபிரான்றன் மெய்யடியார் எவர்க்கேனும் முன்னே திருவமுது ஊட்டியன்றித் தாம் உணவெடாத ஓர் ஒழுகலாற்றினை இவர் கடைப்பிடியாய்க் கொண்டார். இப்பெரியார், இறைவன் மெய்யடியார் எவரைக் காணினுஞ் சிறிதுஞ் செருக்கின்றி அவரைப் பணிந்து போற்றி அவர் முன் தம்மை மிகச் சிறியராய் எண்ணி நடந்து வந்தமையால் இவர்க்குச் சிறுத்தொண்டர் எனும் பெயர் வழங்கலாயிற்று. இவ்வாறு இவர் கணபதீச்சரத் தமர்ந்த இறைவனை உண்ணிறைந்த அன்பால் வழிபட்டும் அவனடியார்க்கு நாடொறுந் திருவமுது ஊட்டியும் வருநாளில், திருவெண்காட்டு நங்கையார்பால் அவர் தமக்குச் 'சீராள தேவர்' என்னுந் திருப்புதல்வர் பிறந்தார். சிறுத்தொண்டர் தமக்குப் பெறற்கரிய ஆண் மகவு பிறந்த பெருங்களிப்பாற் றம்சுற்றத்தார்க்குஞ் சிவனடியார்க்கும் வேண்டுவவெல்லாங் கொடுத்துத் தம்

மரபிற்குரிய சடங்குகள் செய்து பெருவிழா எடுத்தனர். சீராளர் தம் குழவிக்காலத்துக்குரிய அணிகலன்கள் அணியப் பெற்றுத் தவழ்ந்தும், தளர்நடை நடந்தும் மழலைச்சொற் பேசியும் தம் தாய் தந்தையர்க்கும் பிறர்க்கும் பெருமகிழ்வு அளித்தனர். இவ்வாறு சீராளருக்குக் குழவிக்காலங் கழிந்தபின், ஐந்தாவதாண்டிற் சிறுத்தொண்டர் அவரைப் பள்ளிக்கு விடுத்தனர்.

அந்நாளில், திருஞானசம்பந்தப் பெருமான் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தருளினர். அஃதறிந்த சிறுத்தொண்டர் பேராவலொடு சம்பந்தப் பெருமானை எதிர்கொண்டழைத்து வந்து, அவர்க்கு விருந்தோம்புவவெல்லாம் பேரன்பொடு செய்து அவரை வணங்கினர். திருஞானசம்பந்தப் பெருமானும் அவரூரிற் பலநாளிருந்து அவருடன் அளவளாவி, அந்நாயனர் சிவபிரானிடத்துக் கொண்டிருக்கும் அளவிலா அன்பையும், அவனடியார்க்குக் கனிந்த அன்பொடு செய்யும் பணியினருமையையும் பெரிதும் பாராட்டித் தாம் அவ் இறைவன்மேற் பாடிய திருப்பதிகத்தின் பத்துப் பாட்டுக்களிலும் அவரது திருப்பெயரை எடுத்துரைத்துச் சிறப்பித்தருளினர். அப்பதிகத்தின் முதற்பாட்டு வருமாறு:

“பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே.”

இவ்வாறு சிறுத்தொண்டர் சிவபிரானிடத்துப் பேரன்பு பூண்டு ஒழுகுநாளிற், சிவபிரான் இவரது பேரன்பின் திறனை உலகத்தவர் அறிந்து பயன் கொளல்வேண்டி, அதனை வெளிப்படுத்துதற்குத் திருவுளங்கொண்டார்.

கொண்டு ஒருநாள், வட நாட்டுத் துறவிகளின் கோலம் பூண்டு, நண்பகலிற் பசிமிக்கார்போல் "அடியவர்க்குச் சோறளிக்குஞ் சிறுத்தொண்டர் வீடு எங்குளது!" என்று கண்டாரைக் கேட்டுக்கொண்டே அவரது இல்லம் வந்து சேர்ந்தனர். இவரது வருகையைக் கண்ட **சந்தன நங்கை** என்னும் அவ்வீட்டுத் தோழியார் விரைந்து வந்து, "ஐயனே!" சிறுத்தொண்டர் அடியவர்களைத் தேடி அழைத்து வர வெளியே போயிருக்கின்றார்; அவர் வரும் வரை அடிகள் வீட்டினுள்ளே எழுந்தருள்க," என்றார். துறவியார், "அம்மே! பெண்களிருக்கு மிடங்களில் யாம் தனித்திரோம்; யாம் போய் வருவோம்" என்றார். இது கேட்டுத், துறவியார் போய்விடுவரோ என்ற அச்சத்தாற் சிறுத்தொண்டர் மனைவியார் விரைந்து போந்து, "பெரியீர்! என் கணவர் நாடோறும் அடியார்களுக்கு உணவளிப்பவர்; இன்று அடியார் எவரையுங் காணாமையால் அவர்களைத் தேடிச் சென்றார்; தங்கள் வருகையைக் காணிற் பெரிதும் மகிழ்வர்; விரைந்து இப்போதே வருவர்; ஆதலால் அடிகள் இங்கேயே இருந்தருளுமாறு வேண்டுகின்றேன்," என்ன, "யாம் வடநாட்டில் இருப்பது வழக்கம்; புகழ் மிக்க சிறுத்தொண்டரைக் காண இங்கு வந்துளோம்; அவரில்லாத போது இங்கிரோம்; அவர்வரின், யாம் கணபதீச்சரத்தில் ஆத்திமரத்தின் கீழிருப்போமென்று உரைப்பாயாக!" என்று துறவியார் அம்மையார்க்குக் கட்டளையிட்டுத், தாம் அங்கே ஆத்திமரத்தடியில் அமரச் சென்றனர். இப்பெரியார் சென்ற சிறிது நேரத்திற்குட் சிறுத்தொண்டர் அடியவர் எவரையுங் காணப்பெறாமையாற் பெருங் கவலைகொண்டு தமது மனைக்கண் மீண்டு வந்து சேர்ந்தனர்; அப்போது அவர் தந் தவத்திருமனைவியார், வடநாட்டு முனிவர் ஒருவர் வந்து சென்றமையும், அவர்

தாம் போய் இருப்பதாகக் குறிப்பிட்ட இடமுங் கூறினர். அச்செய்தி கேட்ட சிறுத்தொண்டர் பெருங்களிப்படைந்து மிக விரைந்து போய்க் கணபதீச்சரத்தில் ஆத்திமரத்தடியிலிருந்த அம்முனிவரது திருவடியில் வணங்கி வீழ்ந்தெழுந்து நின்றார். நின்றவரை நோக்கி அம்முனிவரர், "நீரோ சிறுத்தொண்டர்" என வினவ, அவர் "ஐயனே, நம்பிரான் அடியார்கள் ஒன்றுக்கும் பற்றாத அடியேனை அப்பெயராற் கூறுவர். சிறியேன், நாடோறும் அடியவர் எவரையேனும் உணவு செய்வித்தலை வழக்கமாய்க் கொண்டுளேன்; இன்றும் அடியவர்களைத் தேடிச் சென்றேன்; ஒருவரையுங் கண்டிலேன்; என் தவப்பயனாக இப்போது அடிகளைக் காணப்பெற்றேன்; அடிகள் சிறியேனது சிறு குடிலுக்கெழுந்தருளி உணவுகொள்ளுதற்குத் திருவுளம்பற்றியருள்க!" என்று தொழுது வேண்டினர். அவரது வேண்டுகோளைச் செவியேற்ற துறவியார், "தொண்டரே! நீர் செய்யும் பணிகேட்டு உவந்தனம், யாம் வடநாட்டிலிருந்து உம்மைக் காண வந்துளோம்; எமது விருப்பப்படி எமக்கு உணவு செய்துதர உம்மால் ஏலாது; அங்ஙனஞ் செய்தலும் அரிதேயாம்" என்றார். "தவமுடையீர்! யான் எண்ணிப் பாராமற் சொல்லேன்; உமது விருப்பத்தின்படி உணவு சமைக்கும் முறையினைத் தெரிவித்தருள்க; அதற்கேற்றவாறு மிக விரைவில் உணவமைக்குமாறு செய்வேன்; இறைவன்றன் உண்மையடியார்க்கு அவர் வேண்டுவன தேடித்தர முடியாமையும் உண்டோ!" என்று தொண்டர் கூறினர். "அன்பரே! ஆறு திங்களுக்கொருகால் ஒரு பசுவைக்கொன்று சமைத்து உண்பம்; அதற்குரிய நாளும் இன்று தான்; அது செய்தல் உமக்கரியதாகும்" என்றார். துறவியார், "எம்பெருமானே! யான் ஆனிரைகளையுடையேன்; ஆக

லின், அடிகளுக்கு விருப்பமான பசு இதுதானென்று அருளுவீராகில், விரைந்துபோய் அதனைச் சமைக்கச்செய்து காலந் தவறாமே வருவேன்" என்று தொண்டர் கூறினார். இப் பெரியாரது பேரன்பின் நிலையைக்கண்ட துறவியார், "தொண்டரே! யாம் உண்ணும் பசு மக்களில் உறுப்புக் குறைவில்லா அழகுடைய ஐந்தாண்டுள்ள மக்கட் பசு வாகும்; அன்பரே! இன்னும், உமது நெஞ்சம் நைந்து நோவத்தக்க தொன்றுஞ் சொல்கின்றேன்" என்றார். இது கேட்ட சிறுத்தொண்டர் மனங் கலங்காமல் மகிழ்ச்சி கொண்டு, "எதுவாயினும் அருள்க! அதன்படி செய்வேன்" என்றார். முனிவருந் துணிந்து, "அன்பரே! ஒரு குடிக்கு ஒரே மகனாயுள்ள சிறுவனைத் தாய் பிடிக்கத் தந்தை அரிந்து இருவரும் மனம் உவந்து சமைத்து வைத்த கறியினை யாம் சிறிதுந் தடையின்றி உண்பம்," என்றார். "இதுவும் எனக்கு அரிதன்று; அடிகள் உணவு கொள்ள இசைந்ததுதான் பெரிது," என்று கூறிப் பெருமகிழ்வொடு தம்மனைக்கு வந்தனர். இவரது வருகையைப் பேராவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த தம் மனைவியாரிடம் போந்து துறவியார் உணவுகொள்ள இசைந்த முறையினைக் கூறினார். அதற்கு அவ்வம்மையார், "ஒரு குடிக்கு ஒருவனாய்ப் பிறந்த ஐந்தாண்டுள்ள சிறுவனைப் பெறுவது எவ்வாறு?" என்று வினவச், சிறுத்தொண்டர், "எத்துணைப் பெரும்பொருள் தந்தாலும் எவரேனுந் தம் சிறுவரைத் தருவரோ! அப்படித்தரினுந், தாமே நேர் நின்று தம் புதல்வனை வாளால் அரியத் துணிவரோ! துணியார். ஆதலால், என்னை உய்விக்க நீ பெற்ற அருமை மகன் சீராளனை நாம் அழைப்போம்" என்றனர். அம்மையாருந் தங் கணவனார் கூறியது கேட்டு மனமகிழ்வு கொண்டு, "பள்ளிக்குப் போன நம் புதல்வனை விரைவில்

அழைத்து வாருங்கள்!'' என்றனர். உடனே சிறுத்தொண்டரும் பள்ளிக்குச் சென்றார். அவரைக் கண்டவுடனே சிறுவனும் ஆவலோடு ஓடிவந்து தன் தந்தையைத் தழுவிக்கொண்டனன்! அப்போது தந்தையார் தம் புதல்வனை யெடுத்துப் பிடர்மேல் வைத்தணைத்துக்கொண்டு வீட்டுக்கு மீண்டனர். எதிர்பார்த்துக் கொண்டிருந்த அம்மையாருந் தம் புதல்வனைக் கையில் வாங்கிக்கொண்டு போய் நீராட்டி அவனது குஞ்சியைச் சீவி முடித்து, முகந்துடைத்து அழகு படுத்திக் கொணர்ந்து தங்கணவர் கையிற் கொடுத்தனர். பின் இருவரும் ஒரு மறைவிடஞ் சென்று, அம்மையார் தம் புதல்வன் கால்கள் இரண்டனையுந் தமது மடியின் பக்கத்தே வைத்து இடுக்கிக் கொண்டு அவன் கைகள் இரண்டனையும் பிடித்துக் கொள்ளத் தந்தையார் அவனது கழுத்தைக் கூர்மையான கத்தியால் மகிழ்வுடன் அறுத்தார். அதன்பின் அம்மையார் பெருமகிழ்வொடு தாம் அறுத்த புதல்வனது தலையைக் கறி சமைக்கலாகா தென்று விலக்கி, அதனைச் சந்தன நங்கையார் கையிற் கொடுத்துப் போக்கிப், பின்னர் மற்றைய உறுப்புகளையெல்லாஞ் செவ்விதின் அரிந்து பதப்படுத்தி அடுப்பிலேற்றி அருஞ்சுவை உண்டாமாறு சமைத்தார். சமையல் முடிந்தவுடனே குறித்த நேரத்திற் சிறுத்தொண்டர் அம்முனிவர்பாற் சென்று அவரை அழைக்க, முனிவரரும் அவரது இல்லத்திற்கு எழுந்தருளினர். அங்கு அப்பெரியாரை மிக்க ஆவலோடு எதிர்பார்த்திருந்த அம்மையார் அத்துறவியார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அதன் பின், சிறுத்தொண்டர் அப்பெரியாரின் திருவடிகளை நீராட்டி மலர் தூவி வழிபாடு செய்தார். இதற்குள் அம்மையார் இருக்கை அமைத்து இலையிட்டுக் கறிகளை ஒழுங்குபெற வைத்தனர்; முனிவரர் அமர்ந்து

உணவு கொள்ளப்புகும் முன் "அம்மையே! யாம் குறித்த உறுப்புகளை யெல்லாங் கறி சமைத்தனையா?" எனக் கேட்பத், "தலைக்கறியை மட்டுந் திருவமுதுக்கு ஆகாதென விலக்கி ஏனைய உறுப்புகளைச் சமைத்துளேன்" என்று அம்மையார் கூறினர். "அதுவுங்கூட உண்பது வழக்கம்" என்றனர் முனிவர். இது கேட்ட அம்மையார், "ஐயகோ! என் செய்தேன்!" என்று வருந்தியபோது, அவர் தந் தோழியராகிய சந்தன நங்கை என்பார் ஓடிவந்து, "அம்மே! வருந்தற்க! ஒருகால் இப் பெரியார் தலைக்கறியும் உண்பர் என்றெண்ணி அதனையுஞ் சமைத்துளேன்" என்றார். உடனே அம்மையார் அதனை முகமலர்ந்து வாங்கிப் படைக்க, அதன்பின் முனிவரர் "யாம் தனித்திருந்து உண்ணமாட்டோம்; அடியவர் எவரையேனுங் கொணர்க!" என்னச் சிறுத்தொண்டர் வெளியே போய்த் தேடியும் அடியவர் எவரையுங் காணாது திரும்பிவந்து, "பெருமானே! அடியார் எவரையுங் காணப்பெற்றிலேன். உலகத்தில் திருநீறிடுவாரைக் கண்டு, யானும் அவர்போற் றிருநீறு பூசுவதுண்டு" எனப் பணிந்துரைக்க, முனிவர் பிரானும் "நும்மைப்போல் நீறிடுந்தொண்டர் வேறு உளரோ? நீரே எம்முடனிருந்து உண்பீராக" என்று முனிவரர் கட்டளையிட, அம்மையார் தம் கணவர்க்கும் ஒரு கலம் படைத்து உணவுங்கறியு மிட்டார். அப்பெரியாரை உண்பித்தற் பொருட்டுச் சிறுத்தொண்டர் தாம் முன்னே உண்ணத் துவங்கினர். அப்போது முனிவரர் அவரைத் தடுத்து, "ஆறு திங்கள் கழித்து ஒருமுறை உண்ணும் யாம் உண்பதன்முன் நாடோறும் உண்கின்ற நீர் விரைந்து உண்ணப்படுமோ? நுமக்கு மகன் உளனாயின் அவனை இங்கு அழையு" மென்றார். அப்போது அடியவர், "அவன் இப்போது உதவான்" என்றனர். "அவன் வந்தாலன்றி

யாம் உண்ணமாட்டோம்; அவனை வெளியே சென்று அழையுமின்! அவன் வருவான்,'' என்று முனிவரர் மொழிந்தார். சிறுத்தொண்டர். "ஈதென்னை? இப் பெரியார் உணவெடுக்க இத்தனை இடர்ப்பாடு!'' என்று மனங்கலங்கித் தம் மனைவியாரொடு வெளியே போய்ச் "சீராளா! வருக. நம்பிரான் அடியார் உடனிருந்துண்ண நின்னை அழைக்கின்றார்!'' எனக் கூவியழைக்கச், சீராளன் பள்ளியினின்றும் வருவான்போல் விரைந்தோடி வந்து தன் பெற்றோரைத் தழுவிக்கொண்டான். பெற்றோரும் மகிழ்வுடன் அவனை அழைத்துக்கொண்டு உட்சென்றார் கள். அப்போது அங்கிருந்த துறவியார் திடீரென மறையப் பரிகலத்திற் படைத்த கறியமுதும் உடன் மறைய, அவ் விருவரும் அதனால் உளந்திகைத்துக் கலங்கி அஞ்சினர். உடனே, இறைவன் அம்மையொடுகூடிய திருவுருவம் அவர் தங்கட்புலனெதிரே தோன்றிச், சிறுத்தொண்டர்க்கும் அவர் தங் காதன்மனைவியார் மகனர் தோழியார்க்கும் பெறற்கரும்பேறு நல்கியது.

---

# சிறுத்தொண்டர் வரலாற்றின் ஆராய்ச்சி

"வாளால் மகவரிந்து ஊட்டவல்லே னல்லன்"

சிறுத்தொண்டர்போல் வாளாற் பிள்ளையை அறுத்துக் கறிசமைத்துச் சிவனடியார்க்கு உணவாகக் கொடுக்கும் வன்மையில்லாதவன் யான் என்றார் பட்டினத்தடிகள்.

(க) சிறுத்தொண்டர் உண்மையிற் பெரியராஞல், சிவனடியாரொருவர் வேண்டினர் என்ற அளவானே தம் அருமைக் குழவியை அன்பும் இரக்கமுமின்றி வாளால் அரிந்து கறிசமைத்துக் கொடுத்தல் அவர்க்கு ஏற்குமோ?

(உ) உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமு மின்றிக் கொலைத் தொழிலைப் புரிவார் இறைவனருளைப் பெறுதல் கூடுமோ? என வினவப்படுமன்றே. அவ்வினுக்களை ஆராய்ந்து, அவற்றிற்கு விடையாகக் கூறத்தகுவனவற்றை இங்கே கூறலுறுகின்றேன்.

சிறுத்தொண்டர் அறநூல்கள் விலக்கிய தீய இயல்புந் தீயநடையும் இல்லாப் புனிதராவர். எல்லாரிடத்தும் பணிவும் அன்பும் பூண்டு ஒழுகும் இயல்பினர்; பசித்தோர் துன்பங்கண்டு உடனே அது தீர்க்கும் பேரிரக்க முடைபவர். அடியாரைப் பணிந்து சிறியார்போல் நடந்து வந்தமையினுலேயே இவர் சிறுத்தொண்டரென் றழைக்கப் பட்டனர். சிவபிரான் துறவியார் வடிவம் பூண்டு இவர்பால் வரும்போதும், "பசித்துவருந் தொண்டர்க்கு உணவளிக்குஞ் சிறுத்தொண்டர் வீடு எங்குளது!" என்று கண்டாரைக் கேட்டுக்கொண்டே வந்தனர் என்பதனுல் இவர் அடியார்க்கு உணவளிக்கும் பான்மை புலனுகும். உயிர்கள்பால் அன்பும் இரக்கமு மில்லாதார் பசித்தோர்க்கு

உணவளித்தலைக் கண்டதுண்டோ ? எந்நாளுந் தாம் உண்ப தன் முன் சிவனடியார் எவர்க்கேனும் உணவிடும் பேரிரக்கமும் பேரன்புமுடைய சிறுத்தொண்டரைப் பெரியாரென்றலில் ஐயம் உளதாமோ.

இப்பெரியாரது உள்ளத்தெழுந்த அன்பும் இரக்கமும் இருதிறமாக நிகழ்வவாயின; ஒன்று உலக நிகழ்ச்சியைச் சிறிது பற்றியது; மற்றொன்று இறைவன்றிருவருளைப் பெரிது பற்றியது. "சிவனடியாரைச் சிவனெனப் பேணுங்'' தகைமை இவர்பால் மிக்கு நின்றது. எதனாலெனின், இவர் தாம் இறைவனிடத்து வைத்த பேரன்பின் பெருக்கினாலேயாம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்ற திருக்குறள் மொழிப்படி இவர் இறைவனது அருட்பொருளையே பெரிதாக நினைந்து அதனைப் பெறுவதிலேயே தமது நினைவை ஈடுபடுத்தி யிருந்தமையால், இவர் தமக்கிருந்த பொருட் பொருளையெல்லாம் ஒருபொருளாக நினையாது, அவை யெல்லாவற்றையுஞ் சிவனடியார்க்கே பயன் படுத்துவதில் முனைந்து நின்றார். தாம் பல்லாண்டுகள் தவங்கிடந்து பெற்ற தம் அருமைக் குழவியையுஞ் சிவனடியார்க்கு உணவாக அளிக்கக் கிடைத்ததனை ஒரு பெறலரும்பேறாக நினைந்து இவர் உளம் மகிழ்ந்தனரென்றால், இவர் தாம் இறைவனிடத்துக்கொண்ட அன்புக்குமுன், இவர் தம்மவர்பாற் கொண்ட அன்பும் தமது பொருளின் பால் வைத்த பற்றுஞ் சிறிதுந் தலையெடா தொழிந்தமை சொல்லுதலும் வேண்டுமோ? மேலும், "**நீயலாற் பிறிது மற்றின்மை**'' "**நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே**'' என்று **மணிமொழிப்பெருமான்** அருளிச் செய்த

படி, எல்லாம் இறைவனுக்கே உரிமையாவன வன்றி, இவர் தமக்குரிமையாவ தொன்றுங் கொண்டிலாமையாலும், இறைவன் திருவுள்ளப்படி தம்பால் நிகழுஞ் செயல்கள் நல்லவாயினுந் தீயவாயினுந் தாம் அவை தமக்குப் பொறுப்பாளி யாகாமை உணர்ந்தமையாலும், அடியார் விருப்பின் வழி நின்று அவர் விரும்பிக் கேட்பனவற்றை நல்லவோ தீயவோவென ஆராயாமலே இந்நாயனார் அவர் கேட்டபடியே செய்து தொண்டுபுரிவதிற் றலைநின்றார். "பதார்த்தங்கள் பாரார் பரமே பார்த்திருப்பர்" என்ற ஆன்றோர் உரைப்படி இறைவனிடத்தே பேரன்பு கொண்டவர்கள் உலகியன் முறையிற் பெரிதும் மாறுபடுவரென்பது இதனால் விளங்கற் பாலதேயாம்.

இவர் உலகியல் முறையின் நினைவு செல்லாதவராயின், ஆகுக; தம் பிள்ளையை அறுத்துக் கொடுத்தலாகிய கொடிய வல்வினையை இறைவன் பொருட்டு இவர் ஏன் செய்தார்? வேறு மென்மையான வழியில் இறைவனை வழிபட்டு அவனை அடைதல் ஆகாதோ வெனிற் கூறுதும்.

எல்லாம் வல்ல இறைவனுக்கு அடியார்கள் செய்யும் பணிகள் மெல்வினை, வல்வினை என இரண்டாகும். அவ்விரண்டனுள்,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடி
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

என்று திருநாவுக்கரசு அடிகள் அருளியபடி, அடியார்கள் தம் உளத்தை ஒருவழிப்படுத்தி இறைவனை உருகி நினைத்தற்கான மெல்வினைகள்: அப்பெருமானது கோயிலிற் றிருவலகிடல், திருவிளக்கேற்றல், பூமாலை தொடுத்தல், பூந்தோட்டம் வைத்தல், இறைவனடியார்களை வழிபடல், அவர்க்கு வேண்டுவன கொடுத்தல் ஆகிய இத்திருப்பணிகளைச் செய்தலேயாகும். இம்மென்பணிகளை இறைவற்குப் பேரன்புடன் செய்து தம் இருவினை அறப்பெற்று அவனருள் கூடிய அடியார் பலர் உளர்.

இனி வல்வினைகள் என்பன மக்களாற் செய்யமுடியாத கடும் பணிகளாகும். அடியார்கள் இவற்றாற் றம் அயராப் பேரன்பைச் சிவபிராற்குச் செலுத்தி அவனுக் காளாகின்றனர். இவ்வாறு கடும்பணி செய்து இறைவனருள் கூடப்பெற்ற அடியார் சிலருட் சிறுத்தொண்டரும் ஒருவர். இறைவனடியாரை வழிபடல், அவர்க்கு வேண்டுவன கொடுத்தல் முதலான மெல்வினைகளை இந்நாயனார் நெடுநாட் செய்து வந்தனராயினும், அவற்றால் இவர் இறைவனருள் கிடைக்கப் பெற்றிலர். மற்றுக் கடும்பணி செய்த பின்னரே அவனருள் கூடப்பெற்றனர்.

அற்றேல், இவர் பேரன்பாற் செய்து போந்த மென்பணியினை ஏற்று இறைவன் ஏன் இவர்க்கு அருள் புரிந்திலன்? தான் பெற்ற பிள்ளையையே அறுத்துக் கறி சமைக்கும் வகையில் தன் அடியவனைக் கொணர்ந்து விட்டது இறைவனது வரம்பில் இரக்கத்திற்கு இழுக்காகாதோ? வெனின், இழுக்காகாது.

தன் அடியார்கள் தாந்தாம் முற்பிறவி பிற்பிறவிகளிற் செய்து போந்த வினைகளுக்குத் தக்கவாறே இறைவன் அவரவர்களை ஆட்கொள்கின்றான். ஞானசம்பந்தப் பெரு

மானைப் பால் கொடுத்தும், அப்பரடிகளைச் சூலைநோய் தந்தும் ஆட்கொண்டது அவரவர் வினைக்குத் தக்கவாறாய் அமைந்தது. இம்முறையினைக் "கண்ணப்பர் ஆராய்ச்சியில்" இயன்றமட்டும் விரித்து எழுதியிருக்கின்றேன்.

சிறுத்தொண்டர் முதலிற் றம் அரசன்பாற் படைத் தலைவரா யமர்ந்து, பல போர்க்களங்களில் அளவிலா உயிர்களை வாளால் வெட்டி வீழ்த்தினவராவர். அக்கொலைத் தீவினை, இவர் தாம் பெற்ற அருமைக் குழவியை வாளால் அறுத்தபின்னன்றி ஒழியாமையின் இறைவன் அவரை அவ்வாறு செய்ய விடுத்தனனென்க. கொலைத் தொழிலிற் பழகாத ஒரடியவரைப் பிள்ளைக்கறி கேட்டிருந்தால் அவர் அது செய்தற்கு இசைந்திரா ரென்பது திண்ணம். ஆதலால் இறைவன் சிறுத்தொண்டரது மனப்பான்மையை நன்கு கண்டே அது கேட்டனன். இறைவன் பணித்ததை உளமகிழ்ந்தேற்று நாயனர் தம் மகவை வாளால் அரியும் போதேனும் இறைவன் அதனைத் தடுத்தனனா? இல்லையே. இதனாலும், தன் அடியவன் படையிற் செய்து போந்த கொலைத்தீவினையின் பயனை அவனே ஒழிக்கவேண்டுமென்பதே இறைவன் திருவுளக் கருத்தாதல் பெறப்படுகின்றது. சிறுத்தொண்டரைப்போல் தம் புதல்வனை இறைவற்கு அறுத்துக் கொடுக்கத் துணிந்த மேனாட்டுப் பெரியாரொருவரது வரலாற்றை எடுத்துக்காட்டும் முகத்தால் இதனை விளக்குவாம்.

கிறித்துவ மறையாகிய விவிலிய நூலின் முதற்பகுதியிற் சொல்லப்பட்ட ஆபிரகாம் எனப் பெயரிய பெரியார் இறைவனிடத்து அளவிலாப் பேரன்புடையராயிருந்தனர். ஒருகால் இறைவன் இவரை விளித்து, "அன்பனே! நீ நின் ஒரே புதல்வனை யான் குறிப்பிடும் மலைமுகட்டின்மேற்

கொணர்ந்து எனக் கிரையாகக் கொடுப்பாயாக!" என்று பணித்தனன். அக்கட்டளைக்கு அவர் இணங்கித், தம் புதல்வன் தலைமேல் விறகை ஏற்றித் தாம் தீயும் அரிவாளும் ஏந்தி, இறைவனுற் குறிப்பிடப்பட்ட ஒரு மலைக்குவட்டின் மேல் அவனுடன் சென்றனர். அங்ஙனஞ் செல்லுங்கால் ஆபிரகாம் மகனுகிய ஈசாக்கு தன் றந்தையைப் பார்த்துத், "தந்தையே! விறகுந் தீயும் உள்ளன; ஆட்டுக்குட்டி எங்கே?" என்று கேட்டான். அதற்கவர், "மகனே! கடவுள் தமக்கு வேண்டிய ஆட்டுக்குட்டியைத் தருவர்" என மொழிந்து போய், அம்மலை யுச்சியில் ஒரு வேள்வி மேடை யெழுப்பி, அதன்மேல் விறகுகளை அடுக்கி, அதன் பின், தம் மகனுடைய கை கால்களைப் பிணித்து, அவனை யெடுத்து அவ்விறகின்மேற் கிடத்தி, அவனை வெட்டு தற்குத் தமது கையில் அரிவாளை யெடுத்தனர். அப்போது இறைவன், "அன்பனே! அவனை வெட்டாதே! வெட்டாதே!!" என்று கூறித் தடுத்து அவரை ஆட்கொண்டனன் சிறுத்தொண்டர் தம்மகனை அரியும்போது தடை செய்யாத இறைவன், ஆபிரகாம் தம் மகனைத் துணித்தற்கு வாளை ஓங்கியபோது மட்டும் அதனைத் தடைசெய்தது என்னை? எனின், ஆபிரகாம் தமது வாழ்நாளில் ஏதுங் கொடுவினை செய்ததில்லாமையினுல் இறைவன் அவரை அங்ஙனந் தடுத்தாட்கொண்டனன்.

"கொன்றனை யனைத்தும் அனைத்தும் நினைக்கொன்றன" என்னும் மூதுரைப்படி உயிர்க்கொலைசெய்தவர் தாமுங் கட்டாயங் கொலை செய்யப்படுவர்; அது செய்யாதவர் அதற்கஞ்சி நெஞ்சம் நெக்குருகினவர், அதனைத் தடை செய்தவர் ஒருகாலும் ஒருவாற்றுலும் ஒன்றுலும் ஒருவராலுங் கொலையுணர். உயிர்க்கொலையுளெல்லாம் ஆறறிவுடைய மக்கட் கொலை மிகக்கொடியதும் இறை

வனால் மன்னிக்கப்படாததும் ஆகும். சிறுத்தொண்டர் படைத்தலைவராயிருந்து மக்கள் பலர் கொலையுண்ணுதற்கு ஏதுவாயிருந்ததனாலேயே அவர் தம் மகனைக் கொலைசெய்யும்படி தண்டப்பட்டாரென்க.

இன்னும், சிறுத்தொண்டர் தாம் ஓவாது பழகுந் தம் அருமைச் சுற்றத்தவரிடத்தும், அரிதிற் பெற்ற தம் குழந்தையிடத்தும் அன்பும் பற்றுஞ் சிறிதுமில்லாமல், தாம் பழகாத காணாத கடவுளிடத்திற் பேரன்பு வைத்து அவ் அன்பின் பொருட்டாகத் தாம் பழகிய பொருள்களில் வைத்த பற்றை அறவே ஒழித்தாரென்பது யாங்ஙனம் பொருந்தும்? எனின், காணப்படாத பொருள்களிடத்தில் அன்பு வைத்தல் எவராலும் இயலாததேயாம். உலகத்துப் பொருள்களுள்ளும் மக்கள் கட்புலனுக்கு நேராக விளங்குவனவும், கட்புலனுக்கு விளங்காது மறைந்து கிடப்பனவுமான இருதிறப் பொருள்கள் இருக்கின்றனவே, நாம் மிகச் சிறப்பாக அணியும் பொன்னும் மணியும் நம் கண்ணுக்கெதிரே எளிதாக ஆங்காங்குச் சிதர்ந்து விளங்கிக்கிடக்கின்றனவா? இல்லையே, அவை நம் கைக்கு எட்டுவதன்முன் மண்ணிலும் மலைகளிலும் அல்லவோ பொதிந்து மறைந்து கிடக்கின்றன.

மேலும், மக்களல்லாத கீழ்ப்பிறவிகளிலுள்ள சிற்றுயிர்களுக்கு மறைந்த பொருள்களைக் காணல் முடியாது. மக்கட் பிறவியில் வந்த உயிர்களுக்கு மட்டுமே முயன்றால் மறைந்தபொருள்களைக் காணக்கூடிய அறிவும் ஆற்றலுமிருக்கின்றன. வான்வெளியில் இயங்கும் மின்னொளி, நீராவி முதலான நுண்ணிய அரிய பொருள்களெல்லாம் பல்லாயிர ஆண்டுகளாக மக்கள் கட்புலனுக்குத் தெரியாமலே மறைந்து கிடந்தன. அஞ்ஞான்று இவைகளைக்

கண்டு பிடிக்க முயன்றாரும் இலராயினர். ஆனால் இந் நாளிலோ மறைந்து கிடந்த அம்மின்னொளி நீராவி முதலிய நுண்பொருள்களைக் கண்டறிவான் புகுந்த அறிஞர்கள் அல்லும் பகலும் வேறு நினைவும் ஊணும் உறக்கமுமின்றி அந்நுண்பொருள் ஆராய்ச்சியிற் புகுந்து அவை தம்மைப் பெரும்பாடுபட்டுக் கண்டறிந்தார்கள். அங்ஙனங் கண் டறிந்தவர்கள் அவைகளை உடனே நேரே எளிதிற் கண்ட றிந்தனரா? இல்லை, இல்லை. அந்நுண் பொருள்களுக்குத் தொடர்பாயுள்ள மற்றைப் பொருள்களைப் பல்லாண்டுகள் நுணுகி ஆராய்ந்து, தம் நினைவை யெல்லாம் அவ்வாராய்ச் சியில் எந்நேரமும் பதித்தவர்களாயிருந்து அவை தம்மைக் கண்டறிந்தனர். இத்தகைய நுண்பொருளாராய்ச்சியில் தம் வாழ்நாளை முழுதும் ஒப்படைத்த எடிசன் முதலான அறிஞர்கள் அப்பொருள்களைக் கண்டறியுங் காலங்களில் எத்தனையோ நாட்கள் ஊணும் உறக்கமும் உலகநினைவு மின்றி யிருந்தார்களாம். அந்நேரங்களில் அவர்கள் தம் வீட்டில் நேர்ந்த துன்பநிகழ்ச்சிகளையும் உன்னியாதிருந்த துண்டு. அதற்காக அவர்களைக் குற்றஞ் சொல்லல் நன் றாகுமா? இவ்வாறெல்லாம் பாடுபட்டுக் கட்புலனாகா நுண் பொருள்களைக் கட்புலனாகும்படி செய்தோ அல்லது அவற்றை நமது வாழ்க்கைக்குப் பயன்படுமாறு வகுத்தோ அவர்கள் நன்றாற்றிய பின்னரன்றோ, நாம் அவர்களைப் பெரிது கொண்டாடிப் பெருங்களிப்பு எய்துகின்றோம். ஆதலாற், கட்புலனாகாப் பொருளில் அறிவையும் அன்பை யுஞ் செலுத்தல் இயலாதென்றல் ஒவ்வாது.

இன்னுமொரு நிகழ்ச்சி கூறுவாம். இருப்புக் கலங் களுக்கு மேற்பூசும் மினுக்குப்பூச்சு (enamel)க் கண்டு பிடித்த தாளாளர் முதலிற் பெருஞ் செல்வராயிருந்தவர். பின்னர் மினுக்குப்பூச்சுக் கண்டு பிடிக்கும் முயற்சியில்

தலையிட்டார். தலையிட்டு அப்பெரு முயற்சியிற் றம் பெரும் பொருளையெல்லாஞ் செலவழித்து விட்டார். வீட்டிலிருந்த தட்டுமுட்டுகளெல்லாவற்றையுங்கூட விற்று விட்டார். இவ்வளவு செலவழித்தும் அவர் தாம் கண்டு பிடிக்க முனைந்ததைக் கண்டுபிடிக்கக் கூடவில்லை; தம தில்லத்தில் வறுமை நோய் மிகுதிப்படவே, உணவுக்கு வேண்டிய பொருளும் இல்லாதாயிற்று. ஒருநாள் இவர் தம் மனைவி மக்களெல்லாரும் உணவின்றி வருந்திக்கொண் டிருக்கையில், அவர் மனைவியார், விற்று உணவுப் பொருள் வாங்க வீட்டில் ஒரு பொருளுமில்லாமைகண்டு, தம்மண வினை அடையாளமாகிய கணையாழியைக் கழற்றித் தங்கண வனர் கையிற் கொடுத்துப், "பிள்ளைகளெல்லாரும் பசியால் வருந்தி அழுகின்றனர். வேறு பொருளேதுமில்லை. எஞ்சி யுள்ள இக்கணையாழியை விற்றாயினும் உடனே உணவுப் பொருள் வாங்கி வாருங்கள்" என்று இரந்து கூறினாள். அத் துரைமகனாருந் தம் மனைவி மக்கள் படுதுயர்கண்டு உருகிய உள்ளமுடையராய்க் கணையாழியை எடுத்துக் கொண்டு தெருவழியே போம்போது, ஆங்கோரிடத்திற் றாம் பல்லாண்டுகளாகக் கண்டறிய முயன்ற மினுக்குப் பூச்சுக்குரிய முதற் பொருள்களைக் கண்டார். கண்டவுடன் றாமிருக்கும் வறிய நிலையினையும் மறந்தார்; மனைவி மக்க ளின் கொடும் பசித்துன்பத்தையும் மறந்தார். கண்ட அம்முதற் பொருளையன்றி வேறு நினைக்கமாட்டாராய் உடனே அக்கணையாழியை விற்று, விற்ற பொருள் கொண்டு அவை தம்மை வாங்கிக்கொண்டு தம் தொழிற் சாலைக்குப் போய்த் தாம் பலகாலமாக முயன்று முடிக் கக்கருதிய அரும் மினுக்குப்பூச்சு அன்றைக்குத்தான் தாம் பூசிச் சூளையில் வைத்த கலங்களில் மினு மினு வென்று ஒளிரக் கண்டார். பேராவலோடும் பேராராய்ச்சி

யோடுந் தாம் எதிர்பார்த்திருந்த அப் புதுமையினைக் கண்டதும், இவர் எல்லாம்வல்ல கடவுளைநேரே கண்டாற் போற் களித்துப் பேரின்பக் கூத்தாடினர். உடனே மினு மினுவென மிளிரும் அக்கலங்களைக் கையில் எடுத்துக் கொண்டு தம் வீட்டிற்குத் திரும்பினர். அங்கே பசியாற் களைத்துக் கிடக்கும் தம் மனைவி மக்களிடம் அப்புதுக் கலங்களைக் காட்டிக், "கண்டுபிடித்து விட்டே"னென்று சொல்லிப் பெருங்களிப்பொடு கூத்தாடினார்; இவர் கூத் தினைக் கண்ட இவர் தம் மனைவியார் பெரிதும் மனம் புழுங்கினவராய், "ஈதென்னை? நம் அருமைப் பிள்ளைகளின் பசித்துன்பத்தை நீக்கும் பொருட்டு மிச்சமாயிருந்த நமது திருமணக் கணையாழியையுங் கொடுத்தேனே! அதனையும் விற்றுப்பயன்படாத வேறு பொருளை வாங்கி வந்தீர்களே! இதனாற் பிள்ளைகளுக்கென்ன பயன்" எனக்கூறி வருந் தினாள். மனைவி இது கூறின் பிறகு, அவர் "பிள்ளைகள் பட்டினியாகவா கிடக்கின்றனர்!" என்றுணர்ந்து, தாங் கண்டறிந்து செய்த அவ்வரிய மினுக்குப் பூச்சுக் கலங் களைக் கொண்டுபோய்க் கடையில் விற்றுப்பெரும் பொருள் பெற்றார். வறுமையும் ஒழிந்தது.

உலகத்துப் பருப்பொருள்களினூடே மறைந்து கிடக்கும் நுண்பொருள்களைக் கண்டறியும் அறிஞர்கள் அத்தொழிலிலேயே பதிந்த உள்ளமும் உணர்வும் உடையராய்ச், சிலநேரங்களில் உலகத்தையும், மனைவி மக்களையும் மறந்து விடுகின்றன ரென்றால், உலகத்துப் பொருள்களுக்கெல்லாம் மேற்பட்டதாய்ப் பேரின்ப வடி வாய் விளங்கும் இறைவனுண்மையினை யறிந்து அவனது பேரருட் பேரின்பத்திற் றிளைக்குங் காலங்கிட்டும்போது அவனடியார்க்கு இவ்வுலகப்பற்று ஒழியுமென்பதனை நாம் சொல்லுதலும் வேண்டுமோ! ஆதலால் இறைவனது அருட்

பேரின்பத்தினைக் கண்ட சிறுத்தொண்டர்க்குத் தம் புதல்வன்மேற் சென்ற பற்றுத் தம்மை அறியாமலே ஒழிந்து போயது வாய்வதேயாம்.

"எட்டாத பேரின்பம் என்னை விழுங்கியிருக்கின்றதே" என்று பட்டினத்தடிகள் அருளியவாறு மக்களுக்கு எளிதிலே கிட்டுவதல்லாத அழிவில் பேரின்பமானது சிறுத்தொண்டரை விழுங்கியிருக்கும்போது, அவரது மெய்யுணர்வு உலகியற் பொருள்களையும் உயிர்களையும் ஒரு பொருட்டாகக் கொள்ளுமோ என முடிக்க.

---

# திருநீலகண்டர் வரலாறு

ஓம்

# திருநீலகண்டர் வரலாறு

முற்காலத்திலே 'தில்லை' யென்றும், பிற்காலத்திலே 'சிதம்பரம்' என்றும் வழங்கப்படுவதாகிய சிறந்த நகர் ஒன்று சோழநாட்டின்கண்ணே விளங்கா நிற்கின்றது. உலகங்களுள்ளும் உயிர்களுள்ளும் ஊடுருவி நின்று அவைகளை அசைவித்தும் அறிவித்தும் வருகின்ற இறைவனது இயக்கமாகிய திருக்கூத்தை நினைவூட்டும் பொருட்டு, அவ்விறைவனை ஆடும் நிலையில் வைத்துத் தமிழ் மக்கள் பண்டு தொட்டு வழிபட்டுவரும் அம்பலக்கூத்தன் திருக்கோயில் இந்நகருக்கு நெஞ்சத்தாமரையாய் நிலவுகின்றது. இதன் கண் எழுந்தருளியிருக்கும் அம்பலவாணரை மக்கள் நெஞ்சம் நெக்குருகி வழிபடுவது வழக்கம். மெய்யடியார் பலர் இவ் அம்பலவாணரைப் பேரன்போடு வணங்கிப் பேரருள் பெற்றிருக்கின்றனர். அவ்வடியவர்களில் ஒருவரது வரலாற்றையும் அதன்கண் உள்ள நுட்பத்தையும் ஈண்டெழுதுகின்றேன்.

இவ்வாறு முழுமுதற் கடவுள் வழிபாடு சிறந்து திகழுந் தில்லையம்பதியிற், குயவர் குலத்திலே பெரியார் ஒருவர் தோன்றினார். இவர் அம்பலவாணரிடத்து வைத்த பேரன்பும், மனத்திட்பம், சொன்ன சொற்றவறாமை முதலான நல்லியற்கைகளும் அமையப்பெற்றவர். உயர்ந்த இயல்புள்ள தம் அருமை மனைவியாரோடு இவர் தமது இல்லற வாழ்க்கையைச் சீரிய முறையில் நடாத்திவந்தார்; தாம் பெறத்தக்க விழுமிய செல்வம் இறைவனருள்

ஒன்றே யல்லாமல் வெறும் பொருட்குவியல் அன்றெனத் தெளிந்திருந்தார். ஆனாலுந், தமது வாழ்க்கையின் பொருட்டும், அடியார்க்கு உதவி செய்யும் பொருட்டும் இவர் தமது மரபிற்குரிய மட்கலம் வனையுந் தொழிலினை மேற்கொண்டார்; இன்றியமையா வாழ்க்கைச் செலவுக்கு மட்டுஞ் சிறிது நேரம் மட்கலங்கள் விற்றுப் பொருள் தேடி, மற்றை நேரமெல்லாந் திருவோடுகள் செய்வதிலும் அவற்றை அடியார்க்கு வழங்குவதிலும் பயன்படுத்தி வந்தார்.

இப்பெரியார் இவ்வாறு சிறந்த நெறியில் வாழ்ந்து வந்தனராயினும் இவர் தமது கட்டிளமைப் பருவத்தின் கொழுமையினாலோ, அன்றி ஊழ்வினைப் பயத்தாலோ, அன்றித் தாம் குறித்த உள்ளக் குறிப்பினாலோ, அன்றித் தமக்குந் தம் மனைவியார்க்குங் காதலன்பு இன்மையாலோ, அன்றி இவையெல்லாம் ஒன்றாய்க் கூடிய ஏதுவினாலோ சிற்றின்ப நுகர்ச்சியிற் பெரிது விழைவு கொண்டார்; ஆனாலுஞ், சிவபிரானிடத்து அவர் பேரன்பினை அவரது சிற்றின்ப வேட்கை சிறிதுஞ் சிதைக்க வல்லதாயில்லை.

சிவபிரான் ஒரு காலத்தே திருப்பாற் கடலில் எழுந்த கொடிய நஞ்சை உலகுய்யும் பொருட்டுத் தம் மிடற்றகத் தடக்கித் தேவரைக் காத்த பேரருட்டிறத்தை ஓவாது நினைவு கூர்தற் பொருட்டு அவர் எந்நேரமுந் '**திருநீலகண்ட**' மென்னுஞ் சொற்றொடரைக் கூறிக்கொண்டிருப்பவரானார். ஆனது பற்றியே இவர்க்குத் திருநீலகண்ட ரென்னும் பெயர் வழங்கலாயிற்று.

இவர் தம் மனைவியார் சிறந்த அழகுங் கற்பொழுக்கமும் அமையப் பெற்றவர். ஒரு நாள் திருநீலகண்டர் தம் அருமை மனைவியாரைப் பிரிந்துபோய் அவ்வூரி

லுள்ள ஒரு பரத்தையிடஞ் சென்று மகிழ்ந்திருந்து வீட்டுக்குத் திரும்ப வந்தனர். வந்தவரது செயலறிந்த மனைவியார் மனத்திற் பெருஞ்சீற்றங் கொண்டு தங்கண வர்க்கு வேண்டுவன வெல்லாம் முறைப்படி செய்தும், அவரொடு கூடியிருத்தற்கு மட்டும் இசையாரானார். இது கண்ட **திருநீலகண்டர்** அவரிடஞ்சென்று அவரது சினந்தீர எவ்வளவோ இன்சொற் கூறிப் பின் அவரைத் தீண்டச் சென்றனர். உடனே அம்மையார் 'நீர் எம்மைத் தீண்டு வீராயின் திருநீலகண்டம்,' என்று சிவபிரான்மீது ஆணை யிட்டு அவரைத் தடுத்தனர். இது கேட்ட நீலகண்டர் திடுக்கிட்டு, அயலவர்போல் மனைவியாரை அகன்று நின்று, "ஈதென்னை! இவள் எல்லாம் வல்ல எம்பிரான்மீது 'நீலகண்டம்' என்றாணையிட்டனள். 'எம்மை' என்று பன்மையிற் கூறினமையின், இவளையேயன்றி ஏனை மாதர் எவரையுங்கூட என் மனத்தினாலுந் தொடுதற்கு நினை யேன்!" என்று உறுதி கொண்டார்.

ஐயகோ! அந்நாளிலிருந்து வனப்புமிக்க தம் இள மைக் காலத்தில் நீலகண்டரும் அவர் மனைவியாரும் உலக இன்பத்தை அறவே துறந்து, தாங்கொண்ட இத்துறவு நிலையை உலகத்தார் அறியாவாறு தம் இல்லினின்றே நடாத்திவந்தனர்.

பேரழகுவாய்ந்த கட்டிளமைக் காலத்தினராகிய நீலகண்டரும் அவர் மனைவியாருந் திருவருள் ஆணையி னின்றுந் தவறாது பல ஆண்டுகள் கழித்தனர். இரு வர்க்குந் தளர்வு மிக்க முதுமைக் காலம் வந்தடைந்தது. இவர்கள் ஆண்டில் முதிர்ந்ததுபோற் சிவபிரானிடத்து வைத்த பேரன்பிலும் அளவில்லாமல் முதிர்ந்து வருவா ராயினர்.

இவ்வாறிருக்கையில் எல்லாம் வல்ல சிவபெருமான் நீலகண்டரது உள்ளப்பெருமையினை உலகத்தார்க்கு அறிவிக்கும்பொருட்டு ஒரு துறவி வடிவம் பூண்டு அவரது வீட்டுக்கு ஒருநாள் வந்தருளினார். சிவ ஒளி வீசும் இத்துறவியாரைக் கண்ட நீலகண்டர் பெரிதும் மகிழ்ந்து அவரை வணங்கி நின்று, "எம்பெருமானே! என் தவத்தின் பயனாக அடிகள் இங்கு வந்தருளப் பெற்றேன்; எளியேன் அடிகட்குச் செய்யும் பணி யாது?" என்று வேண்டிக் கேட்டனர். அதற்கு அத்துறவியார், "சிவ நேயனே! இத்திருவோட்டை உன்னிடத்து வைத்துச் செல்கின்றேன், இதனைக் கருத்தாக வைத்துப் பாதுகாப்பாயாக! யான் வந்து கேட்கும்போது இதனைத் தருக! இத்திருவோடு ஒப்பற்ற பெருமையுடையது; தன்னிடத்துச் சேர்ந்த பொருள்களையெல்லாந் தூய்மை செய்வது; பொன்னையும் மணியையும் விடப் பாதுகாத்து வைக்கற்பாலது; இதன் தன்மை இத்துணைச் சிறந்ததாகும்; இதனைக் கையேற்பாயாக!" என்றருளினர். நீலகண்டர் துறவியாரை வணங்கி அத்திருவோட்டை வாங்கிக்கொண்டு போய்த் தம் வீட்டிற் பாதுகாப்பான ஓரிடத்திற் கருத்தாக வைத்து வந்து, போம்படி எழுந்த துறவியாருடன் சிறிது வழி சென்று அவரிடம் விடை பெற்றுத் தம் இல்லத்திற்குத் திரும்பினர்.

அங்ஙனம் அவ்வோட்டைக் கொடுத்துப் போய்ப் பல நாட்கள் கழிந்தபின், சிவபிரானே அதனை வைத்த இடத்தினின்றும் மறைந்து போமாறு செய்து, முன்போல் அவ்வடியவர் வீட்டுக்குத் துறவியார் வடிவில் வந்தருளினர். துறவியார் வருதலைக் கண்ட நீலகண்டர் பேராவலொடு விரைந்துபோய், அவரை எதிர்கொண்டழைத்து வந்து வணங்கி நின்றனர்; நின்றவரை நோக்கி அத்துறவியார்,

"அன்பனே! முன்னே யான் உன்பாற்றந்த திருவோட்டைக் கொணர்க! அதனைக் கொண்டுவந்தபின் நின்று எதனையும் பேசுக!'' என்றனர். நீலகண்டர் ஓட்டைக் கொண்டுவர உள்ளே விரைந்து சென்றனர்; ஓடு வைத்த இடத்தைப் பார்த்தனர்; அஃது அங்கே காணப்படவில்லை. அவர் என் செய்வேனென்று திகைத்துப் பல இடங்களிலுந் தேடினர்; தேடியும் ஓடு கிடைக்கப் பெற்றிலர். "ஆகவே துறவியார்க்கு ஏது விடை சொல்வேன்'' என்று மயங்கிக்கொண்டு நின்றார். அப்போது வெளியே நின்ற துறவியார் அடியார் கேட்கும்படி உரத்துக் கூவி, "நீலகண்டரே! நொடிப் பொழுதில் வருகிறேனென்று உட்சென்ற நீ இன்னும் வெளியே வராமற் காலந்தாழ்த்து நிற்பதேன்!'' என்று கூற, உடனே நீலகண்டர் வெளியே போந்து, "ஐயனே! நீர் தந்த திருவோட்டினை வைத்த இடத்திலும் பிற இடங்களிலுந் தேடியுங் காண்கிலேன். அப்பழைய திருவோட்டைப் பார்க்கினும், புதிய நல்ல திருவோடு தருகின்றேன்; அன்பு கூர்ந்து அதனைப் பெற்றுக்கொண்டு என் பிழையினைப் பொருத்தருள்க!'' என்று துறவியரை இறைஞ்சி வேண்டினர். அதற்கு அம்முனிவர், நீலகண்டரைப் பெருஞ் சினத்தோடு உறுத்துப் பார்த்து, "யான் உன்பால் வைத்துப்போன மண் ஓடல்லாமல் நீ பொன் ஓடே தந்தாயானாலும் வாங்கேன்; அம்மண் ஓட்டையே கொண்டுவரக் கடவாய்!'' என்று சினந்து கூறினர். இதுகேட்ட நீலகண்டர் நடு நடுங்கிப், "பெரியவரே! நீர் தந்த ஓடு எப்படியோ கெட்டொழிந்தமையால் அதனைத் தேடியுங் கண்டிலேன்; அதற்குவேறாக நீடித்திருக்கும் நல்லதோர் ஓடு தருகின்றேனென்றாலும் அதனை வாங்க இசையாமற் சீற்றங்கொண்டு, "என் ஓடே வேண்டு'' மென்கின்றீர்! இதற்கு நான் என் செய்வேன்! நீவிர் இவ்

வாறு சொல்லு மிச்சொல் எனது உணர்வை முழுதுங் கெடுத்துவிட்டது!" என்று கூறி வருந்தினர். அதற்குத் துறவியார், "நன்று கூறினாய்! உன்னிடம் யான் அடைக்கலமாக வைத்த பொருளைக் கவர்ந்துகொண்டு அது கெட்டுப் போயிற்று என்று பொய்த்துப் பலபல கூறுகின்றாய்; தீத்தொழிலுக்கு நீ சிறிதும் அஞ்சுகின்றாயில்லை; எல்லாரும் அறியும்படி இதனை அறிவித்து அத்திருவோட்டை உன்னிடம் வாங்காமற் போகேன்" என்று வெகுண்டு கூறினர். இதுகேட்ட நீலகண்டர் மனங் கலங்கி, "ஐயனே! தூயதான அத்திருவோட்டை நான் கவர்ந்தே னல்லேன்; என் மனதிற் சிறிதுங் களவில்லாமையை எவ்வாறு தெரிவிப்பேன்; யான் அதற்குச் செய்ய வேண்டிய தென்னை? சொல்லி அருள்க" என வேண்டினர். அதற்குத் துறவியார், "நீ காதலித்த நின் மகன் கையைப் பற்றிக்கொண்டு குளத்தில் மூழ்கி, "நான் ஓட்டைக் கவரவில்லை என்று உண்மை கூறிப் போ" என்று பணித்தனர். இது கேட்ட நீலகண்டர், "அடிகாள்! நீர் அருளியவாறு செய்ய எனக்குப் புதல்வனில்லையே! யாது செய்வேன்!" என அஞ்சி மொழிந்தனர். "அஃதவ்வாறாயின், நின் அருமை மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு மூழ்கி உண்மை கூறுக" எனப் பகர்ந்தனர் துறவியார். "யானும் என் மனைவியும் ஓர் ஒட்டு வைத்துக் கொண்டிருத்தலால், யான் அவள் கையைப் பற்றிக்கொண்டு மூழ்குதல் இயலாது; ஆகலான், யானே நீரில் மூழ்கி உறுதிமொழி புகல்கின்றேன்; வருக" என அழைத்தார் நீலகண்டர். இது கேட்ட துறவியார் மேலுஞ் சினங்கொண்டு, "நன்று சொன்னாய்! நான் தந்த ஓட்டைக் கொடாமலும், கவரவில்லை என்பதனை யான் விரும்பியவாறு மெய்ப்பியாமலும் வல்வழக்கிடுகின்றாய்; உன் அழிவழக்கைக் கூறுதற்குத்

தில்லையந்தணர்கள் ஒருங்கு கூடிய பேரவைக்குச் செல்கின்றேன்'' என நுவன்று, அப்பேரவையை நோக்கிச் சென்றனர். நல்லொழுக்கத்தில் முதல்வராய் நின்ற நீலகண்டரும் அப்பெரியவர் பின்னே தொடர்ந்தேகினர்.

இங்ஙனமாக அடிகளும் அடியவருந் தில்லைப் பேரவைக்கு ஏகியபின், துறவியார் அவையோரை நோக்கிப், "பெரியீர்! இவ்வேட்கோவன் (நீலகண்டர்) தன்பால் யான் வைத்துப்போன அரிய திருவோட்டைத் திருப்பித் தருமாறு கேட்க, 'அது காணுதொழிந்தது' என்கின்றான்; அது காணமற் போனதுண்மையாயின், 'நின் மனைவி கையைப் பற்றிக்கொண்டு இத்திருக்குளத்தில் மூழ்கி உண்மை பண்ணித்தா' என்றால், அது செய்தற்கும் இசைகின்றானில்லை; வல்வழக்கிடுகின்றான்; இதனைக் கேண்மின்கள்!'' என்று முறையிட்டார். இது கேட்ட அவையோர் நீலகண்டரை நோக்கி, "நீர் இதன் திறத்துச்சொல்ல வேண்டுவதைச் சொல்லும்!'' என்று கட்டளையிட, நீலகண்டர், "மறையோர்களே! இத்துறவியார் என்னிடந் தந்த திருவோட்டைப் பேணியே வைத்தேன்; அஃதெப்படியோ வைத்த இடத்தினின்றும் மறைந்தொழிந்தது! ஆகவே, யான் வேறொரு புதிய திருவோடு தருகின்றேனென்றாலும் அதனைவாங்க இசையாமல் அப்பழைய ஓடே வேண்டுமென் றருள்கின்றார்; இதுதான் நடந்த செய்தி'' என்றனர். அது கேட்ட அவையோர், "நீலகண்டரே! இம்முனிவரர் தந்த ஒட்டை நீர் தொலைத்து விட்டீராதலின், அவர் விரும்புமாறு உம் மனைவி கையைப் பற்றிக்கொண்டு இத்திருக்குளத்தில் மூழ்கி உறுதிமொழி புகல்வதே முறையாகும்'' எனத் தீர்த்துக் கூறினர்.

நீலகண்டர் அத்தீர்ப்பைக் கேட்டு முதலில் மனங் கலங்கிப் பின் ஒருவாறு தேறித், தம் மனைவியாரைத்

தீண்டாத காரணம் இன்னதென்று அவையிற் கூறுமல், ஏற்பதொரு முறையால் தம் மனைவியாரொடு மூழ்கி உண்மை கூறுவேன்; வாருங்கள் என்று அம்முனிவர் பிரானை அழைத்துக்கொண்டு தமதில்லத்திற்குச் சென்றனர். சென்று தம் மனைவியாரை அங்கிருந்து உடன் கொண்டு, சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருப்புலீச்சரத்தின் எதிரேயுள்ள சோலைசூழ் வாவியில் அவர் தாமுந் தம் மனைவியாருமாக ஒரு மூங்கிற்றண்டின் இரு முனைகளைப் பிடித்துக்கொண்டு மூழ்கத் துவங்கினர். அதுகண்ட துறவியாரோ, "இது தக்கதன்று; நீ நின் மனைவி கையைப் பிடித்துக்கொண்டு முழுகுக !" என்று உரத்துக் கூறினர். அப்போதுதான் நீலகண்டர் தாம் அவ்வாறு செய்ய முடியாத காரணத்தை அவ்வூரவர் எல்லாரும் நன்கறியுமாறு, தம் இருவர்க்குள்ளும் நிகழ்ந்த சூளுறவை வெளிப்படையாக எடுத்துச் சொல்லிப், பிறகு மூழ்கினர்! மூழ்கி எழுந்த நீலகண்டரும் அவர் மனைவியாரும் முதுமை அறவே நீங்கப் பெற்றுக் கட்டழகு வாய்ந்த பேரிளங் காதலர்களாய் விளங்கினர்கள்! ஆனால், அவர்களை அங்ஙனம் மூழ்குமாறு வலிவு செய்து நின்ற துறவியாரோ சடுதியிலே மறைந்து போயினர்.

வழக்கிட்ட பெரியார் அவ்வாறு திடீரென மறைந்து போயதை அங்குக் குழுமியிருந்தா ரெல்லாருங் கண்டு இறும்பூது எய்தி மருண்டு விழித்தனர். நீலகண்டரும் அவர் தம் மனைவியாருமோ சிவபிரான் உமைப்பிராட்டியாரொடு வானிற் றோன்றுவது கண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்கி எழுந்து உளங்கரைந்து தேம்பினர். அப்போது சிவபிரான் "அன்பர்காள்! நீவிர் இருவீரும் இவ்விளமை நீங்காமல் எக்காலமும் நம்பாலிருந்து பேரின்பம் நுகர்வீராக !" என்றருளி மறைந்தனர்.

## திருநீலகண்டர் வரலாற்றின் ஆராய்ச்சி

"மாது சொன்ன சூளால் இளமை துறக்க
வல்லே னல்லன்"

தாம் அன்பினுலுருகி ஓவாது, உரைக்குந் 'திருநீலகண்டம்' என்னுந் திருப்பெயரைச் சொல்லித் தம்மைத் தொடவேண்டாமெனத் தம் மனைவியார் ஆணைவைத்துச் சொன்னமையால் தமது இளமையின்பத்தைத் துறந்த திருநீலகண்டரைப்போல் துறவு பூணவல்லேன் அல்லேன் என்றார் பட்டினத்தடிகள்.

தீய வழியில் நடப்போர், அறிஞர் எவ்வளவு நல்லறிவு கூறினும் கேளாமையே இயல்பாயிருக்க, ஒழுங்கற்ற வழியில் நடந்த நீலகண்டரோ தம் மனைவியார் 'நீலகண்டமறிய எம்மைத் தீண்டாதீர்' என்று கூறிய அளவிலே "தேவர்களையும் உலகத்தையுங் காத்த எம்பெருமானது நீலகண்டத்தைச் சுட்டி 'எம்மை' என்று பன்மையில் ஆணையிட்டமையால் இன்று முதல் மாதர் எவரையுந் தீண்டேன்" என்று உறுதிகொண்டார்; இதுவுமன்றித் தம்மைப்போல் அழகும் இளமையும் வாய்ந்த தம் மனைவியாரோடு ஓரில்லத்திலிருந்தும் அவரை அணுகாதிருந்தனர்; இவர் தம் மனைவியாரொடு வாழ்தலைத் தடைசெய்வது, ஏதும் இல்லாதிருந்துஞ், சிவபிரானது திருப்பெயருக்குக் கட்டுப்பட்டு இளமைக் காலத்திலே இன்பத்தைத் துறந்து பிறரறியாதபடி பேரழகுமிக்க தம் மனைவியாரொடு வாழ்ந்து வந்தனர். அங்ஙனந் திருநீலகண்டர் மேற்கொண்ட 'அகத்துறவு' மக்களிடத்தே காண்பது அரிதினும் அரிதாயிருக்கின்றது. நோயினலும் பல

வசதிக் குறைவினாலும் இவ்வுலக இன்பத்தைத் துறந்து உயிர் வாழ்வாரையுங் காண்கின்றோம். ஆனால், நீலகண்டரோ சிறிதுங் குறைபாடில்லாத தம் பேரிளமைக் காலத்தில் இறைவனிடத்து வைத்த பேரன்பால் அவன் திருப்பெயருக்குக் கட்டுப்பட்டு உலக இன்பத்தை நீத்து வாழ்ந்தமை புதுமையினும் புதுமையாகு மன்றோ?

---

# கண்ணப்பர் வரலாறும்
# காளத்திக் காட்சியும்

உ

திருச்சிற்றம்பலம்

# கண்ணப்பர் வரலாறும் — திருக்காளத்திக் காட்சியும்

※

மறைமலையடிகளின் புதல்வியாரும்,
சென்னை நார்த்விக் மகளிர் கல்லூரித்
தலைமைத் தமிழாசிரியராயிருந்தவருமாகிய
**திருவரங்க நீலாம்பிகை அம்மையார்**
எழுதியது.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

First Edition February 1930.
2nd " August 1945.
3rd " June 1948.

PUBLISHED By
THE AUTHOR
June 1948

( All Rights Reserved )

Printed at the Muthukumaran Press, 8-99 Ammen Kovil St, Madras.

# பொருளடக்கம்

1. முகவுரை
2. திருத்தொண்டர் புராண சாரம்
3. கண்ணப்ப நாயனார் வரலாறு 1
4. கண்ணப்பர் வரலாற்றின் ஆராய்ச்சி 16
முன்னுரை ,,
முற்பிறவி உண்டு 17
பிற்பிறவிகளும் பல 19
முற்பிறவி பிற்பிறவிக்குச் சில எடுத்துக் காட்டுகள் 22
முற்பிறவி நிகழ்ச்சிகள் நினைவுக்கு வராத ஏது 25
கண்ணப்பரின் முற்பிறவி நிலை 26
முற்பிறவியில் உயர்ந்தோர் பிற்பிறவியில் தாழ்ந்த குடிப்பிறத்தல் 27
கண்ணப்பரது முற்பிறவியில் அவர்க்கிருந்த மனநிலை 30
சிவநேயம் உடையார் இயற்கையில் உயிர் நேயம் இல்லாமையும் உண்டு 31
இருவகை அன்பு நிலை 33
சமயாசிரியரின் அன்பு நிலை 34
கண்ணப்பரின் உணர்வு நிலை 35
அடியார் இறைவனை அடையும் முறை 36
கண்ணப்பரது அன்பே ஏனை எல்லார் அன்பினுஞ் சிறந்தது 38

கண்ணப்பர் கடவுள் மேல் அன்பு
கொண்டமை 40
கல்லுங் கடவுளாதல் 41
திருவுருவ வழிபாட்டின் உண்மை 42
நல்வினை தீவினைகளின் நிலை 46
கொலைத் தீவினைப்பயன் 48
கொலைத் தீவினையை நீக்கிச் சிவபிரான்
கண்ணப்பரை ஆட்கொண்டமை 50
ஊன் உண்பாரை இறைவன் கொடுந்துன்
பத்திற் படுப்பிப்பன் 53
ஆராய்ச்சி முடிபு 54
5. திருக்காளத்திக் காட்சி 55
6. அனுபந்தம் (செய்யுட்கள்) 62

# முகவுரை

"மனத்துக்கண் மாசுஇல ஞதல் அனைத்(து)அறன்
ஆகுல நீர பிற."
—திருக்குறள்

எல்லாம் வல்ல இறைவனருளைப் பெற முயலும் அறிஞர்கள் விரதத்தை மேற்கொள்வதாலும், காட்டிற் றவமியற்றுவதாலுமே அதனை எளிதிற் பெறக்கூடுமென நினைக்கின்றனர். ஆனல், இவ்விரண்டு வழிகளும் இறைவனை மிக எளிதிற் பெறுதற்கு உதவா என்பது மணிமொழிப் பெருமான்,

"விரதமே பரமாக வேதியருஞ்
சரதமாகவே சாத்திரங் காட்டினர்"
"துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த ஒளித்தும்"
"கனவிலுந் தேவர்க்கு அரியாய் போற்றி"

என்றருளிச் செய்தமையால் இனிது விளங்கும்.

விரதம், தவம் என்னும் இரண்டிற்கும் அப்பாற்பட்ட அன்பு ஒன்றினலேயே இறைவனை மிக எளிதில் அடைதல் முடியும். இறைவன் அன்பு வடிவினனதலின், அவனை அன்பால் நினைந்து உருகுவார்க்கே அருள் செய்வன். மாசு அற்ற உள்ளத்தினின்று எழும் அன்பே இறைவனைக் காணும். உவர் நிலத்துப் பிறந்த நீர் பருகப் பயன் படாததுபோற், குற்றமுள்ள உள்ளத்தினின்று எழும் விருப்பால் இறைவனைப் பெறுதல் இயலாது. நல்ல மணற் பாங்கில் ஊறுந் தீஞ்சுவைத் தண்ணீர் சிறிதாலும் அது பருகுவார்க்கு விடாய் தணித்துப் பெருமகிழ்ச்சி தருதல் போல, மனத்துக்கண் மாசு இல்லான் கொள்ளும் அன்பே

அவனைத் தூயனாக்கி இறைவற்குப் பெருங் களிப்பினைத் தருவதாகும்.

தூய உள்ளத்தினராய் இறைவனை ஓயாமல் நினைந்து உருகி வழிபட்ட மெய்யடியார் பலரிற் கண்ணப்பர் என்னும் பெரியாரும் ஒருவராவர். இவர் தம் பிறப்பும், குடியும், இயற்கையும் ஏனை அடியார்கள்பாற் காணப்படுவனவற்றை விட மிகவும் வேறுபாடுடையனவாயிருக்கின்றன; ஆயினும், இவர் இறைவனிடத்து வைத்த அன்போ தனிச் சிறப்புடையதா யிருக்கின்றது.

வேடர் குடியிற் பிறந்த கண்ணப்பர் இறைவனைக் கருதுதலுங் காணுதலுங் கூடுமோ? இறைவன் இவர்க்கு அருள் செய்தது முறையோ? என்று பலர் பலவாறாக நிகழ்த்தும் பலகேள்விகட்கும், இந்நூலுள் என்னாலியன்ற மட்டும் விடைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பெரியாரது காலம் மிகப் பழமையானது. இது சைவ சமயாசிரியர் நால்வர் காலத்திற்கும் முற்பட்டதென்பதற்கு, அவர்கள் கண்ணப்பரது அன்பைப் பாராட்டிப் பாடிய பாக்களே தக்க சான்றுகளாகும்.

இப்பெரியார் பிறந்த ஊர் காளத்திமலைக்கு அருகேயுள்ள போத்தப்பி என்னுஞ் சிற்றூராகும். இவரது கால்வழியில் வந்த வேட்டுவக் குடிக்கு இப்போதும் 'கண்ணப்பக்குடி' என்றே பெயர் வழங்கிவருகின்றது. காளத்திமலை உச்சியில் அமைக்கப்பட்டுள்ள சிவபிரான் கோயிலுக்கருகே கண்ணப்பரது திருவுருவம் அமைந்த சிறு கோயிலும் உளது. இத்திருவுருவத்தின் உறுப்புகள் மிகவுந் தேய்ந்திருத்தலைக் காண்பவர் இது மிகப் பழைய காலத்தே செய்யப்பட்டதென்பதை நன்கு உணர்வர்.

முதலில் இப்பெருமானரது வரலாறும், அதன்பின் அவரைப்பற்றி ஆராயாமற் பலர் சொல்லும் பொருள்களின் ஆராய்ச்சியும், முடிவாகக் கண்ணப்பர் ஏறிச்சென்ற காளத்தி மலையின் பேரழகு மிக்க இயற்கைக்காட்சியும் இதன்கண் எழுதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் மாணவர்கட்கும் பயன்படுமாறு எளிய தனித்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. கண்ணப்பரைப்பற்றி எழுதவேண்டுமென்று பல்லாண்டுகள் எண்ணிய எனது எண்ணத்தை முடித்து வைத்த எல்லாம்வல்ல எம்பெருமானை என் நெஞ்சார வழுத்தி வணங்குகின்றேன். இப்புத்தகத்தைப் பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்தனுப்பிய என் அருமைத் தந்தையாரவர்கட்கும் என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

பாளையங்்கோட்டை,
10—2—30

தி. நீலாம்பிகை.

---

## திருத்தொண்டர் புராண சாரம்

---

வேடரதி பதியுடுப்பூர் வேந்தனாகன்
விளங்கியசேய் திண்ணனார் கன்னிவேட்டைக்
காடதில்வாய் மஞ்சனமுங் குஞ்சிதருமலருங்
காய்ச்சினமென் றிடுதசையுங் காளத்தியார்க்குத்
தேடருமன் பினிலாறு தினத்தளவுமளிப்பச்
சீறுசிவ கோசரியுந் தெளியவிழிப்புண்ணீ
ரோடவொரு கண்ணப்பி யொருகண்ணப்ப
வொழிகவெனு மருள்கொடரு குறநின்றாரே.

---



# கண்ணப்ப நாயனார் வரலாறு

தென்னாட்டிற்கு வடக்கே ஸ்ரீ காளஸ்திரி என வழங்கும் திருக்காளத்தி என்னும் ஓர் அழகிய நகர் இருக்கின்றது. இஃது எல்லா வளங்களும் நிறைந்து விளங்குகின்றது. முற்காலத்திலும் இஃது எல்லா நலங்களாலுஞ் சிறந்திருந்தது. இந்நாட்டிற்கருகே அழகிய சோலைகள் சூழ்ந்த பொத்தப்பி நாடு என்னும் ஒரு நகர்ப்புறம் உண்டு. இந்நகர்ப்புறத்திற்கு அப்பாலுள்ள நீண்ட மலையின் பக்கத்தே உடுப்பி என்னுமொரு சிற்றூர் இருக்கின்றது.

அடர்ந்த மலைக்காட்டிற் கருகே உள்ள இவ் வழகிய சிற்றூரில் வேடர்கள் வாழ்ந்துவந்தனர்; இதனை யடுத்துள்ள காட்டில் புலி, கரடி, யானை, பன்றி, மான், முயல் முதலான விலங்குகள் மிகுந்திருந்தன. வேடர்களும் அவைகளிடையே அச்சமின்றி வேட்டை ஆடிப் பெறும் இறைச்சியையும் மலையிற்கிடைக்கும் காய், கனி, கிழங்கு, தேன் முதலியவைகளையுந் தின்று காலங்கழித்து வந்தனர். கறுத்த உடம்பினராய் அச்சமும் அன்பும் திருந்திய அறிவு மில்லா அவ்வேடர் கூட்டத்திற்கு நாகன் என்னும் ஒரு தலைவன் இருந்தான். இவன் தான் பிறந்தவேட்டுவக் கூட்டத்தின் சார்பாற் குற்றமானவைகளையே நல்லன வெனக் கொண்டான்; கொடிய செயலிற் சிறந்தவன்; வேட்டையாடுந் தொழிலில் திறமை மிக்கவன். இவனுக்கு வாய்த்த மனைவியின் பெயர் தத்தை. நாகனும் தத்தையும் நெடுங்காலம் பிள்ளைப்பேறில்லா திருந்தமையால், இனி

இவர்கட்குப் பிள்ளை உண்டாகாதென்று அவ்வூரவர் கூறினார்கள்.

ஆனாலும், நாகனும் தத்தையும் பிள்ளை வேண்டுமென்னும் பேரவாவினாலே, மலைமேலுள்ள முருகனுக்குப் பல நாள் வழிபடு கடன் ஆற்றுவாராயினர். பின் அக் கடன் முடிவு பெற்ற கடைசி நாளில், அவர்கள் சேவலும் மயிலுங் கொண்டுபோய் முருகன் திருமுன் விட்டுப், பூமாலைகள் நிறையத் தூக்கிப் பெருஞ் சிறப்போடு பெரு விழா எடுத்தனர். அதன்பின், முருகப் பெருமானருளால் தத்தை கருக்கொண்டு ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். தந் தலைவனாகிய நாகனுக்கு நெடு நாட்கள் பிள்ளையில்லாமலிருந்து முருகப்பிரா னருளாற் குழந்தை பிறந்ததால் வேடர்களெல்லாரும் பெருங்களிப் படைந்து குரவைக் கூத்து ஆடி அத் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். அதன்பிற் சில நாட்களிற் பெரு விழா எடுத்த ஒரு நல்ல நாளிற், பெயரிடுதற்கு எண்ணி நிற்கையிற், கருமையில் அழகு மிக்க அக்குழவியைக் கையிலேந்தியவர்கள் அது மிகவும் திட்பமாயும் தடித்தும் விளங்கியதால் அதற்குத் திண்ணன் என்று பெயரிடுதலே முறை யென்றனர். நல்வினையே ஓர் உருக்கொண்டது ஒப்பத் தோன்றிய திண்ணனார்க்குத் தங் குல வழக்கப்படி பல அணிகலன்கள் அணிந்தும், தம் மார்மேலுந் தோண் மேலுந் தாங்கி முத்தம் வைத்தும் பாராட்டி வளர்த்தார்கள்.

இவ்வாறு, திண்ணனார் வளர்ந்து தங் குலமுறைப்படி விற்றொழில் பயிலத்தக்க பருவத்தை அடைந்தார். நாகனுந் தன் மைந்தற்கு விற்றொழில் கற்பிப்பதற்காக ஒரு நல்ல நாளில் முதியோர் பலரையு, மற்றைக் குடிகளையும்

வரவழைத்தனன். வேடர்க்கரசனாகிய நாகன்றன் தவப் புதல்வனார் வில் பிடிக்கின்றாரென்பதறிந்து வேடர்களெல்லாரும் பெருந்திரளாக வந்து கூடினர். கூட்டத்தினர்க்குப் பெரு விருந்தளித்துப் பின் மிகுந்த சிறப்போடு நாகன் தன் அருந்தவப் புதல்வனார்க்கு விற்றொழிற் கல்வி தொடங்குவித்தான். அன்று முதல் வில்வல்லார் பலர் திண்ணனார்க்கு விற்றொழில் கற்பிக்கத் தொடங்கினர். திண்ணனாரும் அன்றிருந்து நாடோறும் விற்றொழிலிற் பழகி விரைவில் அதில் தேர்ச்சி பெற்று விளங்கினர். வில்லும் பல படைக்கலன்களும் நன்றாகக் கற்றுப் பதினாறுண்டை எய்தினர். இவ்வாறு திண்ணனார் பதினாறுண்டை அடைந்த போது நாகன் ஆண்டில் முதியோனானன். அடர்ந்த மலைகளிலுங் காடுகளிலும் அளவில்லாமல் வேட்டை ஆடித் தன் பகைவர்தம் பொருள்களைக் கவர்ந்து, தன் குடிகளைப் பாதுகாத்து வந்த இந்நாகன், இப்போது முதுமையின் தளர்வால் வேட்டை ஆட ஏலாமல் மெலிவடைந்தான்.

அப்போது, "இம் மலைச்சாரற் கருகேயுள்ள நிலமெங்கும் காட்டுப் பன்றி, புலி, கரடி; முதலிய கொடு விலங்குகள் கூட்டமாக வந்து தீதுசெய்கின்றன. திங்கள்தோறும் ஆடும் வேட்டையுந் தவறியது," என்று வேடர்கள் தம் தலைவனாகிய நாகனிடம் வந்து கூறி முறையிட்டனர். இவருரை கேட்ட நாகனும் அவர்களை நோக்கிக் 'குன்றவர்களே, எனது மூப்பினாலே யான் முன்போல் வேட்டை ஆடுதல் ஏலாதவனாயிருக்கின்றேன்; ஆதலால், என் அருமை மகனை நுங்கட்குத் தலைவனாக்குகின்றேன்; ஏற்றுக்கொள்வீராக,' என்றனன். தந் தலைவன் கூறியவாறே வேடர்கள் திண்ணனாரைத் தம் அரசனாக மகிழ்வோடு

ஏற்றனர். திண்ணனும் தந் தந்தை நாகனது உரையை முடிமேற் கொண்டு அவன் சொற் பிழையாமல் நடந்துவருவாராயினர்.

மலைப்பக்கத்தே அலைந்து திரியும் விலங்குகளை வேட்டை ஆடுதற்பொருட்டு ஒரு நாள் திண்ணனும் வேட்டுவர்களும் வில்லும்அம்பும் ஏந்திச் சென்றார். காட்டினூடே சென்ற இவர்கள் வேட்டை நாய்களை ஆங்காங்கு ஏவினர். சீற்றமும், இறைச்சியுண்ணும் அவாவு மிக்க அந்நாய்கள் புதர்களிலும் புழைகளிலும் ஒளித்திருந்த விலங்குகளை யெல்லாம் அச்சுறுத்தி வெளிப்படுத்தின. அங்ஙனம் வெளிப்பட்டு அலமந்து ஓடும்போது திண்ணனும்வேடர்களும் விட்ட அம்புகளானவை மழைபொழிவதுபோல் அவ் விலங்குகளின் மேல் விழுந்து உடலை ஊடுருவிச் சென்றன. ஆதலால், எய்த அம்புகளாற் பல கொடிய விலங்குகள் பல இடங்களிற் கிழிபட்டு இறந்தொழிந்தன. இவ்வாறு திண்ணனும் வேடர்களும் கடுமையாக விரைந்து வேட்டையாடும்பொழுது, மலையுங் காடும் அஞ்சி நடுங்கத்தக்க ஒரு கொடிய முள்ளம் பன்றியானது சினத்தாற் சுடர் போல் ஒளி வீசுகின்ற கண்ணும், இடி இடித்தாற் போன்ற ஓசையு முடையதாய் வலைகளை யெல்லாங் கிழித்துக் கொண்டு ஓடிற்று. இக் கடும் பன்றியை எதிர்க்கும் பொருட்டு வேடர்களும் திண்ணனும், அது சென்ற அடிச்சுவட்டின் வழியே செல்லும் போது, திண்ணனர் மட்டும் அவ்வேடர்களறியாமற் பன்றியைத் தொடர்ந்து சென்றார். நாணன், காடன் என்னும் காளையர் இருவர் திண்ணனரைத் தேடிச்சென்று அவரோடு கூடினர். எதிர்ப்போரைக் கொல்லுங் கடுஞ்சினமுடைய அப்பன்றியானது மறவர்களால் விடப்பட்ட அம்புகளுக்

செல்லாந் தப்பி விரைந்து ஓடிவந்த களைப்பால் அடர்ந்த மலைக்காட்டினிடையே நின்ற ஒரு மர நிழலில் ஒதுங்கியது. சூழ்ச்சியால் அதன்பின் தொடர்ந்த திண்ணனார் பன்றி ஒதுங்கி நிற்பதைக் கண்டு அதை அம்பால் எய்வது பய னில்லாமை உணர்ந்து அதனருகே கடுகிச் சென்று தன் உடைவாளால் அதனைக் குத்திக்கொன்றார்!

திண்ணனாராற் குத்தப்பட்டு இருகூறாய் விழுந்த அவ் வலிய பன்றியை நாணன் கண்டு தன் நண்பனாகிய காட னிடம் திண்ணனாரது ஆண்மை மிக்க பேராற்றலைப் பெரி தும் பாராட்டிப் பேசி வியப்படைந்தானாய் அவனொடும் அவரடியில் வீழ்ந்து வணங்கினன். அதன்பின் நாணனுங் காடனும் திண்ணனாரை நோக்கி, 'அண்ணலே! வேட்டை ஆடி நெடுவழி நடந்ததாற் பசித்துன்பம் எம்மை அடைந் தது. ஆதலால், இப்போது நீர் கொன்ற பன்றியைத் தீயிற் காய்ச்சிப் பதப்படுத்தி நீரும் யாங்களும் தின்று தண்ணீர் குடித்து இளைப்பாறுவம்,' என்றனர். இது கேட்ட திண்ணனார் 'தண்ணீர் எங்கே உளது?' என்ன, நாணன் 'அதோ சிறு தொலைவில் தோன்றும் மலை அடி வாரத்திற் குளிர்ந்த நீரோடும் பொன்முகலி ஆறு இருக் கின்றது!' என்றான். அதற்கு, 'அங்கேயே போவோம்; இப்பன்றியை எடுத்துக் கொள்ளுங்கள்; அதனை அங்கே பதப்படுத்தி உண்டு நீர் அருந்தலாம்,' என்றார் திண் ணனார்.

அம் மலையடிவாரத்தை நோக்கி அம் மூவருஞ் செல் லும் போது, திண்ணனார் மலையை உற்று நோக்கியபடி யாய்ச் சென்றார்; சென்று திருக்காளத்தி மலையடியி லிருக்குஞ் சோலையை அடைந்தார். 'நாணனே! எதிரே தோன்றுகின்ற இம்மலைக்குச் செல்வோமா?' என்று திண்

ணனர் கேட்க, நாணனும் 'ஐயனே! அருகே தோன்றும் அவ்வுயர்ந்த மலையினிடத்துள்ள காட்சியும் நிரம்ப அழகாயிருக்கும், இன்னும் அம்மலையின் உச்சிக்குச் சென்றால், அங்கே குடுமித்தேவர் இருப்பர். அவரை வணங்கி வரலாம்,' என்றனன். இது கேட்ட திண்ணனர் பெரிதும் மகிழ்ந்து 'நாணனே! இம்மலையைக் காணுந்தோறுங் கிட்டுந்தோறும் என் உள்ளம் பொங்குகின்றது. இதனை அடையவேண்டு மென்னும் அவாவும் அளவுக்கு மிஞ்சி எழுகின்றது; இஃது எதனாலென்றும் அறியேன்; ஆதலாற் குடுமித்தேவர் இருக்கும் இடத்தைக் காட்டுவாயாக,' என்றார். பின் இம்மூவரும் காளத்தி மலையடியிலுள்ள பொன்முகலி ஆற்றங்கரையை அடைந்தனர். அடைந்ததும், ஒரு மர நீழலில் தீ மூட்டி அப்பன்றியைப் பதப்படுத்தி வைக்குமாறு காடனிடம் சொல்லித் திண்ணனர் நாணனுடன் அம்மலை மீதுள்ள இறைவனை வணங்கி வருவதாகச் சென்றார்.

இவ்விருவரும் பளிங்கு போல் தெளிந்த அப்பொன் முகலியாற்றைக் கடந்து காளத்தி மலைமேல் ஏறுவாராயினர். ஏறும்போதே திண்ணனர் முற்பிறவியிற் செய்த நல்வினைத் தொகுதிகள் ஒருங்கு திரண்டு அவருள்ளத்தே எழ, அதனால் இறைவனிடத்துப் பேரன்பு மிகுந்து எழுவதாயிற்று. காளத்தியார் வீற்றிருக்கும் மலையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் திண்ணனரது உள்ளமானது, இவ்வுலக நினைவினின்றும் விடுபட்டுக் கொண்டே வந்தது. நாணனுந், தாமும் இறைவனிடத்துக் கொண்ட பேரன்பும் முன் செல்லத், திண்ணனர் பின்னே தம் உணர்விழந்து இறைவனிருக்குமிடம் நோக்கி முன் ஏகினர். சிவபிரானிருக்குமிடஞ் சென்று அவனைக் காணு முன்னர்த் தமக்

இருந்த உலகப்பற்று முற்றுந் தேய அவனருள் நிழலில் அன்பு உருவம் எய்தினர். இவ்வாறு இறைவனருள் ஈர்த் திழுப்பத் திண்ணனர், வான் அளாவிய மலை உச்சியிலுள்ள காளத்தி இறைவனைக் கண்டார்? கண்டதும், அவர், தம் உள்ளே எழுந்த பெருங்காதல் அளவு கடந்து சென்றதால் விரைந்தோடிச் சிவபிரானைக் கட்டித் தழுவி உச்சி மோந்து தம் கண்களினின்றும் கண்ணீர் அருவிபோற் பாய உடம் பெங்கும் மயிர்க்கூச் செரிய அன்பின் வடிவமாய் நின் ருர். பின், திண்ணனர் இறைவன் திருவுருவினை நோக்கி 'எனக்கினிய ஐயனே! கொடிய வேடர்கள்போற், புலி, கரடி முதலிய விலங்குகள் வாழும் இக்கொடுங்கானின் மலை உச்சியில் துணையின்றித் தனித்திருத்தல் தகுமோ! நும் தனிமையைப் பொறுப்பேனே ஆண்டவனே!' என்று கரைந்து வருந்தித் தன்னிலை மறந்து தந் தலைவனேடு ஒன்றுபட்ட நினைவில் அழுந்தினர். தங் கையிலிருந்த வில் வழுவி விழுந்ததும் அறியாராகி, இறைவன் திருவுரு வின் மேல் இடப்பட் டிருந்தவைகளைக் கண்டு, இப் பச் சிலையும் பூவும் இட்டு, நீரும் வார்த்து அழகாக எம் இறை வற்கு வழிபாடு செய்தார் எவரோ,' என்று வினவினர். அதற்கு நாணன் இறைவனை இங்ஙனம் வணங்கி வழிபாடு செய்தவன் ஒரு பார்ப்பனனுவன்,' என்று விடை கூறி ஞன். திருக்காளத்திப் பிரானர்க்கு இவ் இனிய வழிபாடு இனிதாவது போலு மென்று திண்ணனர் கருதினர். மேலும் 'இறைவன் தனியராய் இருக்கின்ருர்; இவர்க்கு உணவு தருவாருமில்லை; ஐயகோ! யான் இவரைப் பிரிந்து போகேன்: பிரிந்து போகா விடினும் இவர்க்கு உணவு தருவார் ஒருவரும் இல்லையே! இதற்கு யான் என் செய் கேன்; ஆனல், எவ்வகையினும் யான் சென்று இறை வற்கு இறைச்சி கொண்டு வருதலே வேண்டும்,' என்று

ஒருவாறு மனந்தேறிச் சிறிது வழிச் செல்வரானார்! அவரைப் பிரிந்து போதற்கு மனம்பொறாராகி மீண்டும் அவர்பாற் சென்று அவரைத் தழுவினார்; தழுவிய பின் போதற்கு அடியெடுத்து வைத்த போது அங்கேயே அடியற்ற மரம்போல் நின்று இறைவனைக் கண்டு காதலாற் கசிந்துருகினார்; இன்னும் இறைவனது தனிமையை நினைந்து நினைந்து பிரிய மனமில்லாமற் கன்றைப் பிரிந்த ஆவைப்போல் அலறினார். பின்னும் இறைவனை நோக்கி, "ஐயனே! நீர் உண்ணுதற்குப் பழுதற்ற இறைச்சியைத் தெரிந்து பதப்படுத்தி யானே கொண்டுவருவேன். நும்மைப் பிரியவும் மனமில்லேன்; நீர் பசித்திருக்க இங்கு நிற்கவு மாட்டேன்," என்று கூறித், தங் கண்களில் நீர்த்துளி அரும்ப, வில்லைக் கையிலெடுத்துக் கொண்டு வேட்டையாட் ஒருவாறு மனந்துணிந்து இறைவனைக் கும்பிட்டுக் கொண்டே நாணன் பி... வரச் சென்றார்.

சென்று பொன்முகலி ஆற்றைக் கடந்து முற்குறிப்பிட்ட சோலைக்குட் புக்கார். காடனும் அவர்களெதிரே சென்று திண்ணனாரை வணங்கித் தோன்றலே! நும் சொற்படி தீக்கடைந்து வைத்திருக்கின்றேன்! பன்றியினது உறுப்பை யெல்லாம் நும் குறிப்புக் கேற்றவாறு அரிந்து செம்மைப் படுத்தி வைத்துள்ளேன்; நீர் இங்கு வருவதற்கு இவ்வளவு காலந் தாழ்த்தது ஏனோ?' என்று கேட்க, நாணன் காடனை நோக்கி, 'இத்திண்ணன் அம்மலை மேலிருக்கின்ற குடுமித்தேவரைப் பார்த்துத் தழுவிக் கொண்டு மரப் பொந்தைப் பற்றி விடாத உடும்பைப் போல் நின்றான்; இப்போதும் அவர் உண்ணும் பொருட்டு இறைச்சி கொண்டு போதற்கே இங்கு வந்திருக்கின்றான்! நம் குல ஒழுக்கத்தையும் கைவிட்டான். அம்

மலேத்தேவர்க்கே ஆளாயினன்,' என்று கூறினன், இஃ துரைப்பக் கேட்ட காடன் 'திண்ணனே! நீ என்ன வினை செய்தாய்! ஏன் இம் மயக்கங் கொண்டாய்! நீ எங்கள் தலைவன் அல்லனே?" என்று கூறத் திண்ணனர், அவ் இரு வர் முகத்தையும் பாராது பன்றியின் நல்ல தசைகளை நெருப்பில் வதக்கிப் பதப்படுத்தி அவை இறைவன் உண் பதற்குச் சுவையுடையனவா என்பதறியக்,காய்ச்சிய அவ் இறைச்சித் துண்டுகளிற் சிறிது சிறிது எடுத்து வாயி லிட்டு மென்று பார்த்து, மிகுந்த சுவையில்லாதவற்றைப் புறத்தே உமிழ்ந்தும், கூர்த்த சுவையுடையவைகளைத் தைத்த இலைக்கல்லேயில் வைத்தும் கையில் எடுத்துக் கொண்டார்.

இவரது செயலேக் கண்ட நாணனுங் காடனும் மனம் புழுங்கி, "ஈதென்னே! இத்திண்ணன் குடுமித்தேவரிடத்து மயல்கொண்டான்; தன் கொடிய பசியையும் அறியா னுப் பெறுதற்கரிய இப்பன்றியின் சுவைமிக்க இறைச்சித் துண்டுகளை வாயிலிட்டுச் சுவைத்து விழுங்காது புறத்தே உமிழ்வதுமன்றி மிஞ்சியதைக் கல்லேயிலும் எடுத்து வைத்தான். அவ் இறைச்சியைப் பகுத்துப் பசியால் வருந்தும் நமக்குந் தர அறிந்தானில்லே. இவன் தெய்வ மருள் கொண்டான்!இவனே நம் நிலேக்குத் திருப்ப ஏதும் வகை அறியோம்;" என்று கூறித் தம் ஊர்க்குத் திரும்பினர்.

திண்ணனர் தாம் இறைவனிடத்தே பதிந்த எண்ண முடையவரா யிருந்தமையாலே நாணனுங் காடனுஞ் சென்றதையும் அறிந்திலர்; தாம் கல்லேயிற் சேர்ந்த ஊனே ஒரு கையிலும், வில்லே அம்போடு மற்றொரு கையிலும் ஏந்தி இறைவற்குத் திருமுழுக் காட்டிப் பூச் சாத்தும்

பொருட்டுத் தம் தூயவாயில் ஆற்று நீரை முகந்துகொண்டும், பூவைத் தம் தலையிற் செருகிக் கொண்டும், எம்பிரானார் மிகவும் பசித்திருப்பரே என்று பெரிதும் வருந்தி மிகக் கடுகி மலைமேல் ஏறினார். ஏறிச் சென்று சிவபிரானை அடைந்து வணங்கி இறைவன் பசியாற் களைத்திருப்பரென நினைந்து, அவன் திருமுடி மீதிருந்த மலரைத் தங் காற் செருப்பாற் போக்கித், தம் வாயிற் கொண்டு போன நீரால் திருமுழுக்காட்டித், தலைமீது செருகிக் கொணர்ந்த பூங் கொத்தைச் சாத்திச், சுவைத்து எடுத்து வந்த இறைச்சியையும் இறைவன் திருமுன்னே வைத்து அன்பினால் உள்ளம் உருகி நின்று, "அப்பனே! கொழுமையாகிய இறைச்சித் துண்டுகளை யெல்லாம நன்றாகத் தீயிற்காய்ச்சி அவைகளை என் பல்லினால் அதுக்கி மென்று, நாவிற் சுவைத்துப் பார்த்துச் சுவை மிக்கவற்றை நீர் உண்ணுமாறு கொண்டு வந்து படைத்திருத்திருக்கின்றேன்! இனிய இவ் இறைச்சியை உண்டு அருள்புரிவீராக," என்று மிக இரந்து வேண்டினார். அப்போது பகலவன் மறைந்து மாலையும் வந்தணைந்தது. இரவிற் காட்டு விலங்குகள் இறைவனை அணுகு மென்று அஞ்சித் திண்ணனார் தம் திருக்கையில் வில் ஏந்தி மறந்தும் உறங்காது இறைவனை நோக்கியவாறே நின்று காவல் புரிவாரானார்

மறுநாள் விடிந்து கதிரவன் வெப்பம் மிகும் நடுப்பகற் காலம் நெருங்கும் முன், திண்ணனார் இறைவற்கு உணவு கொண்டு வருவதற்சாக அவரைத் தொழுது சென்றார். திண்ணனார் பிரிந்து சென்ற நேரத்தில், வழக்கம் போல் நாடோறும் நான் முறை வழுவாமல் சிவபிராற்கு வழிபாடு செய்யும் சிவகோசரியார் என்னும் அன்புமிக்க முனிவர், புனலில் மூழ்கிப் பூவும் நீருங்

கொண்டு இறைவனிடஞ் சேர்ந்தார். சேர்ந்தவர் இறைவன் திருமுன்னே வெந்த இறைச்சியும்எலும்பும் இருக்கக் கண்டு துடி துடித்து அவ்விடம் அகன்று ஓடி, "ஐயகோ! இத் தீச் செயல் இறைவன் முன் செய்தார் எவரோ? அஞ்சா நெஞ்சினராகிய வேடர்களே இது செய்தாராதல் வேண்டும்! அப்பனே! உன் முன்னே இவ்வாறு அவர் செய்யப் பொறுப்பதும் உன் திருவுள்ளத்திற்கிசையுமோ? என்று அலறி வீழ்ந்தார். பின்னும், இனிச் செய்வது யாது? இறைவற்குச் செய்யும் வழிபாடு காலந்தாழ்த்துச் செய்தலாகாது," எனக் கருதி, அங்கிருந்த இறைச்சி, எலும்பு, செருப்புச் சுவடு முதலியவற்றை அலகால் அகற்றித் துப்புரவு செய்து பின்னும் நீரிற் படிந்து முழுகி விரைவில் வந்து பூவும் நீரும் இறைவன் மேலிட்டு, வழிபாடு செய்து இறைவனை மனங்கசிந்து தொழுதார். தொழுத பின்னர் முனிவர் தம் இருப்பிடஞ் சேர்ந்தார்.

இஃதிவ்வாறாக, இறைவற்கு உணவு கொண்டு வர மலையின் புறத்தே போன திண்ணனார், மலைப்பக்கத்தே யுள்ள நிலங்களைப் பாழ் படுத்துகின்ற பன்றி, கலைமான் முதலியவைகளை வேட்டை ஆடிக் கொன்று, தீ மூட்டி அவைகளின் இனிய தசைகளை நெருப்பிற் காய்ச்சிப், பின் தம் பல்லில் அதுக்கி நன்றாகச் சுவைபார்த்து நல்லனவற்றைத் தேக்கிலையிலிட்டு, அவற்றிற் கொம்புத் தேனும் பிழிந்து கலந்தெடுத்துக்கொண்டு, முன்போல் தலையிலும், வாயிலும் பூவும் நீருங் கொண்டு மிகக் கடுகி மலையேறிச் சென்றார்; சென்று மலை உச்சியிலுள்ள காளத்தி அப்பரை அடைந்து முனிவர் செய்த வழிபாட்டை முன்போல் அகற்றிய பின், தாங் கொணர்ந்த இறைச்சியுந் தேனும் இறைவனெதிரே வைத்து, "என் ஆருயிரனைய இறைவா!

இவ் இறைச்சி மிகவுஞ் சுவை மிக்கது; கொம்புத் தேனுடன் கலக்கப் பெற்றுத் தித்திப்பது; யானும் இதனைச் சுவை கண்டே பிறகே கொணர்ந்தேன்! உண்டருள்க;" என்று வேண்டினார். இம் முறையே திண்ணனார் அளவின்றிப் பெருகி ஓடும் அன்பினால் ஊண் அமைத்து வழிபாடியற்றி அல்லும் பகலும் உறங்காமற் காளத்தியப்பரை இமையாது காத்து வருவாராயினர். அம் மாமுனிவரும் நாடோறும் அங்கு வந்து அங்கே முன்போலுள்ள அருவருப்புக்களைக் கண்டு மனம் நைந்து, பின்னர் ஒருவாறுளந்தேறி, அவைகளை விலக்கித் தம் முறைப்படி இறைவனைத் தொழுது செல்வாராயினர்.

நாணனும் காடனும் போய்த் திண்ணனாரது நிலைமையை நாகனுக்குத் தெரிவிப்ப, அவர்களெல்லாரும் அவரை வந்து கண்டனர். திண்ணனாரது சொல்லுஞ் செயலும் இறைவன்பால் இழுக்கப்பட்டு முற்றும் வேறுபட்டமை அறிந்த அவர்கள் அவரைத் தம் நிலைமைக்குத் திருப்ப எவ்வளவோ முயன்றும் அம் முயற்சி பயன் தராதொழிய, அவரை அவர் எல்லாரும் விட்டகன்றனர்.

அன்புருவான திண்ணனார் தம் அருள் விருப்பத்துக்கிசையச் சிவபிராற்கு வழிபாடு செய்து மேலும் மேலும் இறைவன்பாற் பெருகும் பேரன்பிற் றளும்பி நின்றார். இவர் செய்யும் பேரன்பின் வடிவான வழிபாட்டின் அன்பின்றன்மை யுணராராய் அதனை அருவருத்து அம் முனிவர் நான் முறை வழுவாது மீண்டுங் காளத்தியப்பர்க்கு வழிபாடு செய்து "என் தலைவனே! நின் திருமுன் இத் தீச்செயல் செய்தாரை யான் காணேன்! இனியாயினும், இது நிகழாவாறு பேரருள் புரிந்திடுக," என்று உருகி வேண்டினார். அன்றிரவு சிவபெருமான் அம் முனிவர் கனவிற்றோன்றி; 'அன்பனே! என் முன்னே அச்செயல்

செய்தானைக் கொடுந்தன்மையுடைய வேடுவனென்று நினையற்க; அவனுடைய அன்பெலாம் நம்பால்; அவன் அறிவு என்னைத் தவிரவேறொன்றையும் அறிய மாட்டாது; அவன் அன்பு வடிவினன்; ஆதலால், அவன் எமக்குச் செய்யும் செயலெல்லாம் அன்பின் வழிபட்டனவாதலின் அவை எமக்குப் பெரிதும் இன்பந் தருவனவாகும் என்பதை அறிவாயாக! மலைமேலேறி வந்து நீ எமக்குத்தூவும் மெல்லிய மலரை நீக்கும் பொருட்டு, வெள்ளம்போற் பொங்கி ஓடும் அன்பால் அவன் என்மீது வைக்கும் காற் செருப்படியின் வைப்பானது எமக்கு மிகுந்த உவப்பினைத் தருவதாகும்; உருகுதற்கு ஏதுவான அன்பு நிறைந்த அவன் வாயினின்றும் என்மீது உமிழப்படும் நீரும் கங்கை நீரினுந் தூயதாகும்; அவன் தன் தலையினின்றும் எடுத்துத் தூவப்படும் மலர், அவன் தன் அன்பையே எம்மேற் சொரிவதுபோ லுள்ளது; அவன் அன்பினாலிடும் மென்மலர், நான்முகன் முதலான தேவர்கள் தூவும் பூவை விடச் சிறந்தனவாகும்; அவன் தன் அன்பின் இனிமை யாற் சுவைத்தறிந்து எமக்குப் படைத்த ஊன், பல் ஊழி காலம் தவமுயலும் முனிவர் உயிர்களைக்கொன்று வேட்கும் வேள்வியின் ஊனை விடச் சிறந்ததாகும். இன்னும் மறைகளிற் கூறிய மறை மொழிகளும், முனிவர்களாற் கூறப்படும் இன்பந்தரும் வணக்கப்பாட்டுக்களும், எம் முன்னேயிருந்து அத் திண்ணன் தன் முகமலர்ச்சியோடு மன நெகிழ்ந்து என்னையன்றி மற்றொருவரையும் அறியாது கூறும் அன்புரைகளுக்கு ஒரு சிறிதும் ஈடாகமாட்டா. நீ நாளை ஒளிந்திருந்து அவன் என்னிடம் காட்டும் அன்பு நிலையைக் காண்பாயாக,' என்றருளினார்.

முனிவர் தம் கனவிற் சிவபிரான் உணர்த்தியதை நினைந்து வியப்புற்றவராய், அன்றிரவு முழுதும் உறங்கா

திருந்து விடியற்காலையில் விரைந்து எழுந்து போய் நீராடி மலையேறிச் சென்று காளத்திப் பிரானார் பின் பக்கம் ஒரு மறைவில் ஒளித்திருந்தார். கரிய வான் போன்ற அழகிய திருமேனியுடைய திண்ணனார் தம் முறை வழுவாது சிவ பிராற்கு வழிபாடாற்றி வந்த அவ் ஆறும் நாளில், முனிவர் வருவதன் முன் இறைவற்கு உணவுகொண்டுவரக் காட்டுக் குட் சென்றார். திண்ணனார் ஊனுணவும், தூய பூவும், நீரும் வழக்கம்போல் தாங் குறிப்பிட்ட இடங்களில் எடுத்து அமைத்துக்கொண்டு விரைந்து மலை ஏறிப் போம் போது, வழியிற் பல தீக்குறிகள் கண்டு எம் பிராற்கு யாது தீங்கு நேரிட்டதோ என்று கலங்கினார். காளத்தி யார் முனிவருக்குத் திண்ணனாரது அன்பின் மிகுதியைக் காட்டத் தம் திருக்கண்களில் ஒன்றிலிருந்து குருதி நீர் பொங்கி ஒழுகுமாறு காட்டினார். சிவபிரானது கண் ஒன் றிற் செங்குருதி நீர் பெருகுவதைக் குறிப்பாகத் தொலை விற் கண்ட திண்ணனார் மிக விரைவாய் ஓடிவந்தார். வந்த வர் காளத்தியாரது வலக்கண்ணிலிருந்து செந்நீர் பெருகி ஓடுவதை உண்மையாகக் கண்டு மயங்கினார். தாங் கொண்டு வந்த ஊனும், பூவும் நீரும் வில்லுங் கீழே சோர்ந்து விழு வதும் அறியாராய்த் திண்ணனார் நிலத்திடை பதைபதை த்து வீழ்ந்தார். நிலத்தில் வீழ்ந்தவர் எழுந்து பிரானார் கண்ணினின்றும் வரும் செந்நீரைத் துடைத்தார்; துடைத் ததும் அஃதொழிந்திடக் காணார்; அதனை நிறுத்த வகை யொன்றும் அறியாராய் மறுபடியும் மயங்கி வீழ்ந்தார். பின் சிறிது நேரத்திற்கப்பால் தெளிந்து எழுந்து காளத்தி யப்பனுக்கு இத்தீங்கு செய்தார் யாரென்று பல திசைகளை யும் சுற்றி நோக்கி வில்லுங் கணையும் எடுத்துக்கொண்டு காடு முழுதுந் திரிந்தார். அத்தீங்கிழைத்த வேடரையும் தீய விலங்குகளையும் யாண்டுங் கண்டிலர். ஆதலால், மீண்

டும் இறைவனிடம் வந்து அவனது திருவடிகளைப் பற்றிக் கொண்டு, "இத்தீங்கு எம்பிரானுர்க்கு எவ்வாறு நேரிட்டதோ," என்று கதறிக் கண்ணீர் அருவிபோற் பாயுமாறு அழுதார். பின்னும், எழுந்து "யாது செய்தால் கண்ணில் வடியும் இச்செந்நீர் நீங்குமோ? இது செய்தாரையுங் காணேனே; இதனை நிறுத்தப் பச்சிலை மருந்தாயினுங் கொண்டு வருவே," னென்று காடு முழுதும் அலைந்து பச்சிலைகளைப் பறித்துக் காற்றினுங் கடுகி வந்து, அவைகளை இறைவனுர் திருக்கண்ணிற் பிழிந்தார். இவ்வாறு திண்ணனுர் பிழிந்த எவ்வகை மருந்தினுலுங் குருதி நில்லாமை கண்டு, 'இனிச் செய்வதுதான் யா'தென்று நினைத்தார். பின் 'ஊனுக்கு ஊனிடல் வேண்டும்' என்னும் பழமொழியை உணர்ந்து, 'இனி இறைவற்கு இக் கொடுங் குருதி நீர் நிற்பதற்கு என்னுடைய கண்ணை அம்பினுற் பெயர்த்து எடுத்து அவரது கண்ணிற்கு மருந்தாய் அப்பினுல் அது தீரும்' என்று களிப்பு நிறைந்த மனத்தோடும், இறைவன் முன் நின்று தம் கண்ணைப்பெயர்த்து முதல்வர் வலக்கண்ணில் அப்பினுர்; அப்பினதும் குருதிநீர் நின்று விட்டது. இது கண்ட திண்ணனுர் பெருமகிழ்ச்சியால் துள்ளிக் குதித்துக் கூத்துமாடி 'நன்று நான் செய்தேன்! எம் தந்தையார் நலமடைந்தார்,' என்று உரை வரம்பு கடந்து பலப்பல கூறிக் களிப்படைந்தார்! இன்னுந் திண்ணனுரது அன்பினைக் காட்டக் காளத்தியப்பர் தமது இடக்கண்ணினின்றுங் குருதி வடியுமாறு காட்டினுர்.இது கண்ட திண்ணனுர் கண்ணிழந்தான் அதனைப் பெற்று மறுபடியும் அக்கண்ணை இழந்து கடுந்துன்ப மடைவதுபோற் பெருந்துயரடைந்தார். ஆனுல், திண்ணனுர் தம் இன்னெரு கண்ணும் மருந்தாக இடந்து அப்புவதற்கு உளதெனும் உணர்வு தோன்றவே மகிழ்ச்சிகொண்டு உடனே, சிவ

பிரானது ஊனமுற்ற கண்ணின்பால் அடையாளத்திற்காகத் தம் செருப்புக் காலை ஊன்றிப், பகழிகொண்டு தம் இடக்கண்ணைப் பெயர்க்கத் தொடங்கினுர்; அப்போது சிவபிரான் அதனைப் பொறுராய்த் தம் திருக்கையால் திண்ணனுரது வலக் கையைத் தடுத்து "நில்லு கண்ணப்ப; நில்லு கண்ணப்ப; என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப," என்றருளிக் கண்ணப்பர் அது செய்யாவாறு நிறுத்தி, அவரை ஆட்கொண்டு தம் பக்கலில் என்றும் இருக்குமாறு பேரருள் புரிந்தார்.

வரலாறு முற்றிற்று.

---

# கண்ணப்பர் வரலாற்றின் ஆராய்ச்சி

## முன்னுரை

கண்ணப்பர் வேடர்களுக்கு அரசனுகிய நாகன் என்பானுக்கு மகனுய்ப் பிறந்தவர். இவர்தம் தாய் தந்தையர் உற்றூர் நண்பர் முதலான எல்லாருங் கொடுந் தொழில் செய்யுங் கடுங்கண் வேடர்களாவர். இவர்கள், இருண்ட காட்டினூடே அங்குமிங்கும் புதர்களில்மறைந்து அச்சத்தோடு வாழுங் கொடிய விலங்குகளையுங் கள்ளமற்ற மான் முயல் முதலிய அமைதியான உயிர்களையும் வேட்டையாடிக் கொன்று, அவைகளின் ஊனை நெருப்பில் வதக்கித் தின்று உறங்கிக் காலங் கழிக்கும் இரக்கமிலா நெஞ்சத்தவர். இன்னுமிவர்கள் கற்றூர் தம் சேர்க்கையும் திருத்தமான அறிவும் உடையவரல்லர்; கல்வி என்னுஞ் சொல்லைக் காதிற் கேட்டவருமல்லர். கொலை செய்தல்,

உண்ணல், உறங்கல், இன்புறுதல் என்னும் இவைகள் மட்டுமே அறிந்தவர்கள். இத்தகைய வேட்டுவக் கூட்டத்தினிடையே பிறந்த கண்ணப்பரும் அவரினத்திற் கேற்ற கறுத்த மேனியும் திண்ணிய உடம்பும் உடையராய்க் காட்டிற் றிரிந்து உயிர்களைத் துடிதுடிக்க வேட்டையாடுங் கொடுஞ் செயலிற் பழகிவிட்டவர். இறைவனைப் பற்றிய நினைவு சிறிது மில்லாதவர். இத்தகைய கண்ணப்பர் எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளிடத்துப் பேரன்பு கொண்டதும் இறைவன் அவரை ஆட்கொண்டதும் பெரியதொரு வியப்பினையே தருகின்றன.

கண்ணப்பரது வரலாற்றைப் பாடிய புலவர்களும் சமயாசிரியர்களும், அறிவில்லா வேடராய்ப் பிறந்த இவர் சிவபிரானிடத்து அளவில்லா அன்பு கொண்டது எவ்வாறோ என்று வியந்து பாடியிருக்கின்றார்கள். இவ்வாறு ஒன்றினொன்று மாறுபட்ட இருதன்மைகள் இப்பெரியாரிடத்திற் காணப்படுவது ஏன் என்பது ஆராயற்பாலதாயிருக்கின்றது.

## 1. முற்பிறவி உண்டு

இறைவனது பேரருளாற் படைக்கப்பட்ட மக்களெல்லாருந் தாந்தாம் எடுத்த ஒரு பிறவியிலேயே முழு அறிவு பெற்று இறைவனருளைப் பெறுதல் முடியாது.

"எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்

என்று தாயுமான அடிகள் அருளிச்செய்தபடி நமக்கு எண்ணுக் கடங்காப் பிறவிகள் உண்டு. மக்கள் தாம் ஒவ்வொரு பிறவியிலுஞ் செய்து வரும் வினைக்கேற்பவே உயர்ந்தோராயுந், தாழ்ந்தோராயும் பிறக்கின்றனர். நல்வினை தீவினை என்னும் இருவினைகளின் பயனளவாகவே மக்கட் பிறவி மிகுந்துங் குறைந்தும் வருகின்றது.

ஆனால், இஞ்ஞான்று வேறு சமயத்தார் சிலர் இப் பிறவியைத் தவிர மறுபிறவி என்பது ஒன்றில்லை என்றும், மக்களுள் நல்லார்கள் இறந்த உடன் மேலுலகஞ் சென்று இறைவனோடிருக்கத், தீயர்களோ மீளா நரகிற் கிடப்பரென்றும், ஆதலால் மக்கள் மறுபடியும் இவ்வுலகிற் பிறப்பவரல்லரென்றுங் கூறிநிற்பர். இதனை ஒரு சிறிது ஆராய்வாம்.

மக்கட் பிறப்பானது நமக்குத் தீடீரெனத் தரப்பட்டதன்று; அது முதன் முதற் புல்லையும், பூண்டாயும், அதன் பின் மரங்களாயும், பறவை விலங்குகளாயும் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோற்றுவிக்கப்பட்டதாகும். இவ்வாறு மக்கட் பிறவி வருவதற்கு முன், உயிர்கள் ஓரறிவுடைய புல், பூண்டு முதலியவைகளாகப் பிறந்து வளர்ந்து அவற்றின்கண் இருந்து ஒரு சிறிது அறிவு விளங்கிப், பின் அதனினும் மேற்பட்ட அறிவு உண்டாவதற்குத் தக்க ஈரறிவுயிர்களான புழுக்களாயும், மூவறிவுயிர்களான சிதல் எறும்புகளாயும், நாலறிவுயிர்களான நண்டு தும்பிகளாயும், ஐந்தறிவுயிர்களான பாம்பு, பறவை, விலங்குகளாயும் பிறந்து முறை முறையே அறிவு விளங்கப் பெறும். மக்களாய்ப் பிறந்த நாம் இப்படிக் கீழ்ப் பிறவிகளிலிருந்து சிறிது சிறிதாக அறிவு விளங்கப் பெற்று, முடிவில் நல்லது இது, தீயது இது என்று பகுத்துணரும் ஒரு சிறந்த ஆற்றலோடு கூடிய ஆறறிவுடையவர்களாய்ப் படைக்கப்பட்டோம். இதனை விளக்குதற்கே மாணிக்கவாசகப் பெருமான்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்,"

என்றருளிச் செய்தனர்.

---

## 2. பிற் பிறவிகளும் பல

இன்னும், இறைவனருளால் நமக்கு வாய்த்த இப் பகுத்துணர்ச்சிகொண்டு நாம் பிழை யொன்றுஞ் செய் யாமல் நல்லவைகளையே செய்து இறைவனிடத்துப் பேரன்புடையராய் ஒழுகி அவனருளைப் பெறுதல் நமக்கு ஒரு பிறவியிலேயே கிட்டுவதும் அன்று. பல பிறவிகள் எடுத்து அவற்றின்கண் நாம் செய்து வரும் வினைகளால் அறியாமை தேயத்தேய மெல்ல மெல்ல நம் அறிவு விளங்காநிற்கும். அங்ஙனமன்றி, மக்கட் பிறவி ஒன்றிற் புகுந்த அப்போதே, நாம் பகுத்துணர்வுடையராய் நல்லவைகளையே செய்து இறைவனிடத்துப் பேரன் புடையராய்அகங்குழைந்து தஞ் செயலற்று அருட் செய லின் வழியராய் நிற்றல் இயலாது. ஏனெனில், நல்லவை களையே செய்து உயிர் வாழுந் தூய உள்ளத்தார் ஒரு சில ரேயாவர். கொலை, களவு, பொய், சூது, கள், காமம் என் னும் ஆறுந் தமக்குத் துன்பஞ் செய்வன என்றறிந்தும், மக்களில் எத்தனைபேர் கொலை செய்தல் கொடுஞ் செயல் என்பதுணர்ந்திருந்தும், அதனை விலக்காது, தமக்குட் பெருஞ் சீற்றங் கொண்டு ஒருவரை ஒருவர் குத்திக் கொன்று கொடுந் தீவினைக் குள்ளாகின்றனர்; வழிப் போக்கரை மறித்துக் கொன்று அவரது பொருளையுங் கவர்ந்து, அவரையுங் கொலை செய்யுங் கன்மனக் கொடிய ரும் பலர் அல்லரோ; கடும் பொய்களைச் சொல்லித் தமக்கும் பிறர்க்கும் கேடு சூழ்வார் எண்ணிறந்தா ரல் லரோ! பெருங் கேடு விளக்குஞ் சூதாட்டத்தில் அல் லும் பகலும் ஈடுபட்டுத் தம் பேரறிவு, பெரும் பொருள், மானம் முதலியவைகளை இழந்து துன்புறுவாரையுங் கண்டாமன்றே! இங்ஙன மெல்லாந் தீயவைகளையே செய்து தீயவர்களாய் வாழ்பவர் இறந்தவுடனே மேலுல

கஞ் சென்று இறைவனிடத்துப் பேரின்பம் நுகர்வ தெப்படி? தம் பகுத்துணர்ச்சி கொண்டு தீயவைகளை விலக்கியும், நல்லவைகளைச் செய்தும் இறைவனிடத்துப் பேரன்பு பூண்டும் ஒழுகுந் தூய உள்ளத்தவரே இறைவனைக் காண முடியாமல் துன்புறுவார்களானால், பெரும்பாலுந் தீய எண்ணத்திலுந் தீய செயலிலும் மூழ்கிக் கிடக்கும் நம்மனோர் இறந்த வுடனே மேலுலகஞ் சென்று இறைவனோ டிருப்பது எவ்வாறு கைகூடும் கூறுமின்கள்!

இனித், தீயவர் எக்காலத்தும் நரகிற் கிடப்பரென்பதும் பொருந்தாது. இறைவன்றன் பேரிரக்கத்தால் உலகத்தையும் உடம்பையும் மக்கட்குப் படைத்துக் கொடுத்து, அவ்வாற்றால் அவர்கள் இன்ப துன்பங்களைப் பகுத்துணர்ந்து நுகர்ந்து தம் வாழ்க்கையை நடத்துமாறு ஏவுகின்றான். ஒரு பிறவியில் தீயவைகளையே செய்து இறப்பவர் எப்போதும் அறிவு விளக்கமின்றி அளறிலேயே கிடந்து உழலுமாறு செய்வனாயின் இறைவன் இரக்க முடையன் ஆவனோ? அவன் அன்பும் இரக்கமுமே உருவாய்க் கொண்டவனாதலின், தான் படைத்த மக்கள் தீயவைகளையே செய்து இறந்தாலும், அதற்காக அவர்களை எப்போதும் நிரயத்திற் றள்ளித் துன்புறுத்துவானல்லன். அவர்கள் செய்த தீவினைக் கேற்றவாறு அவர்கட்குப் பிறவிகள் தந்து அவற்றால் அவர்கள் தம் தீவினைப் பயன்களை நுகர்ந்து நுகர்ந்து பின் அவற்றை ஒழித்து அறிவு விளக்கம் பெற்று, மேலோங்குமாறே செய்தருள்வன்.

இன்னும், இறைவனருளைப் பெற உரியராகும் வரையில் அளவிறந்த பிறவிகள் வரும். "எத்தனையோ பிறவிகளெடுத்தெடுத்து எய்த்தேன்; இனிமேலாயினும் பிறவி

யாகிய கருப்பைக்குள் யான் நுழையாவாறு அருள் புரிக" என்று பட்டினத்தடிகள்,

"மாதா உடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னைக்
கருப்பையூர் வாராமற் கா"

என்னுஞ் செய்யுளால் இறைவனை வேண்டிக் கேட்டல் காண்க.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூறு மாற்றானும் நமக்குள்ள பிறவிகளானவை கடல்போல் அளவிட முடியாமல் விரிந்து கிடத்தல் அறியப்படும். ஒவ்வொரு பிறவியிலும் நாம் பல் வேறு செயல்களைச் செய்தும் பல் வேறு பொருள்களை அறிந்தும் இன்ப துன்பம் நுகர்ந்து தெளிவு பெற்று, இறைவனை ஓயாமல் எண்ணி எண்ணி அதனால் அவ்வெண்ணம் நம் மனத்திற் காழ்ப்பேறப் பெற்றுக்கொண்டுவந்தாற்றான் முடிவில் வரும் பிறவியில் பிறவிப் பெருங் கடலை நீந்திக் கடந்து அவனருளைப் பெறலாம். அங்ஙனம் ஒரு பிறவியிலாயினும் இறைவனைப் பற்றி நினையாதவர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேற மாட்டார்கள். இறவாமையே மீண்டும் பிறவாமைக்கு அடையாளமாகும். இறந்தால் மறுபடியும் பிறத்தல் வேண்டுமே யென்று வருந்தி மணிமொழிப் பெருமான் "இறப்பதனுக்கு என் கடவேன்" என்றருளினர். இறத்தல் மீண்டும் பிறத்தலுக்கு ஏதுவாதலாலே நம் தெய்வ ஆசிரியர்கள் தம் உடம்பை நிலத்தே விட்டுச் செல்லாமல் அதனுடனாகவே இறைவனருளிற் கலந்தனர்.

மக்களுக்கு மறு பிறவி இல்லை என்று கூறும் மேனாட்டவருள்ளும் ( Dr. Schiller and Prof. Williamjames ) டாக்டர் சில்லர், புரோபசர் உவல்லியம் ஜேம்ஸ் என்னும் பெரியார்கள், இறைவனருள் தமது அறிவகத்தே நின்று உந்துவதால் தம் நூல்களில் மறுபிறவி யுண்மையினையும், இறைவனிலக்கணங்களையுங் கண்டறிந்து எழுதுவாராயினர். நமக்குப் பல பிறவிகள் உண்டு. அவைகளிலிருந்தே சிறிது சிறிதாக அறிவு விளங்கப்பெறுகின்றோம் என்னும் உண்மைகளை இவர்கள் பல எடுத்துக்காட்டுகளால் நன்றாக விளக்கியிருக்கின்றார்கள்.

## 3. முற்பிறவி பிற்பிறவிக்குச் சில எடுத்துக்காட்டுகள்.

இன்னும், முற்பிறவி பிற்பிறவி உண்டென்னும் உண்மைகளைச் சில எடுத்துக்காட்டுகளாலும் விளக்குவாம். வடநாட்டில் இராமகாளி என்னும் ஆறுண்டுள்ள சிறு பெண் ஒருத்தி தனக்குப் பிள்ளைகள் உண்டென்றும், அவர்களைப் பார்க்க இன்ன ஊருக்குப் போகவேண்டுமென்றும் தன் தாய் தந்தையரிடம் ஓயாது சொல்லிவந்தாள். ஆனால், அவடன் தாய் தந்தையரோ அவள் ஏதோ அறியாமற் புலம்புகின்றாளென்று கருதி அவள் சொல்லுவதை உன்னியாதிருந்தனர். மேலும் மேலுந் தான் குறித்த ஊருக்குப் போய்த் தன் அருமைக் குழந்தைகளைப் பார்த்துவரவேண்டுமென்று ஒரே பிடியாக அழுதாள். இது கண்ட தாய் தந்தையர் அக் குழந்தையை ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு அவள் குறிப்பிட்ட ஊரில் ஒரு தெருவிலுள்ள வீட்டிற்குச் சென்றனர்.

சென்ற அப்பெண் தனக்கு முற்பிறவியில் அவவீட்டிலுள்ள ஆண் மக்கள் பிள்ளைகளாயும், அப்பிள்ளைகளின் மனைவியர் மருமக்களாயும் இருந்தன ரென்பதைத் தக்க சான்றுகளோடு எடுத்துக்காட்டினள். இன்னும் பல அடையாளங்களையும் அவ்வீடு கட்டிய ஆண்டினையுந் தெளிவாகக் கூறினள். புதுமையான இவளது வருகையைக் கண்ட அவ்வூரவரெல்லாரும் அங்குக் கூடினர். அவருட் சிலர் கேட்ட அடையாளங்கட்கெல்லாம் ஐயம் நீங்க விடையளித்தனள். அதன் பிறகு அவள் பிள்ளைகள் அவளைத் தம்முடனே யிருக்குமாறு எவ்வளவோ வேண்டியும், இன்னொருவருக்கு மகளாய்ப் பிறந்த யான் இங்கு உம்முடனிருக்க ஏலாதென்று கூறித் தன் தாய் தந்தையருடன் வீடு நோக்கிச் சென்றாள்.

இன்னும் சார்லஸ் ஜான்ஸ்டன் (Charles Johnston M. R. A. S.,) என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் 'பழம்பிறவி நினைவுகள்' (The memory of Past Births) என்றெழுதிய அருமையான நூலில் அறிவுடையார் சிலர் தம் முற்பிறவிகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூற, அவ் வரலாறுகளை எடுத்தெழுதியிருக்கின்றனர். அவைகளில் ஒன்றிரண்டை ஈண்டெடுழுதுவாம்.

"இரண்டு அரிமா (சிங்கம்) வின் கால்களினிடையே ஒரு பெரிய அழகிய கோயிலும், அதனமைப்பும், அக் கோயிலில் நிகழ்ந்த வழிபாட்டு நிகழ்ச்சிகளும், அக்கோயிலுள்ள ஊரின் அழகிய தோற்றமும் ஒருவனுக்கு அடிக்கடி நினைவில் வந்துகொண்டிருந்தன; ஆனால் அவன் அவைகளைப் பார்த்ததுங் கேட்டதுமில்லை; பின்னர் அவன் ஒருகால் இந்நினைவை ஜான்ஸ்டன் (Johnston) என்னும் பெரியார்க்கு அறிவித்தான். அவர் அவன் கூறிய கோயிலும் ஊரும் எங்கு உள என்று பல இடங்களிலுந் தேடி

முடிவில், அவன் சொன்னவாறே சிறிதும் மாறுபாடின்றி அமைந்த கோயிலும் ஊரும் எகுபதி நாட்டி லிருக்கக் கண்டார். அவன் கூறிய வழிபாட்டு நிகழ்ச்சி மட்டும் காலவேறுபாட்டால் மாறுபட்டிருந்தது.

"இன்னும், மற்றொருவன், சீன நாட்டின்கண்ணதான ஒரு கோயிலில் மந்திர நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்தில், தான் அக்கோயிலில் இருந்ததனையும், அவ்விடத்தையும், அக்கோயிலிற் பேசப்பட்ட மொழியினையும், அங்கே நிகழ்ந்த நிகழ்ச்சிகளையுந் தெளிவாக நினைவு கூர்ந்து அவைகளைத் தன் கண்ணாற் பாராமலே சொன்னான். இவன் குறிப்பிட்ட அக்கோயிலும் மொழியும் சீனாவில் இருக்கின்றன." இவ்வாறு காட்டப்பட்ட உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டு அவ்வாசிரியர், "முற்பிறவிகளில் தமக்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பலர் சொல்லக் கேட்டு அவ்வுண்மைகளையும் அறிந்திருக்கின்றேன்; அதனால், மறுபிறவி இல்லை என்று சொல்லல் பொருந்தாது," என்று முடித்துக் கூறியிருக்கின்றார்.

அற்றேல், அமெரிக்காவில் உள்ள ஆங்கில அறிஞர்களிற் சிலர் கண்டறிந்த அறி துயில் (யோக நித்திரை, Hypnotism) என்னும் முறையில் சிலரைப் பழக்கி, அவர்கள் தாம் முன் கண்டிராத ஊரின் காட்சிகளையும், செய்திகளையும் அறிந்து சொல்லுமாறு செய்கின்றார்கள். அதுபோல், ஜான்ஸ்டன் ஆசிரியராற் குறிப்பிக்கப்பட்டவர்களுந் தாங் காணாத கோயிலையும், இடத்தையுஞ் சொல்லியிராரோ என்றால், அறிவுடையாரால் அறிதுயிலுக்குச் செலுத்தப்பட்டு அவ்வறிவுடையார் சொல்வழி நின்று தந்நிலை மாறி அதனால் 'தெளிவுக் காட்சி' பெற்றுப் பிறர்தம் பழம் பிறவிகளின் நிகழ்ச்சிகளைச் சொல்வாரும், தாமே இறைவனருளால் பெற்ற தெளிவுக் காட்சியில் தம்

பழம் பிறவிகளின் நிகழ்ச்சிகளைச் சொல்வாருமெனப் பழம் பிறவி கூறுவார் இரு திறப்படுவர். அறிதுயிலில் செலுத்தப்படுவார் தாம் கண்டிராத இடங்களையும் நிகழ்ச்சிகளையுங் கூறுவரேயல்லாமல், பழம் பிறவிகளைப் பற்றி அறிவாரல்லர். அறிதுயிலிற் செலுத்தப்பட்டு அதில் முதிர்ந்த தெளிவுக்காட்சி பெற்றார் சிலர்மட்டும் பிறர் தம் பழம் பிறவிகளிற் சில கூற வல்லராயிருக்கின்றனர். ஆனால் அறிதுயிலிற் செலுத்தப்படாமல் இறைவனருளாற் பெற்ற தெளிவுக்காட்சி கொண்டு தம்முடைய பழம் பிறவிகளின் செய்திகளைத் தாமே ஐயந்திரிபற உணர்ந்து கூறுவாரும் உளர் என்பதும் நாம் அறிந்த தொன்றாம்.

---

## 4. முற்பிறவி நிகழ்ச்சிகள் நினைவுக்கு வராத ஏது

அங்ஙனமாயின், முற்பிறவியின் நினைவுந் தோற்றமும் மக்களெல்லார்க்கும் வராமை யென்னையெனின், மக்கட் பிறவியில் துன்பமே மிகுந்திருத்தலின், அந் நினைவு மறு பிறவியில் நினைவுக்கு வராதவாறு இறைவன் மறைக்கின்றான். இப்பிறவியில் ஒருகால் நாம் நோயிலும் வறுமையிலும் நெருக்குண்டு மிகவும் வருந்தியபின் அத்துன்பங்களினின்றும் விடுபட்டு மகிழ்வாயிருக்கின்றோம். அப்போது முன் அந்நோயிலும் வறுமையிலும் பட்ட பாடுகளைக் கனவிலும் நனவிலும் நினைய நேர்ந்தால் அதனால் எவ்வளவு நடுக்கமுற்றுக் கண்ணீர் விடுகின்றோம்! ஒரு பிறவியில் நடந்த சில கொடிய நிகழ்ச்சிகளே நமக்குத் தாங்கொணாத் துன்பந் தருவவெனில் முன்னைப் பல பிறவிகளிலும் நிகழ்ந்த பலப்பல கொடுந் துன்பங்களெல்லாம்

இப்பிறவியில் ஒருங்கே தொடர்ந்து நினைவுக்கு வருமாயின் அவைகளை நாம் எங்ஙனந் தாங்குவேம்! துன்ப நீக்கத்தால் மேலும் மேலும் அறிவு விளங்குதற்பொருட்டே நமக்குப் பல பிறவிகள் தரப்படுகின்றனவாதலால், முற்பிறவிகளின் துன்ப நினைவுகள் நமக்கு வராமற் செய்து வரும் இறைவன்றன் அருளுதவியின் மாட்சியினை எங்ஙனம் எடுத்துரைக்க வல்லேம். ஆகவே முற்பிறவி நிகழ்ச்சிகள் நினைவுக்கு வாராமை கொண்டு அவை யில்லை யென்றல் ஆகாது. மேலும் மக்கள் ஒரு பிறவியிலேயே முற்றறிவுடையராதல் இல்லை; பல பிறவிகளிலுஞ் சென்று அறிவு வளரப்பெற்றே முடிவில் இறைவனருளைப் பெற வல்லராவரென்று முணர்தல் வேண்டும்.

## 5. கண்ணப்பரின் முற்பிறவி நிலை

ஆதலால் கண்ணப்பரும் முன்னைப் பல பிறவிகளிலுந் தாம் இறைவனைப்பற்றி ஆராய்ந்தறிந்து அறிவு மிகுதியாக அவனையே வழிபட்டு வந்ததனாலேதான் தாம் வேடராய்ப் பிறந்த பிறவியிலும் எளிதிலே சிவபிரானருளைப் பெற்றுப் பேரின்ப நிலையை அடைந்தார். கண்ணப்பர் முன்னைப் பல பிறவிகளிற் பேரறிவுடையராய் இறைவனுண்மை கூறும் பலகலைகளைக் கற்றுணர்ந்தவரென்பது 'கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க் கடியேன்' என்று சுந்தரமூர்த்தி அடிகள் திருத்தொண்டத் தொகையில் விளக்கினமையானும் நன்கு பெறப்படும். ஆனால் கண்ணப்பர் முன்னைப் பிறப்பிற் புலமைமிக்க பெரியராயிருந்தது உண்மையாயின் அதற்கேற்ப அவர் தமது பிற்பிறவியில் உயர்ந்த மக்கள் பாற் பிறவாது கொலைஞரான வேடர்களிடையே பிறந்த தென்னை எனிற் கூறுதும்.

## 6. முற்பிறவியில் உயர்ந்தோர் பிற்பிறவியில் தாழ்ந்த குடிப்பிறத்தல்

இறைவனருளைப் பெற்றவர்க ளெல்லாரும் உயர்ந்த குடியிற் பிறந்தவர் தாமா? மக்கள் சிறந்த குடியிற் பிறந்த அளவானே உள்ளந் தூயராய் ஒழுகுதல் உண்டா எனின்,

'கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி'

என்றும்,

'அணுவை யார்க்குந் தெரியாத தத்துவனை'

என்றும் எழுந்த தெய்வத் திருமொழிகளால் மக்களினும் உயர்ந்த தேவர்களே இறைவனைக் காணாது துன்புறு கின்றாரெனில், மக்களுட் செல்வத்தால் குலத்தாற் சமயத் தால் நாகரிகத்தாற் சிறந்த குடியிற் பிறப்பவர் அங்ஙனம் பிறந்த ஏதுவினாலேயே இறைவனிடத்துப் பேரன்பு கொள்வ ரென்பது வழக்கிற் காணப்படவில்லை. பல அறிவு நூல்களைக் கற்றுப் பெரும் புலமையின் மிக்காருங்கூடக் கடவுளே இல்லை என்று கரைதலைக் காண்கின்றோம். பெரியபுராணத்திற் கூறிய அறுபத்து மூன்று நாயன்மார்க ளுள்ளும் பலர் உயர்ந்தகுடிப் பிறவா திருந்தே இறைவ னிடத்துப் பேரன்பு பூண்டு அவனருள் பெற்றனர்.

அற்றேல், அறிவு நூல்கள் பயின்று திருந்திய அறிவு பெறுதாருங் கடவுளிடத்து மிகுந்த அன்பு பூண்டு அவனருளைப் பெறும் பெரும்பேறு வாய்ப்பரென்றன்றோ கூறல் வேண்டுமெனின், அங்ஙனம் வினவுதல் சிறிதும் பொருந்தாது. ஏனென்றால், யான் மேற்கூறியவாறு பிற்பிறவியில் அருள் பெற்ற பெரியோர்கள், முன்னைப் பல பிறவிகளிற் பல கலைகளுங் கற்று அறிவு விளங்கி, அதனால் தெய்வமென்பதோர் அழிவிலாப் பெரும் பொருள் உண்டு

என்பதறிந்து, முடிவாக அதனைக் காணும் பேரவாவுடையராய் 'அப் பிறவிகளை விட்டு நீங்கிப் புதியதொரு பிறவிக்கு வருகின்றனர். ஆதலின், இனி, இறைவனருள் பெறுதல் ஒன்றே வேண்டு மென்னும் பெரு வேட்கையே அவருள்ளத்திற் கடைசியாக எஞ்சி நிற்பதாகும். அவர் அதற்கு ஏற்ப அவனருள் கைகூடும். ஒரு பிறவியிற் பிறந்து தாம் கடைபிடியாகக் கொண்டு வந்த வேட்கையின்படி இறைவன்பாற் பேரன்புடையவராகிப் பிறவியை ஒழிப்பர்; அவர்கள் இந்தக் குடியிற்றான் இந் நிலையிற்றான் பிறத்தல் வேண்டு மென்று நாம் வரையறுத்தல் ஒவ்வாது.

மேலுஞ், செல்வக் குடிகளிற் பிறப்பது உலக இன்பங்களில் ஒருவரறிவைச் செலுத்துந் தன்மைத் தாகலினானும் உயர்ந்த குலத்திற் பிறப்பது இறுமாப்பை விளைத்தலினானும், சிறந்த குடியினும் இழிந்த குடிப் பிறத்தலே அவர் அவ்விருபேர் இடையூறும் நீங்கித் தாங்கொண்ட பெருவேட்கையின்படி இறைவனருளைப் பெறுதற்குப் பெரிதும் இடஞ் செய்வதாகும். ஆதலால், உள்ளன்போடு உருகி வழிபடும் பிறவி புழுவாயிருப்பினும் அதுவே அவர்கட்குச் சிறந்த பிறவியாகும். இவ்வுண்மை,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்"

என்று நம் சமயாசிரியராகியஅப்பர் பெருமான் விளக்கிய வாற்றால் நன்கு தெளியப்படும்.

எவ்வளவு பேரறிஞர்களே யாயினும், அவர்கள் இறைவனைத் தெளியாராயின் அவர்கள் உள்ளத்தில் இறைவன் விளங்கித் தோன்றான்.' தன்னை அன்போடு நினையாதார் உள்ளத்தில் மறைந்திருப்பான், என்னுங்

கருத்தமைத்து "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" என்று மணிமொழிப் பெருமானும் அருளினரல்லரோ? ஆதலால், மேற் போந்த அருண்மொழியிற் கல்லார் என்னுஞ் சொல்லுக்கு இறைவனுண்மையைக் கல்லாதார் என்று பொருள் கொள்ளுதலே பொருத்தமுடைத்து. ஆகவே, உயர்ந்த குடியிற் பிறந்தவர்களேயானாலும், சடை வளர்த்து வாய் பேசாமல் பால் பழம் அருந்திப் பட்டினி கிடந்து தவமியற்றும் முனிவர்களேயானாலும், இறைவனை அகங்குழைந்து நினையாராயின், அவர்க்கு அவன் தன்னைக் காட்டமாட்டான். இது காறுங் கூறியவாற்றாற் கண்ணப்பர் இறைவனை உள்ளன்போடு நினையமாட்டாத உயர் குலத்தினர்பாற் பிறப்பதினும், உலகியலின்பங்களில் இழுப்புண்ணாமல், இறைவனிடத்துப் பேரன்பு காட்டுதற்குத் தக்க எளிமை வாய்ந்த வேட்டுவப் பிறவியிற் பிறந்ததே சாலவும் பொருத்தமாதல் பெறப்படும்.

அங்ஙனமாயின், உயர் குலத்திற் பிறந்த மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்திகள் முதலான சிவநெறித் தலைவர்கள் சிவபெருமானை நேரே கண்டு அவனருள் கூடப்பெற்ற தென்னையெனின், உயர் குடிப்பிறப்பு இறைவனருளைப் பெறுதற்கு ஒரு பெருந் தடையென்பதே யன்றி, இறைவனருளைப் பெறுதற்கென்றே அதிற் பிறந்தவர்கள் அதனால் உளம் செருக்கி இறைவனருளைப் பெறாது போதலும் இல்லை என்க.

## 7. கண்ணப்பரது முற்பிறவியில் அவர்க்கிருந்த மனநிலை

உயிர்களைக் கொல்லாமற் காய் கனி யுண்டு வாழும் எளிய குடிப்பிறத்தலை விட்டுச், சிற்றுயிர்களைப் பதை பதைக்கக் கொல்லும் இரக்கமில்லா வேடர் குடியிற் பிறந்து, சிற்றுயிர்கள் மாட்டு அன்பு கொள்ளாதவரான கண்ணப்பருக்கு இறைவன்பால் அன்பு நிகழ்ந்தமை பொருந்துமோ? மேலும், அன்பே இன்னதென்று அறியா ராகிய இவர் இறைவன்பால் அன்பு பாராட்டுதல்தான் யாங்ஙனங் கூடும்? என்று வினவுவார்க்குப் பின்வருமாறு விடை கூறப்படும்.

கண்ணப்பர் முன்னைப் பல பிறவிகளிலும் இறைவ னுக்கு ஆளாதல் வேண்டுமென்னும் எண்ணம் ஒன்றைத் தவிரப் பிறிது எண்ணம் ஏதுமே இல்லாதிருந்தவராகக் காணப்படுகின்றார். உணவுக்காக உயிர்களைக் கொல்வது குற்றமாதலை மேலைப் பிறவிகளில் உணர்ந்தவரல்லரென் பது அவரது இயற்கையிற் புலனாகின்றது. சிற்றுயிர்களின் ஊனைத் தின்பது குற்றமாகாது என்னுந் தவறான எண் ணத்திலேயே பழகி வந்தவராதலின் அப்பழக்கத்திற்கும் எண்ணத்திற்கும் ஏற்பவே அவர்க்கு வேட்டுவப் பிறவி வாய்த்தது. முன்னைப் பல பிறவிகளில் முதிர்ந்து வந்த இறைவனன்பும் இப்பிறவியில் அவர்பால் அளவுக்கு மிஞ்சிப் பெருகுவதாயிற்று என்று கொள்ளுதலே பொருந்துமென்க.

## 8. சிவநேயம் உடையார் இயற்கையில் உயிர்நேயம் இல்லாமையும் உண்டு

அவ்வாறுபின், சிற்றுயிர்களிடத்து அன்பு இல்லாதவர் இறைவனிடத்து அன்பு வைத்தல் யாங்ஙனங் கூடுமெனின், அயல் நாட்டுக் கிறித்துவம் மகமதியம் முதலான சமயங்களிலிருக்கின்ற பெரும்பாலார் கடவுளிடத்து மிகுந்த அன்புடையராயிருந்தும், ஊனுணவு கொள்ளும் பழக்க முடையவரா யிருக்கின்றனர்; ஊனுண்பதை குற்றமாக நினையாமலே இருக்கின்றனர். ஆகவே, அவர்கள்பாற் கடவுளிடத்து அன்பும், சிற்றுயிர்களிடத்து அன்பின்மையும் உடையாராயிருத்தலைக் காண்கின்றோம். ஊனுண்ணுச் சைவரில் எத்தனையோ பேர் கடவுளைக் கனவிலும் நினையாதவராயும், ஊனுண்போரிற் பலர் கடவுளிடத்து உருக்கமான அன்புடையராயும் இருத்தலையும் பார்க்கின்றோம். உற்றார் உறவினர் நண்பரிடத்து மிகுந்த அன்பு காட்டுகின்றவரும் இறைச்சி தின்று வாழ்கின்றனர். ஆதலால் சிற்றுயிர்களிடத்து அன்பின்மையாற் பேர் உயிர்களிடத்து அன்பு உண்டாகாது என்று சொல்லுதல் மக்களியற்கைக்குப் பொருந்தாது. மக்கள் தமக்கும் தம்மைச் சேர்ந்த அன்பர்கட்கும் உண்டாகுந் துன்பங்களை மட்டும் கூர்ந்து நோக்கி வருந்தும் அறிவுடையரா யிருக்கின்றார்கள்,; மற்றுச், சிற்றுயிர்களுக்கு வருந் துன்பத்தையோ அங்ஙனங் கூர்ந்து பார்க்கின்றார்களில்லை. தம்மவர் துன்பத்தை அறிவதில் அறிவும், சிற்றுயிர்களின் துன்பத்தை அறியாததில் அறியாமையும் மக்கள்பால் அமைந்து கிடக்கின்றன. இவ்வாறு மக்களிடத்துப் பொதுவாகக் காணப்படும் இவ் இருவேறு இயற்கைகள் கண்ணப்பரிடத்துங் காணப்படுவவாயின. கண்ணப்பரின் வாழ்க்கையிற் கட

வுள்பாற் பேரன்பும், ஏனைச் சிற்றுயிர்கள்பால் அன்பின்மையுங் காணப்படுகின்றன. இவ்வாறு ஒன்றினொன்று மாறுபட்ட இரு தன்மைகள் இப்பெரியாரிடத்துக் காணப்படுவதற்குக் காரணம் என்னவெனில், மக்கள் தாம் நாடோறுங் கண்டு பழகிவரும் பழக்கத்தால் உற்றார் உறவினரிடத்து மிகுதியாக அன்பு காட்டுகின்றனர். அங்ஙனம் பழகுவதில்லா ஏனைச் சிற்றுயிர்களிடத்தும், எல்லா உயிர்களையும் படைத்துக் காக்குங் கடவுளிடத்தும் இவர்கள் காட்டும் அன்போ மிகவுங் குறைவாயிருக்கின்றது. உண்மையில் இல்லையென்றே சொல்லலாம். யார் எவ்வுயிரிடத்து, அல்லது எந்த மக்களிடத்து, அல்லது எந்தக் கடவுளிடத்து மிகுதியாகப் பழகுகின்றார்களோ அவர் அவ்வுயிரிடத்து அல்லது அம்மக்கள் கடவுளிடத்து மிகுந்த அன்புடையராய் ஒழுகுதலை மக்கள் வாழ்க்கையில் நாம் நாடோறுங் கண்டு வருகின்றனம் அல்லவோ? இங்ஙனமே கண்ணப்பருந் தாம் பிறவியெடுத்த குடியின் சேர்க்கையாற் சிற்றுயிர்கள்பாற் பழகியறியாராய் அவற்றை வேட்டையாடிக் கொன்று அவற்றின் ஊனைத் தின்பதிலேயே பழகிவந்தவர்; இப்பிறவியில் இங்ஙனம் வேட்டுவக் குடியிற் பிறந்து பழகலானமைக்கு இவரது முற்பிறவியின் பழக்கமே காரணமாயிருத்தல் வேண்டும். அதுவேயுமன்றிச் சிற்றுயிர்கள்பால் அன்பு பூண்டு ஒழுகாது அவற்றை ஊனுக்காகக் கொல்வது குற்றமென்பதை அவர்க்கு அறிவிப்பாரும் அவரது குடியில் இருந்திலர். அவ்வேடர் சேர்க்கையினின்றும் நீங்கிச் சிவபிரானிடத்து அன்பு கொண்ட பின்னரும், காய், கனிகளை இறைவற்கு உணவாகக்கொடாமல், சிற்றுயிர்களை அன்பில்லாமல் வேட்டையாடிக் கொணர்ந்து அவற்றின் ஊனைப் படைத்ததும் அவர் முற்பிறவியினும் இப்பிறவியினும் பழகின பழக்கத்தினாலேயேயன்றி, வேறன்று.

## 9. இருவகை அன்பு நிலை

சிவபிரானிடத்து அன்புகொண்ட பின்னர்க் கண்ணப்பர் உலகத்தையும் உலகத்து மக்களேயுஞ் சிற்றுயிர்களையும் எல்லாம் அறவே மறந்தனர். ஏனென்றால், இறைவனிடத்து அன்பு காட்டும் முறை இருவகைப்படும். அவை, உலகு உயிர்களை முழுவதும் மறந்து இறைவனிடத்தே முற்றப்பதிந்த அன்புடன் ஒழுகுதலும், இறைவனிடத்துப் பதிந்த அன்பு உணர்வுகளோடு, உயிர்களிடத்தும் உணர்வுடையராய் அவற்றின் பால் அன்பு வைத்தொழுகுதலுமாம். திருஞானசம்பந்தர், மாணிக்க வாசகர் முதலான பெரியோர்கள் இறைவனிடத்து முழுதும் பதிந்த அன்பு உணர்வுகளுடையரானாலும் இறைவன் முகமாய்ச் சென்ற தமது அன்பையும் உணர்வையும் இடையிடையே திருப்பி உலகத்தார் பாலும் உயிர்கள் பாலுஞ் செலுத்துந் தன்மையரா யிருந்தார். மேலும், இவர்கள், உலகத்தார் இறைவனை அறிந்து கரையேறுதல்வேண்டுமே யென்னும் உணர்விஞலும் பேரிரக்கத்திஞலும் உந்தப் பட்டு மக்களிடையே யிருந்து அவர்கட்குப் பல நன்மைகளைச் செய்து அவர்கள் பொருட்டுச் சில பல துன்பங்களும் அடைந்து அருள் பெற்றனர். இறைவ னுண்மைகளை உலகத்தார்க்கு அறிவிப்பதன் பொருட்டே இப்பெரியார்கள் இவ்வுலகிற் றோன்றினராதலின் ஏனை உயிர்களையும் நினைந்து அன்பு பாராட்டுவா ராயினர். ஆனாற் கண்ணப்பரோ உலகத்தாரிடத்தும், ஏனைச் சிற்றுயிர்களிடத்தும் அன்பு வைத்தலில் உணர்வு சிறிதுஞ் செல்லப் பெறாதவராய் இறைவனிடத்து மட்டுமே முற்றும் பதிந்த அன்பும் உணர்வும் உடையரா யிருந்தார். மெய்கண்ட தேவர்

'மீளாது உலேவில்அரன் பாதத்தை உற்று' (சிவஞான போதம், அ—ஆஞ்சூத்திரம்) என்றருளிச் செய்திருத்தலே உற்று நோக்குங்கால், இறைவனிடத்துச் சென்ற பெரியோர்களின் அன்பும் உணர்வும் அவனே விட்டகலா என்பது புலனுகாநிற்கும்.

## 10. சமயாசிரியரின் அன்பு நிலே

திருஞானசம்பந்தர், மணிமொழிப்பெருமான் முதலிய ஆசிரியரின் அன்பும் உணர்வும் மட்டும் உலகத்தை நோக்கித் திரும்பியவா றென்னே யெனின், அப்பெரியார்களும் உடம்போடுகூடி இவ்வுலகின்கண் இருந்தமையின், உடலுள்ள வரையில் ஆணவமலத்தின் பற்றுச் சிறிது உடையராய்த், தம் உணர்வும் அன்பும் இறைவனிடத்து முழுதும் பதிந்திருந்தாலும், இடையிடையே உலகத்தை நோக்கியும் உணர்வு முனேக்கப் பெற்று மக்களுக்கு நன்மை செய்தனர்.

"வான்கெட்டு மாருதம் மாய்ந்துஅழனீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டுஎன் னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

—(திருவாசகம்)

என்று மணிமொழிப் பெருமான் அருளியபடி, இப்பெரியார்கள் அடியோடு இவ்வுலகத் தொடர்பை மறந்து, ஊன், உயிர், உணர் வெல்லாம் உருகி ஒன்றுபட்டு இறைவன் திருவடிக்கீழ் ஒடுங்கிய பின்னர்த்தான் அவர்தம் உணர்வும் அன்பும் இவ்வுலகை நோக்கி முனேயாவாய் நிற்கும்.

## 11. கண்ணப்பரின் உணர்வுநிலை

கண்ணப்பர் தம் உணர்வும் 'மரப் பொந்தைப் பற்றி விடாத உடும்புபோல்' இறைவனைப்பற்றி நின்றாலும், உடலின் றொடர்பால் இடையிடையே இறைவற்கு உணவு கொண்டு வருதற்பொருட்டு வேட்டையாடுந் தொழிலில் முனைத்தது உண்மையே; என்றாலும், இறைவனைச் சிறிது பிரிந்து நின்ற கண்ணப்பரது உணர்வு அவனுக்கு உணவு கொண்டு வருதல் ஒன்றிலே மட்டும் முனைந்து நின்றதன்றி அஃது உலகத்தின் வயமாய் மக்களிடத்துத் திரும்பிற்றிலது. இஃது இறைவன்பாற் பித்தேறி அவர் அவனெதிரே அசைவற்றுநின்று நெடு நேரம் வணங்கிக் கொண்டிருந்தபோது தம்முடன் வந்த நாணன் தமது பக்கத்தே யிருந்து அழைத்தும் அதனை அவர் சிறிதும் உணர்ந்திலாமையின்கண் வைத்து நன்கு அறியப்படும். கண்ணப்பரது இந் நிலைமையினை நாணன் ஊர் போய் அவர்தந் தாய் தந்தையர்க் கறிவிப்ப, அவர்களும் அவர்பாற் போந்து அவரைத் தம்முகப்படுத்த எவ்வளவோ முயன்றும், அவர்தம் உணர்வுஞ் செயலும் அம்மக்கள்பாற் சிறிதுந் திரும்பியதின்மையும் நினைவிற் பதிக்கற்பாற்று.

"பதார்த்தங்கள் பாரார் பரமே பார்த்திருப்பர்" என்றவாறு சிவபிரானிடத்திலேயே கருத்தூன்றப் பெற்ற கண்ணப்பர் இறைவற்கு உணுக் கொண்டுவரும் பொருட்டுச் சிற்றுயிர்களை வேட்டையாடச் சென்றபோதுங்கூட இறைவனைத் தவிர்ந்த வேறெண்ணம் இலரா யிருந்தமையின், "காய், கனிகளே நல்ல; உயிர்களைக்கொண்டு ஊன் கொள்ளல் குற்றம்" என்று நினையாது, அதனைத் தமது குடிப் பழக்கமாய்ச் சிறு மகாரைப்போற் செய்தனரே

யன்றி, அவர் சிற்றுயிர்களிடத்து அன்பில்லாமல் அங் ஙனஞ் செய்தன ரென்று கொள்ளல் பொருந்தாது.

இன்னும் இறைவற்கு வழிபாடு செய்யச் செல்லுங் கால் எவ்வளவு இழிந்த குடியிற் பிறந்தவரும் குளித்து முழுகி அழுக்கில்லாமல் தூய ஆடை உடுத்துத் துப்புர வான ஏனங்களிற் பூவும் நீருங் கொண்டு செல்வர். ஆனற், கண்ணப்பரோ தந் தலையிலும், வாயிலும் பூவும் நீருங் கொண்டுபோய் இறைவற்கு வழிபாடு செய்தார். "தாம் ஒரு வேடர், இறைவற்கு அழுக்கு நிறைந்த தம் வாயிலும் தலையிலும் நீரும் பூவும் எடுத்துச் செல்லலாகுமோ" என்று அவர் நினைத்துப் பார்த்தாரா? இல்லையே. இறைவ னிடத்தே தம் எண்ண முழுதும் பதிந்துவிட்டமையாற் றன்னையேனும் ஏனை உயிர்களையேனும் நினைதற்கு இடம் பெற்றிலர் என்க.

## 12. அடியார் இறைவனை யடையும் முறை

அற்றேல், மூன்றுமாண்டில் இறைவனருள் பெற்று எலும்பைப் பெண்ணுருவாக்கின திருஞான சம்பந்தப் பெருமானும், கல்லையே தெப்பமாய்க் கொண்டு கடலில் மிதந்த அப்பரும் மக்களிடையே யிருந்து பல நன்மை களைச் செய்தும், உலகத் தொடர்பு தம்மைப் பற்றுமல் இறைவனிடத்தே பதிந்த அன்புடையவராய் அவனையே நினைந்து உருகி அவனருள் கூடப்பெற்றனரல்லரோ? இவர்கள் கடவுளிடத்துக் காட்டிய அன்பைவிடக் கண் ணப்பரது அன்பு சிறந்ததோ? எனில், இறைவனே வலிய வந்து உயிர்களை ஆட்கொள்வதும், உயிரே வலிந்துசென்று இறைவனைப் பற்றிக் கொள்வது மென வீடுபேற்றின் நிலை இருவகைப்படும். இவற்றுட், பூனையானது தன் குட்டி

யைத் தானே கௌவிச் செல்வதனை யொப்பது மார்ச்சால நியாய மென்றும், குரங்கின் குட்டியானது தனது தாயை இறுகப்பற்றிக்கொண்டு விடாததனை யொப்பது மார்க்கட நியாய மென்றுஞ் சொல்லப்படும். இவ்விரு வகை முறையில் முன்னையதற் கேற்பத் திருஞான சம்பந்தப் பெருமான் முதலிய நால்வரையும் இறைவன் தானே வலிய வந்து ஆட்கொண்டருளினன். ஆனற், கண்ணப்பரையோ அங்ஙனம் வலிய வந்து ஆட்கொண்டிலன். இவர் தாமே அன்பினல் இறைவனை இறுகப்பற்றிக்கொண்டார். அப்பர் முதலியபெரியோர்கள் உலகத்திலிருந்து மக்களுக்கு நன்மை செய்தலை இறைவனே திருவுளத்தடைத்து, தன்பாற் பதிந்த அவர் தம் அன்பையும் உணர்வையும் இடையிடையே நெகிழ்த்து விட்டு உலகத்திற் செல்லவிட்டனன். நால்வர் காலத்திற் புத்தம், சமணம் முதலிய கொள்கைகள் பரவி யிருந்தமையின், அக் கொள்கைளில் வீழ்ந்து ஒரு முழுமுதற் கடவுணிலை யறியாது மயங்கிக் கிடந்த மக்களுக்கு உண்மை புகட்டல் வேண்டி அவர்களை உலகில்விட்டு ஆட்கொள்ள வேண்டியதாயிற்று. ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கண்ணப்பர் இருந்த காலத்தில் எல்லாருங் கடவுளிடத்து அன்பு உடையவர்களா யிருந்தார்கள். கடவுளுண்மை யறியாத புத்தம் சமணம் முதலிய கொள்கைகள் அக்காலத்தில் இல்லாமையாற் கடவுளுணர்ச்சியைப் புகட்டுவதற்குச் சமயாசிரியர் அந்நாட்களில் வேண்டப்படாராயினர். ஆகவே, கண்ணப்பருக்குச் சமயத் தொண்டு இறைவன் கொடுத்தானல்லன்; அதனுற் கண்ணப்பர் மனமுழுதும் இறைவனிடத்தே முற்றப் பதிந்து உலக நினைவிற் படிய இடமில்லாமற் போயிற்று. ஆதலாற் சமயாசிரியர் தம் உணர்வு உலகத்தில் திரும்பியது பொருத்தமேயாம்.

## 13. கண்ணப்பரது அன்பே ஏனை எல்லார் அன்பினுஞ் சிறந்தது

கண்ணப்பர் தாமே வலிந்து இறைவனைப் பற்றிக் கொள்வதற்கு ஏதுவாய் நின்ற அன்பு ஏனை நால்வரது அன்பைவிட மிகச் சிறந்ததாகும். அதனை மாணிக்க வாசகப் பெருமானும்,

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்றருளினார்.

"வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லன் நானினிச்
[சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி அப்பனுக்கே"

என்னுந் திருப்பாட்டில் பட்டினத்தடிகள் அடியார்கள் செய்த அன்பின் திறங்களில் மூன்றை மிக உயர்ந்தன வாகச் சிறந்தெடுத்தார். அம் மூன்றனுள் "வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேன் அல்லன்" என்றதிற் சிறுத்தொண்ட நாயனார் தம் பிள்ளையை அறுத்து இறைவற்குக் கறி சமைத்துக் கொடுத்த அருஞ்செயல் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தம் பிள்ளையை அறுத்துக்கொடுத்தது தாங்கொணா மனத்துன்பந் தருவதாயினும், அஃது அவர்தம் உடம்பினை வருத்துந் துன்பந் தருவதன்று. இச் செயல் தவறான வழிகளிற் றம் நலங்கருதிச் செய்வாரிடத்துங் காணப்படுகின்றது. சிறுத்தொண்டரோ தமது

நலங் கருதாது தம் அருங்குழவியை இறைவன் பொருட்டு அறுத்தது வியத்தகு செயல்தான்.

இரண்டாவதாக "மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேனல்லன்" என்பதில் திருநீலகண்டர் தமது இளமைக்காலத்திலேயே காம விருப்பினை விட்ட அருஞ் செயல் குறிப்பிடப்பட்டது. தீயவழியில் நடப்போர், அறிஞர் எவ்வளவு நல்லறிவு சொன்னாலுங் கேளார். ஒழுங்கற்ற வழியில் நடந்த திருநீலகண்டரை அவர் தம் மனைவியார் "நீலகண்ட மறிய எம்மைத் தொடாதீர்," என்று சொன்ன அளவிலே 'நீலகண்ட' மென்று எம் பெருமானுடைய திருப்பெயரால் 'எம்மை' என்று பன்மையில் ஆணையிட்டதால் "இன்று முதல் மாதர் எவரையுந் தொடேன்," என உறுதி கொண்டு தம்போல் அழகும் இளமையும் வாய்ந்த தம் மனைவியாரையும் அணுகாதிருந்தார். தம் மனைவியாரோடு அருமறையாக வாழ்தலைத் தடைசெய்ய ஏதும் இல்லாதிருந்தும், சிவபிரானுடைய திருப்பெயருக்குக் கட்டுப்பட்டுத் தம் இளமைக் காலத்திலேயே தமது உயிரின் இன்பத்தைத் துறந்து பிறரறியாதபடி பேரழகுமிக்க தம் மனைவியாரோடு வாழ்ந்து வந்தார். அங்ஙனம் திருநீலகண்டர் மேற்கொண்ட அகத்துறவு மக்களிடத்தே காண்பது அரிதினும் அரிதாயிருக்கின்றது; ஆனாலும், இவர் இன்பத்தை விட்டிருந்தாரே யொழிய வேறேதுந் துன்பத்தை யடைந்தவரல்லர். நோயினாலும் பல வசதிக் குறைவினாலும் இவ்வுலக இன்பத்தைத் துறந்து உயிர் வாழ்வாரையுங் காண்கிறோம். கலை வல்லார் பலர் பல அறிவு நூல்களைக் கற்பதிலேயே தமது கருத்தைச் செலவிடுதலால் அதனை மறந்திருக்கின்றனர். மற்று, ஆ காட்கவில் தொண்டுசெய்து தமது உடம்பிற்கும் அத

தமக்கும் வரும் பெருந்துன்பத்தைச் சிறிது முணராமல் தங்கண்ணைப் பெயர்த்து இறைவற்கு அப்பிய அருஞ் செயலோ மேற்கூறிய இரண்டினுக்கும் மேலான தென் பதை விளக்குதற்கே அச்செயலைமூன்றாவதாக வைத்தார். தம் உணர்வும் உயிரும் நல்ல நிலைமையி லிருக்கும்போது தங் கையினாலேயே தங்கண்ணைப் பெயர்த்து இறைவன் கண்ணில் அப்பிய செயற்கருஞ் செயல் உலகில் ஏனை அடியார்கள் எவராலுஞ் செயப்படாத செயலன்றோ?

## 14. கண்ணப்பர் கடவுள் மேல் அன்பு கொண்டமை

இன்னும், காளத்தியார் மலைமீது சென்ற கண்ணப்பர் அங்குக் கல் வடிவிற் காணப்பட்ட கடவுளின் வடிவை எங்ஙனங் கடவுளென உணர்ந்தார் எனில், காளத்தி மலைமேற் குடுமித்தேவர் என்னும் பெயருடைய கடவுள் ஒருவர் இருக்கின்றாரென்று வேடர்களெல்லோரும் வழங்கி வந்தனர். இதனைக் கண்ணப்பர்க்கு நாணனும் அறிவித்தனன். மலைமேலிருக்கின்ற கற்குறி இறைவனது அடையாள மென்பதை அவ்வேட்டுவர்கள் அறிந்திலராயினும், காணப்படும் எல்லாக் கற்களையுங் கடவுளென நினையாமல் அம்மலைமீது வைக்கப்பட்ட அருட்குறியாகிய கல்லையே கடவுளெனக் கொண்டனர். கண்ணப்பர் மலைமீது ஏறிச் செல்லும்போதே, முன்னைப்பிறவிகளில் இறைவனிடத்துக் கொண்ட அன்பானது மேலும் மேலுங் கிளர்ந்தெழ உலக நினைவு படிப்படியாக அற்றுக் கடவுளைக் காணும் பேரெண்ணமே முன் நிற்கப்பெற்றார். அவ் எண்ணத்தால் அங்குள்ள அருட்குறியை இறைவனே என்று நினைந்து அன்பினால் அலறி வீழ்ந்து எழுந்து அதனைக் கட்டித் தழுவினார்.

## 15. கல்லுங் கடவுளாதல்

அற்றேல், கல்வடிவினைக் கடவுளாகக் கருதியது அன்புடையார் செயலாகுமோ வெனிற் கூறுதும்:

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்"

என்னுந் திருமந்திரச் செய்யுளை உற்று நோக்குக. மரத்திற் செய்த ஒரு யானையின் வடிவத்தைப் பார்க்கும் ஒருவன் அந்த யானையின் உறுப்புகளை மட்டும் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் பொழுது 'மரத்தைப்பற்றிய நினைவு' அறவே நீங்கப்பெற்று, அவ்வுறுப்புக்களின் அழகினையும் அமைப்பினையுமே உற்று நோக்கி வியந்த வண்ணமா யிருப்பன். ஆனால், அவ் வுறுப்புகளை உற்றுநோக்கும் எண்ணத்தினின்றும் நீங்கி, அவ்வடிவம் எந்த மரத்தினால் அமைக்கப்பட்டதெனக் கூர்ந்து பார்க்கையில் யானையைப் பற்றிய நினைவு ஒழியப்பெறுகின்றான். அது போல், இறைவனது அடையாளமாக வைக்கப்பட்ட கல்லாகிய உருவத்தைக் கண்டு "ஈதென்னை கல்! இது கடவுளாகாது" என்று நினைவானுக்குக் கடவுள் நினைவு மறையும்; "இது கல்லாயினும், இறைவனை நினைப்பதற்கேதுவாகிய அடையாளமாகப் பெரியோர்களால் வணங்கி வைக்கப்பட்டிருத்தலால் உலகெலாம் உருவாய் விளங்கும் முதல்வனுக்கு இதுவும் ஒரு திருமேனியா" மென்று நினைந் துருகுவானுக்கு இறைவன் அதனின்றே அருள் வழங்குவன்; இவ் வுண்மை தெரித்தற்கே,

"சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியினும்
அல்லினும் மாசற்ற ஆகாயந் தன்னிலும் ஆய்ந்துவிட்டோர்
இல்லினும் அன்ப ரிடத்தினும் ஈச னிருக்குமிடம்
கல்லினுஞ் செம்பினுமோ இருப்பான்எங்கள் கண்ணுதலே"

என்று பட்டினத்தடிகள் அருளிச் செய்தார். இறைவனை மிகுந்த அன்போடு நினைந் துருகுவார்க்கு இறைவன் விளங்கித் தோன்றுவானே யன்றி, அவனை நினையமாட்டா தார்க்குக் கல்லினுஞ் செம்பினு மிருந்து அருள் செய்வா னல்ல னென்றருளினர். இறைவனது அடையாளமாக வைக்கப்பட்ட அருட்குறியைக் காணும்போதே அஃது இறைவனே என்று நினைந்துநினைந்து அவனிடத்தேபெருங் காதல் கொள்வார்க்குக் கல்லென்ற நினைவே வராது.

## 16. திருவுருவ வழிபாட்டின் உண்மை

இவ்வுண்மை அறிய மாட்டாதார் பலர் கல்லை வணங்குவதால் என்ன பயன்? அறிவில்லாத கல்லிலும் மண்ணிலுமா கடவுளிருப்பான் என்று வழக்காடுகின் றனர்.

தெருவிற் கிடக்கும் ஒரு கல்லைக் கடவுளென ஒருவருமே நினையார்; கல்லை எடுத்து அதைத் திருமுழுக்காட்டிப் பூவுஞ் சந்தனமுஞ் சாத்தி ஒளி காட்டும்போதுதான் அங்குக் கடவுளிருப்பதாக நினைக்கின்றார்கள்; அப்போது தாம் திருமுழுக்காட்டியதும் பூச்சாத்தி வழிபட்டதும் இறைவற்கே யன்றிக் கல்லுக்கன் றென்று உணர்கின்றார் கள். தெருவிற் சிதறிக் கிடக்கும் ஒரு கல்லை நோக்கிக் "கல்லே! நீ என் துன்பத்தை நீக்கி இன்பந் தந்தருள்; பிறவிப்பிணி நீக்கு', என்று வேண்டுவார் எவரேனும் உளரோ? அங்ஙனம் வேண்டுவோரை அறிவுகெட்ட பித்த ரென்றன்றோ உரைப்பர்? தாய் தந்தையர் தம் அருமைக் குழந்தைகளை நிழலுருவெடுத்து (படம் பிடித்து) அதற்கு அழகிய பொன்மினுக்குப் பூசிய சட்டம் போட்டுக்

கண்ணாடியும் அமைத்து அதனைச் சுவரில் தொங்கவிடுகின்றார்கள். தம் பிள்ளைகள் தம்மை விட்டு வெளியூரிலிருக்கும்போது, அவர்கள் தம் பிள்ளைகளது புகைப்படத்தை உற்று நோக்கிய வண்ணமாயிருப்பர்; அப்போது சட்டத்தையுங் கண்ணாடியையுமா நினைப்பர். இல்லை! இல்லை!! அக் குழந்தைகளிடத்து வைத்த பேரன்பினால், வெறு நிழலாய் வாய் பேசாது நிற்கும் அவர்கள் அடையாளத்தையன்றோ ஆவலோடு பலகாலும் நோக்கி மகிழ்வர்!

ஓரிமைப் பொழுதாயினுங் கட்டுப்பட்டு நில்லாத நம் மனதை ஒரு வழியில் நிறுத்த வேண்டுமாயின்,

"உயிரா வணமிருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணஞ்செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி
அயிரா வணம்ஏறாது ஆனே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேஎன் அம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதா ரல்லா தாரே"

என்று அப்பர் பெருமான் அருளிய திருமொழிப்படி நினைவு ஒருப்பட்டு இறைவனை நினைந்து அவனது உருவை உள்ளத்தின் கண்ணே பதிய எழுதி, அவனை உற்று நோக்கிய வண்ணமாய்ப் பேரன்பிற் படிந்து நிற்கும் மெய்யடியாரன்றோ அவனருட் குரியவராவர்; ஏனையோர் அதற்குரியராதல் யாங்ஙனம்? இப்பெருஞ் செயல் நம்மனோர்க்கு இயலாதாயின்,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்

தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே''

என்று அப்பர் பெருமான் அருளிச் செய்தவாறு, இறைவனை நினைந்து, விடியும் முன் துயிலொழிந்தெழுந்து, அவன் எழுந்தருளியிருக்குங் கோயிலிற் சென்று அதனைக் கூட்டி மெழுகிப், பூமாலை தொடுத்து ஐயனுக்குச் சாத்திப் புகழ்ந்து பாடித் தலைமீது கைகூப்பிக் கும்பிட்டு அன்பின் பெருக்காற் கூத்துமாடி, அவன் றிருப்பெயர்களை ஆராமையால் அலறிச் சொல்லி இறைவனிடத்தில் தம் உள்ளத்தை நிலைபெறச் செய்தல் எல்லார்க்கும் 'எளிதில்' ஆவதொன்றாம். இவ் அன்பின் செயல்களைச் செய்து அதனால் அன்பு மீதூரப்பெற்று இறைவனருளைப் பெற வேண்டுவார்க்கு இறைவனது திருவுருவ அடையாளம் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாமென்க.

இன்னும், எல்லாம் வல்ல பேரறிவுப் பொருளாகிய இறைவனை அறிவில்லாத கல்லிலும் மண்ணிலும் வணங்குதல் பொருந்துமோ எனிற் பொருந்தும்.

கல்லும் மண்ணும் இழிந்த பொருள்களாகா. மண் திணிந்த இந்நிலத்தின்மேலிருந்தன்றோ எல்லா உயிர்களும் உயிர் வாழ்கின்றன. உயிரையும் உடம்பையும் அறிவையும் பாதுகாத்தற்கு வேண்டிய உணவுந் தண்ணீரும் பொன்னும் மணியும் இயற்கைக் காட்சியும் மண்ணினின் றுந் தோற்றுவிக்கப் பட்டனவே யாகும். உயிர் அறிவுடைப் பொருளாயினும், அஃது உடம்பினுதவியும் உடம்பி லமைந்த உறுப்புக்களினுதவியுங் கொண்டன்றி தானாகவே அறிவு விளங்கப்பெறாது. அறிவுடைய உயிர்க

னெல்லாம் அறிவில் பொருள்களி னுதவி யின்றி அறிவு பெற வல்லனவாகா. ஆகவே, நம் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்வனவாகிய கல் செம்பு மண் முதலியவைகளில் வைத்து இறைவனை வழிபடுதல் அவன் கருத்துக்கு மாறுகாது. இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான்; அவனில்லாத பொருள் ஏதுமில்லை என்று பேசுவோர், அவன் கல்லிலும் மண்ணிலும் கலந்திருக்க மாட்டனென்று கூறுவாராயின், அவர் எங்கும் நிறைந்த இறைவன்றன் பேராற்றலுக்கு இழுக்குத் தேடுகின்றன ரல்லரோ?

எந்தப் பொருளிலும் இறைவன் தானாகவே முனைந்து விளங்கித் தோன்றுவானல்லன். அவனருளையே கண்ணுகக் கொண்டு காணும் மெய்யடியார் காட்சி ஒன்றற்கே அவன் புலனாகுந் தன்மையன். இவ்வுண்மை,

“மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
 மயானத்தான் வார்சடையான் என்னினல்லால்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
 ஓர்ஊர னல்லன் ஓர்உவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
 அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
 இவன்இறைவ னென்றுஎழுதிக் காட்டொ ணாதே”

என்று அப்பர் பெருமானும்

“கனவிலுந் தேவர்க்கு அரியாய் போற்றி
 நனவிலும் நாயேற் கருளினை போற்றி”

என்று மணி மொழிப் பெருமானும், அருளிச் செய்தவாற்றால் அறியப்படும்.

தன் மெய்யடியார்க்கு அருள்செய்யும் பொருட்டே அவர் நினைந்து வழிபடுங் கல்லினும் மண்ணிலும் இறை

வன் முனைத்துத் தோன்றி நிற்பனுகலின், அவன் கல்வி லும் மண்ணிலுங் கலந்து நில்லானென்று சொல்லல் பொருந்தா தாமென்றறிக.

கோயிலுக்குள்ளிருக்குங் கல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பெரியோர்களால் வைத்து வணங்கப்பட்ட திருவுருவம் ஆகும். அஃது இறைவனை நினைந்து உருகி வழிபடுதற்கு வைத்த அடையாளமாகலின் அதனைக் கல்லென்று கொள்ளாமற் கடவுளென்றே ஆராய்ந்து உணர்தல்வேண்டும். ஆதலாற், கண்ணப்பர் மலைமீதி லிருந்த இறைவனது அடையாளமாகிய திருவுருவைக் கல் லென்று நினையாமல் இறைவனென்றே நினைந்து உணர் வற்று உருகிவழிபட்டமையால், இறைவன் அங்கு வெளிப் பட்டு நின்று அவர்க்கு அருள் சுரந்தான் என்க.

## 17. நல்வினை தீவினைகளின் நிலை

இனிக், கண்ணப்பர் மேலைப் பல பிறவிகளிலுஞ் செய்த இருவினைகளிற் றந்தீவினைக்கேற்ற இழிந்த குடியிற் பிறந்தாரெனின், அவர் செய்த நல்வினை அவர்தந் தீவினை யைத் தொலையாததென்னை? எனில்,

நல்வினைக்குள்ள ஆற்றலைவிடத் தீவினைக்கே ஆற்றல் மிகுதி. நல்லவைகளையே செய்து ஒருவன் நல்லனுய் வாழ முயல்வது பெரிதும் உழைப்பினைத் தருவதாகும். குடித் தல், பொய்கூறல் முதலியவைகளைச் செய்தலோ மிக எளிதாகும். பல ஆண்டுகளாகப் பாடுபட்டு அல்லும் பக லும் ஓயாமல் நினைந்து நினைந்து அருமையாக எழுதி வைத்த புத்தகமென்றைச் சிறிது நேரத்துக்குள் கிழித் தெறிவது எத்தனை எளிது! அவ்வாறு செய்வதற்குத் தீவினை எத்தனை விரைவிற் சூழ்கின்றது! என்றுலுங்,

தீவினையும் முடிவில் உயிர்களுக்கு நல்லறிவையே வருவிக்கின்றது.

தீவினையால் அறிவு பெற்ற ஒருவனது கதையை ஈண்டெடுத்தெழுதுவாம்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னேயிருந்த விவேகாநந்தர் என்னும் வடநாட்டுப் பெரியார் வடநாட்டிலுள்ள ஒரு தெருவிற் சில நாட்கள் தொடர்பாகச் செல்வாராயினர். செல்லும்போதெல்லாம் ஒரு வீட்டுத் திண்ணையில் ஒருவன் படுத்துக்கொண்டு சோம்பேறித்தனமாய் உருள்வதும், உறங்குவதுமாகவே இருப்பதைப் பார்த்துவந்தார். பிறகு ஒரு நாள் அவர் அவனை அணுகி "அப்பா! நீ ஏன் இவ்வாறு படுத்தபடியாய்க் கிடந்து உருள்கின்றாய்?" என்று கேட்டார். அதற்கவன் "ஐயா, எனக்கு வேறு வேலை ஒன்றுமில்லை; சாப்பிடுவதும் உருள்வதும் உறங்குவதுந்தான் என்வேலை," என்றான். அது கேட்ட அவர், "நீ இவ்வாறிருத்தல் நலமன்று; எழுந்து போய்க் குடி, திருடு, வேசி வீட்டுக்குப்போ; உன் நேரங் கழிந்துவிடும்," என்றார். அவன் அவர் கூறியவாறே செய்யத் துவங்கினான்; குடித்து அறிவு மயங்கிப் பிறரை ஏசுவதாலுந் திருடுவதாலும் அடிபட்டுத் திருந்தினான். வேசியும் அவன்றன் கைப்பொருளை அறவே பிடுங்கிக்கொண்டு துன்புறுத்தவே உணவின் பொருட்டு உழைத்துப் பொருள் தேடத் துணிந்து அறிவுடையவனானான்.

கலப் பாலில் விட்ட ஒரு சிறு தயிர்த்துளி அப்பால் முழுதுங் கெடுத்து விடுவது போல், ஒருவன் எவ்வளவு நல்லவனாய் ஒழுகினாலும், அவன்மாட்டுப் பொய் சொல்வது மட்டுமிருந்தால் அஃது அவன்மாட்டுள்ள ஏனை நல்வினைகளை அறவே கெடுத்துவிடும். தீவினை நமக்கு

அறிவை உண்டு பண்ணுவதால் தீவினையே செய்து நாம் உயிர் வாழ்ந்தால் என்னை எனில், கொடுந் தீவினை வலிய ஆற்றல் உடையதாகலின், குடி, கொலை, சூதாட்டம் முதலியவைகளிற் பழகியவர்களை அஃது எளிதில் விட்டகல்வதில்லை. அதிற் பழகுகின்றவர்கள் பெரும்பாலோர் அறிவு கெட்டுக் கொடுவினைக் குள்ளாகி மடிகின்றனர்.

தீவினையானது நாம் அறிந்தும் அறியாமலுஞ் செய்யுஞ் செய்கையாலும் உண்டாகின்றது. அஃது அறிந்து செய்வாரையும் அறியாமற் செய்வாரையும் ஒரு படித்தாகவே பற்றித் தொடரும்.

## 18. கொலைத் தீவினைப் பயன்

சிற்றுயிர்களையோ பேருயிர்களையோ கொல்லுந் தீவினையானது மக்கள் எவ்வளவு நல்லராய் ஒழுகினும், அவர்களை அக்கொலைத் தொழிலுக்காக ஒருமல் விடாது. கண்ணப்பர் இறைவனிடத்து எவ்வளவு அன்பு கொண்டாராலும் அவர் முன்னைப் பிறவிகளில் உயிர்களைக் கொல்வது குற்றமென்பதை அறவே நினையாதிருந்தமையின், கொலைத் தீவினையாலே அவர் வேடராய்ப் பிறந்தா ரென்பதே பொருந்து மென்றறிக. கண்ணப்பர் வேடராய்ப் பிறந்து மேலும் மேலுஞ் செய்த சிற்றுயிர்க் கொலையாலுந் தீவினை பெருகு மன்றோ? அங்ஙனமாக அவர் ஈட்டிய தீவினை ஒழியு முன்னரே, கொலையாற் கொணர்ந்து அவர் படைத்த ஊனையும் ஏன்றுகொண்டு மகிழ்வுடன் அவரை இறைவன் ஆட்கொண்டது முறையோ? என்பாரும் பலர். இதனையும் ஆராய்வாம்.

கண்ணப்பர் தாஞ் செய்தது ஏதுங் குற்றமுடைத்தென்பதை உணரத்தக்க நிலையிலிருந்தா ரல்லர்; என்று

லும், அவர் உயிர்களைக்கொன்றதும் அவற்றின் ஊனைத் தின்றதுங் குற்றமேயாம். அறியாக் குழந்தை நெருப்பைத் தொடினும் நெருப்புச் சுடுமன்றோ! ஆதலால், அவர் உணராது செய்த சிற்றுயிர்க்கொலை அவர்க்கொரு தீவினையே யாமென்பதும் அவர் ஏழை உயிர்களைக் கொன்று அவற்றின் ஊனைத் தின்றது இறைவன் கருத்துக்கு மாறானதேயா மென்பதுந் திண்ணம். கண்ணப்பர் படைத்த ஊனை இறைவன் ஏற்றனன் என்று சொல்லுதலும் பொருந்தாது ஒருவரிடத்து மிகுந்த அன்பு காட்டும் நண்பர் தாம் உண்ணும் உணுப்பண்டங்களைத் தம் நண்பர்க்கு முதலில் கொடுத்து அவர்கள் அவற்றை உண்ட பின்னரே தாம் மிஞ்சியதை உண்டு மகிழ்வர். இது போற் கண்ணப்பருந் தமக்கு மிகச் சிறந்த உணவான முள்ளம் பன்றி, மான், மரை, கடம்பை முதலான உயிர்களின் ஊனை நெருப்பில் வதக்கிச் சுவை மிகுந்தவற்றைப் பார்த்து முதலிற் சிவபிராற்குப் படைத்து அதன் பிறகு மிஞ்சியதைத் தாம் தின்பாராயினர். இன்னும், சிறந்த அறிவுடையார் ஒருவரிடத்து மிகுந்த அன்புவைத்த அறிவு குறைந்த நண்பரொருவர் அவ் அறிவுடையார் விரும்பும் பண்டத்தைக் கூர்ந்து நினையாமற் றும் சிறப்பாக உண்ணுமவைகளையே அவர் முன் வைத்து ஏற்குமாறு உளங்கனிந்து அன்போடு வேண்டுவர்; அப்போது அவ் அறிஞர் என் செய்வர்! அப்பண்டங்கள் தாம் ஏற்கத் தகாதன வாயினும், தம் அருமை நண்பரது பேரன்புக்காக அவரை வருத்த மனமில்லாமல், அவைகளை வாங்கி அவரறியாமற் பிறர்க்குக் கொடுப்பர். இன்னும், தன்னிடத்து அன்புமிக்க தன் இனிய மகவு தன் கையிற் கிடைத்த ஒரு பண்டத்தை எடுத்துத் தன் வாயில் வைத்து உண்ணும்படி வேண்டும்போது, தாயானவள் மிகுந்த மகிழ்ச்சியோடு

அதனை வாங்கி அஃது உண்ணத்தக்கதாயின் உண்டு விடுகின்ருள்; உண்ணத் தகாததாயின் அதனை உண்பது போற் காட்டி அதனைப் புறத்தே மறைத்து வைத்து அம் மகவினை மகிழச் செய்கின்ருள். அதுபோற், கண்ணப்ப நாயனர் படைத்த ஊனையும் இறைவன் உண்மையில் ஏற்றனன் அல்லன் என்று உணர்தல் வேண்டும்.

## 19. கொலைத் தீவினையை நீக்கிச் சிவபிரான் கண்ணப்பரை ஆட்கொண்டமை

இனிக் கண்ணப்பரது கொலைத் தீவினையை ஒழித்த பிறகே இறைவன் அவரை ஆட்கொண்டனன் என்பதூஉஞ் சிறிது காட்டுவாம். தமது பிள்ளைக்காலத்திருந்தே பிற உயிர்களை வேட்டையாடிக் கொலைசெய்த போதெல்லாம் அவ்வுயிர்கள் அடைந்த கொடுந்துன்பத்தைக் கண்ணப்பர் சிறிதும் உணர்ந்திலர். இவ்வாறு தான் சிறிதும் உணராமல் வழக்கமாய்ச்செய்து போந்த கொலைத் தொழிலாற் பிற உயிர்கள் அடைந்த பெருந்துன்பத்தைக் கண்ணப்பரும் அடைந்தாலன்றி அவரைப்பற்றிய அத்தீவினை சிறிதும் ஒழியாது. அத்தீவினை ஒழிந்த பிறகுதான் இறைவனும் அவரை ஆட்கொள்ளுதற்குரியன். இது குறித்தே, எல்லாம் வல்ல சிவபெருமான் கண்ணப்பரின் பேரன்பை உலகத்தார்க்குப் புலப்படுத்துமாறும், அவர் அதுகாறுஞ் செய்துவந்த கொலைத்தொழிலின் தீவினையை நீக்குமாறும் தன் திருக்கண்ணிற் குருதி வடிவதுபோற் காட்டினன். இது கண்ட கண்ணப்பர் பெரிதுங் கலங்கி "எம்பெருமான் கண்ணுக்கு வந்த இந்நோயை யான் எவ்வாறு தீர்ப்பேன்" என்று பலவாறு எண்ணி எண்ணி எவ்வளவோ முயன்று எத்தனையோ மருந்துகள்

கொணர்ந்து இறைவனது கண்ணில் அப்பியும், அவற்றால் சிறிதும் நலம் உண்டாகவில்லை. இது கண்ட கண்ணப்பர் மேலும் மேலும் ஆற்றொணுத் துயரமடைந்து முடிவில் "ஊனுக்கு ஊனையிடுதலே மருந்தா" மெனக் கொண்டு ஆண்டவன் பக்கத்தே சென்று தமது கூரிய அம்பின் முனையாற் றமது கண்ணைக் குத்திக் கல்லி எடுத்தார். எடுத்த அந்நேரத்தில் அவரது உயிர் எவ்வளவு துடிதுடித் திருக்கும். பிற உயிர்களைத் தம் உணவுக்காகக் கூரிய அம்பாற் குத்திக் கொன்றபோது அவை எவ்வளவு துன் புற்றிருக்கும்! இவ்வாறு கண்ணப்பர் தமது கண்ணைப் பேர்த்தெடுக்கையில் அவைபோற் துன்புற்று அவ்வுயிர் களின் துன்பத்திற்கு ஈடு கொடுத்தனரல்லரோ!

நம் உடம்பிலுள்ள உறுப்புகளெல்லாவற்றிலும் மிகச் சிறந்தது கண்ணே ஆகும். கண்ணின் வாயிலாகத்தான் நம் மன அறிவு மிகவும் புலப்பட்டுத் தோன்றுகிறது. மற்ற உறுப்புகளெல்லாம் செவ்வையாக நிரம்பப் பெற்றவன் ஒருவனுக்குக் கண் மட்டும் இல்லையானால், அவன் அக் குறையை ஏனைய உறுப்புக்களால் தீர்த்துக்கொண்டு அறி வும் மகிழ்ச்சியும் அடைவானே? ஒரு சிறு தூசு விழுந்தா லும் அது பொறுமற் கண் மிகவும் துடிதுடித்துத் துன் புறுகின்றது; இங்ஙனம் மிகவும் நுட்பமான உணர்வு வாய்க்கப் பெற்ற கண்ணைச் சிவபிரானுக்காகப் பேர்த் தெடுத்த அவர்தம் பேர் அன்பின் நிலையை உற்று நோக் குங்கள்! மேலும், விலங்குகள் முதலிய சிற்றுயிர்கள் பிற ராற் கொல்லப்படுகின்றன. அப்போது அவற்றிற்கு உண் டாம் துன்பத்தினும், ஒருவர் தம் உடம்பைத் தாமே சிதைக்குந் துன்பம் எவ்வளவு கொடியதாயிருக்கும்! கண் ணப்பர் தம் கையினுல் தம் கண்ணைப் பேர்த்தெடுக்கை

யில் அஃது எத்தனைக் கொடுந்துன்பந் தந்திருக்கும்! அல்லதூஉம், ஒருவன் தனக்கு நேர்ந்த பற்பல இடர்களினின்றுந் தான் நீங்கல் வேண்டித் தன் கழுத்தை வெட்டியோ, ஒரு கிணற்றில் விழுந்தோ கழுத்திற் கயிறிட்டு இறுக்கியோ உடனே தன் உயிரைப் போக்கி விடுகின்றான்; இங்ஙனம் உடனே மாய்வதால் அவன் அத்துன்பத்தை நீள அடைவதற்கு இடமில்லையாய் விடுகின்றது, ஆனாற், கண்ணப்பரோ தம் உடம்பின்கண் உயிரும் உணர்வுஞ் செவ்வையா யிருக்கும் போதே தமது துன்பத்தைக் கருதாது, சிவபிரானுக்காகத் தன்கண்ணைப் பேர்த்தெடுத்தார். ஐயகோ! அங்ஙனந் தமது கண்ணைத் தாமே பிடுங்கிய கொடுந்துன்பம் தொடர்பாக நீடித்திருக்கு மன்றோ? இச் சொல்லொணாத் துயரத்தையும் ஒரு பொருட் படுத்தாது இறைவனது கண் நலமடைவதொன்றையே கருதிச் செய்து, அங்ஙனந் தாம் கருதியபடியே பெருமானது கண் நலம்பெறக் கண்ட பெருங் களிப்பால் ஆடிப்பாடி மெய்ம்மறந்து அளவிலா உவகை எய்தினார்!

அவ்வளவில் இறைவன் அவரை விட்டனரா? இல்லை. கண்ணப்பர் தமது ஒரு கண்ணைக் கல்லி எடுத்த பின்னும் பெருமான் தன் மற்றொரு கண்ணிலும் குருதி ஒழுகுமாறு செய்தனன். அது கண்டு முதலிற் பெரிதுங் கலக்க முற்ற கண்ணப்பர் பின்னுந் தமக்கு மற்றொரு கண் உளதாதல் உணர்ந்து பேருவகை கொண்டார்; உடனே தமது இடதுகாற் பெருவிரலை இறைவனது நோய் கொண்ட மற்றொரு கண்ணில் அடையாளமாக வைத்துக்கொண்டு, தமது மற்றைக் கண்ணையுங் கூரிய அம்பின் முனையாற் குத்தி எடுக்கத் துவங்கினார்; அப்போதுதான் அவர் அதுகாறுஞ் செய்து போந்த கொலைத்தீவினை முற்றும் ஒழிந்

தது! அங்ஙனம் அஃதொழிதற் கேதுவாய்ப் பெருகிய கரை கடந்த அன்பினுற் றாயராய் விளங்கிய கண்ணப்பரை மேலும் மேலுந் துன்புறுத்த அருளே வடிவமான இறைவன் இசையானுய் "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!!! என மும்முறை கூறித் தன் திருக்கையாலே அவரைத் தடுத்தாட் கொண்டனன்.

## 20. ஊன் உண்பாரை இறைவன் கொடுந் துன்பத்திற் படுப்பிப்பன்

இவ்வாருகத், தன்னிடத்துக் கரை கடந்த அன்பு கொண்ட கண்ணப்பர் ஊன் தின்ற குற்றத்தையும் இறைவன் ஒப்புக் கொண்டிலனுய், அக்குற்றந் தீரும் பொருட்டே, அவர் தமது கண்ணைத் தாமாகவே பேர்த்தெடுத்து அப்புமாறு செய்து, அவரை ஆட்கொண்டிருக்கக் கண்ணப்பரது அன்பில் ஒரு தினையளவாயினும் வரப்பெருமல் நாடோறும் உணவுக்காக உயிர்களைக் கொன்று தின்னும் ஏனை மக்களை நம்பெருமான் ஒறுமல் விடுவனே? ஒருகாலும் விடான். இறைவன் அவர்களைப் பல பிறவிகளிலும் பிறப்பித்து அவர்கள் அறிவு பெறும் வரையில் ஒறுப்பானென்பதிற் றடையுண்டோ கூறுமின்கள்!

"ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்று கண்ணப்பர் கூறியதைப் பெரியபுராணங் கூறுவதால் நம்முடைய ஊனுடம்பை வளர்ப்பதற்கும் பிற உயிர்களின் ஊனை உட்கொள்ளல் வேண்டுமென்பாரும் உளர். வேட்டுவகுலத்திற் பிறந்து ஊனுண் தொழிலிற் பழகியவர் அறிவுக்குஞ்

செயலுக்கும் ஏற்றபடி "ஊனுக்கு ஊனையிடு" என்பரே யல்லாமல், மேன்மக்கள் அங்ஙனம் உரையார்.

ஊனைத் தின்னுமற் காய் கனிகளையே உட்கொண்டு தம் உடம்பைப் பாதுகாப்பார் எண்ணுக்கடங்காம லிருக்கின்றனரே! இவ்வூனுடம்பு பிற உயிர்களின் ஊனைத் தின்றாலன்றி வளராதாயின், அதனைத் தின்று வாழ்தல் பொருந்தும் என்னலாம். ஊனுணவு கொள்ளும் மக்களோ பெரும்பாலும் அன்பும் அருளுங் கெட்டுத், தம் உடம்பும் வலிவிழந்து பலவகை நோய்க்கும் ஆளாகி அழிகின்றனர்!

## ஆராய்ச்சி முடிவு

கண்ணப்பரோ சிவபிரான்றன் கண்ணானது நலமடைதல் வேண்டுமென்னும் நல்லெண்ணத்தினாற் றந் நலங் கருதாமற் றமது ஊனாகிய கண்ணைப் பேர்த்தெடுத்து இறைவன் கண்ணில் அப்பினர். ஆனால், ஊனுண்ணும் மக்களோ தம் நாச் சுவைக்கத் தின்று தமது பாழுடலைப் பெருக்கச் செய்வதற்காகப் பிற உயிர்களைக் கொல்கின்றார்களாதலால், தாம் செய்யும் அக்கொலையால் வருங் கொடுந்தீவினையை மறைக்கும் பொருட்டே "ஊனுக்கு ஊனையிடு" என்னுஞ் சொல்லைக் கூறிப் பிறரை ஏமாற்றி வருகின்றனர்; ஆதலால் அவர் தம் பயனில் உரைகள் ஏற்கற்பாலன அல்ல என்க. கண்ணப்பரது உயர்ந்த அன்புநிலை ஏனை அடியார்களது அன்பு நிலையை விட மிகச் சிறந்ததாகும். உறுப்புக்களில் மிகச் சிறந்ததும், நுண்ணுணர்வு வாய்ந்ததுமான கண்ணைப் பேர்த்தெடுத்துத் தந்து இறைவனைத் தம் அன்பு வலையில் அகப்படுத்திய கண்ணப்பரைப் பெரியோர்கள் எல்லாரும் வியந்து வழிபட்டுப் பாடிப்போக, அப்பெருமானரது

அன்பின் நிலையை உணரமாட்டாதார் கூறும் வெற்றுரைகளை ஒரு பொருட்படுத்தாது அவர்போல் இடையறாத பேரன்பு கொண்டு இறைவனருளை எல்லோரும் நாடிப் பிழைப்பாராக!

ஓம் சிவம்

# திருக்காளத்திக் காட்சி

உலக இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழுமாறும் இறைவனை வணங்குமாறும் திருக்காளத்திக்குச் சென்றோம். யாங்கள் விரும்பியபடி கோயிலுக்கருகாமையில் உள்ள ஒரு சத்திரத்திற் றங்கினோம். மறுநாட் காலை ஏழு மணிக்கு அங்கே ஒன்றன்மேல் ஒன்றாயும், தொடர்பாயும் உள்ள பல மலைகளைச் சென்று கண்டோம். அவற்றுள் ஒன்றின் மேற்போய் அம்மலைச் சூழலின் நடுவே காணப்பட்ட ஓர் அழகிய ஒரு பள்ளத்தாக்கினைப் பார்த்து அதில் இறங்கப்போனோம். அப்பள்ளத்தின் அழகிய நிலப்பரப்பானது ஏறக்குறைய ஒரு கல் சுற்றளவு உள்ளதா யிருந்தது. அவ்வழகிய நிலப்பகுதியைப் பாதுகாப்பதற்கு அமைத்து வைக்கப்பட்ட மதிற் சுற்றைப் போல அம்மலைச் சூழல்கள் தோன்றின. அப்பள்ளத்தாக்கின் நடுவே அழகிய படித்துறைகளமைந்த ஒரு பெரிய குளமும், பழைய நாளிலே அமைக்கப்பட்ட தொன்றாய்க் காணப்பட்டது. அக்குளத்தின் தண்ணீர் பளிங்கு போல் தெளிந்திருந்தது, அதன் நீர் மட்டத்தில் அங்குமிங்கும் படர்ந்து மிளிரும் அழகிய தாமரை இலைகளின் மீது வெண்மை

யான கொக்குகள் அமர்ந்துகொண்டு, தம்மை உணவுக் காக இரக்கமின்றிச் சுட்டுக் கொல்லும் கொடிய மாந்தர் அங்கு வருவதின்மையால் சிறிதும் அச்சமின்றி மகிழ்ந் திருந்தன; அக்குளத்தின் நடுவே பழமையாகக் கட்டப் பட்ட ஓரழகிய சிறு மண்டபம் இருந்தது. அதன் மேல் காட்டுப் பூஞ்செடிகள் மிக நெருங்கி வளர்ந்திருந்தமையும் அச்செடிகளிற் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த பல நிற மலர்களின் மேல் சிறு சிறு தேன் குருவிகள் சரே லெனப் பறந்து வந்து அப்பூக்களின் இனிய தேனைப் பரு கிக்கொண் டிருந்தமையும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந் தன. இன்னும் அம்மண்டபத்தின் மேல் விளிம்புகளி லுள்ள புதைகளில் சாம்பல் நிறம் வாய்ந்த புறாக்கள் கூட் டங் கூட்டமாய் இருந்தன. அப்புறாக்களிற் சில தாய்ப் புறாக்கள், தாம் பொரித்த குஞ்சுகளைப் பாதுகாக்கும்படி தத்தம் கூடுகளினருகே அச்சமின்றி வரிசை வரிசையாக இருந்து காத்துக்கொண் டிருந்தன. அப்போது ஆண் புறாக்கள் வெளியே எங்கெங்கோ சென்று அலைந்து திரிந்து தம் உணவைச் சுருக்கி இரைதேடி, அவ்விரையை மிகவும் கருத்தோடு அலகில் கௌவிக் கொண்டு விரைந்து வந்து வாய் திறந்தபடியாய் எதிர் நோக்கும் தம் குழவிகட் குத் தந்து அவைகளின் பசியை ஆற்றின. அங்குள்ள கூடுகள் ஒன்றில் ஒரு தாய்ப்புறாவுக்குப் பல குஞ்சுகள் இருந்தன. அவைகள் பெரியனவையாக இருந்தமையின் ஆண் புறா வெளியே சென்று கொண்டுவந்து தந்த உணவு அவைகட்குப் போதவில்லை; அதனாற் குஞ்சுகள் இரைச்ச லிடக் கூட்டினருகே காவலிருந்த தாய்ப்புறாவும் விரைந்து தன் கணவனோடு பறந்து செல்வதைக்கண்டு யாங்கள் முத லில் வருத்தமுற்றோமாயினும், சிறிது நேரத்தில் அத்

தாய்ப்புறுவும் இரையெடுத்து வந்து அவற்றின் வாயில் ஊட்டிப் பசி தணித்ததனைப் பார்த்து வியப்பும் அடைந்தோம். அவ்வளவு பகுத்தறிவையும், அன்பையும் அப்பறவைகட்கும் தந்துதவிய எல்லாம் வல்ல இறைவனது அருட் பெருக்கத்தையும் இரக்கத்தையும் நினைந்து நினைந்து உருகினேம்!

இனி அப்பெரிய குளத்தின் கரையில் நிறைந்து நின்ற மாமரங்களும், நாவல் மரங்களும், விளா மரங்களும் குளிர்ந்த நிழலைத் தந்தன. அந்நிழலிலிருந்து யாங்கள் சிறிது இளைப்பாறிக்கொண் டிருந்தபோது, ஓர் இனிய பறவைக் குரலோசையைக் கேட்டோம். அவ்வோசை எங்கிருந்து வருகின்ற தென்பதை அறிய அங்குமிங்கும் மரங்களினூடே உற்று நோக்கினேம். அப்போது யாங்கள் அமர்ந்திருந்த பாறையினருகே இருந்த மரத்தின் ஒரு சிறிய கிளையிலிருந்த ஒரு புள்ளிக்குயிலினது ஓசையே அதுவென் றறிந்து மகிழ்ந்தோம். பின் மாணிக்க வாசகப் பெருமான் குயிலினங்களைக் கூவிச் சிவபிரானைக் குழைந்து குழைந்து உருகிப் பாடிய குயிற்பத்தையும் பாடினேம்.

அதில் சில பாக்கள் :—

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள் நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட
[வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய வொருத்தன்
மான்பழித் தாண்டமென் ஞேக்கி மணாளனை நீ வரக் கூவாய் 4

இன்பந் தருவன் குயிலே யேழுல கும்முழு தாளி
அன்ப னமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய். 6

பிறகு அங்கே எம் எதிரிலிருந்த அவ்வாவியின் நீரைப் பருகியபின் அக்குளத்தில் வெயிலின் ஒளியில் மினுமினு வென்று துள்ளித் துள்ளிப் பிறழ்ந்து ஓடும் கயல் மீன்களை ஒரு வேட்டுவப் பெண் கையாற் பிடிக்க எவ்வளவோ முயன்றும், ஒருகால் அவை அவள் கையி லகப்பட்டும், பிறிதொருகால் உடம்பின் வழுவழுப்பில் அவள் கைகளினின்றும் வழுவியும் ஓடின. இக்காட்சிகளை நோக்கியபின் கீழேயுள்ள காளத்தி இறைவர் கோயிலை அடுத்துள்ள ஒரு மலை முகட்டை நோக்கி ஏறிச் சென்றேம். அம்முகட்டை அடைந்தபோது, அங்கே பரந்த ஒரு மேட்டு நிலத்தின்மேல் மிகப் பழைய காலத்தே, அஃதாவது (2000) இரண்டாயிர ஆண்டுகட்கு முன்னரே கட்டப்பட்ட ஒரு சிறு கோயிலும், அக்கோயிலில் இறைவன் ஒளி வடிவினது அடையாளமாக வைக்கப்பட்ட அருட்குறி (சிவலிங்கம்)யும் இருக்கக் கண்டோம். அவ் அருட்குறியைத் திருமுழுக் (அபிஷேகம்) காட்ட குருக்கள் அக்கோயிலுக்கு வருவதில்லை என்பதறிந்து மிக மகிழ்ந்தோமாயினும், யாங்கள் இதனை முன்னமே அறிந்திருந்தால் முன் குறித்த குளத்தினின்றும் பூவும் நீரும் கொண்டுவந்து, அருட்குறிக்குத் திருமுழுக்காட்டிப் பூவும் சூட்டியிருக்கலாமே என்று நினைந்து வருந்தினேம். அவ்வழகிய சிறு கோயில் ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் அமைந்ததாகும். அக்கோயிலிலுள்ள அருட்குறியை அன்பினாற் குழைந்து குழைந்து உருகி வழிபட்ட கண்ணப்ப நாயனாரது மிகப் பழைய திருவுருவம் அமைந்த மற்றொரு சிறு கோயிலும் அதனருகே யிருந்தது. மக்களின் சேர்க்கையும் அவரது தீச்செயலும் அணுகப் பெறாது, தனித்து உயர்ந்த ஒரு மலையுச்சியில் இறைவனது அடையாளத்தையும்; அவனை உண்மை

யன்பால் வழிபட்ட அடியவர் உருவத்தையுங் காண்பது, சொல்ல இயலாத ஓர் அன்பினையும் உருக்கத்தினையும் எம் உள்ளத்தே தோற்றுவித்தது. உயர்ந்தோங்கும் இத் தகைய தனியிடமே கடவுள் உவந்திருத்தற்கு ஏற்றதென் பது எமக்குப் புலனாயிற்று. இறைவனை வணங்கத் தக்க தனியிடத்தைக் கண்டதும் நெஞ்சங் குவிந்து ஆறுதல் பெற்று அவனை வணங்கிப் பாடி வழுத்தினோம். அந் நேரத்தில் யாங்கள் வானுலகத்தில் கடவுளோடு இருப்ப தாகவே எண்ணப்பெற்றோம். இவ்வாறு உலக நினைவி னின்றும் சிறிது விடுபட்டிருந்தோமாயினும், பின் சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் எப்படியோ பையப்பைய உலக நினைவு வரப்பெற்றோமாய்க் கடவுளையும் கண்ணப் பரையும் வணங்கிப் பிரிந்து பின் கீழ்நோக்கி இறங் கினோம்.

இவ்வாறு நாங்கள் இறங்கிவரும்போது, அங்கங்கே சிறிதுநேரம் நின்று நின்று அம்மலையின்கீழ்த் தோன்றும் அரிய காட்சியின் அழகை வியந்து உரையாடினோம்! கீழ் உள்ள பெரிய சிவபிரான் கோயிலானது ஓரழகிய ஆற்றங் கரையின்மீது அமர்ந்து, மேலிருந்து காணும் எமக்குச் சிறிய அளவினதாய்த் தோன்றியது. ஓர் ஊரை உண் டாக்குவதற்கு முன் ஓவியக்காரன் அப்பெரிய ஊரி னளவை ஒரு சிறிய கடிதத்தில் வரைந்து காட்டினால், அத்தோற்றமானது எவ்வளவு சிறிதாக நம் கட்புலனுக் குக் காணப்படுமோ அதைப்போலவே அப்பெரிய ஊரும், சிவபெருமான் கோயிலும் சிறுத்து விளங்கின. பின் ஆங்காங்கு அவ்வூருக்குப் புறம்பே பயிரிடப்பட் டிருக்கும் பச்சைப் பசேலென்ற வயல் நிலங்கள் பச்சைப் பட்டாடை விரித்தாற்போல் பகலவன் கதிரொளியால்

...ITY EXTENSIO...

மினுமினுப்புடன் விளங்கின. பின்னும், அவ்வூரின் கோயிலுக்கு அருகே கதிரவன் ஒளிவிட்டுத் திகழும் பொன்முகலியாற்றின் தோற்றமானது ஒரு வெள்ளிக் கம்பிபோல் காணப்படுவதாயிற்று. இன்னும், அவ்வாற்றின் இடையிடையே நீரைத் தடுத்து மடைகளின்வழியே வயல்கட்கு நீர்பாய்ச்சும் மள்ளர்களும், மற்றொரு பக்கத்தே அறுப்பறுத்த நிலங்களில் மேயும் ஆடுமாடுகளும் சிறு சிறு பாவைகள்போல் தோன்றுவ ஆயின.

இங்ஙனமெல்லாம் இறைவன் அருமையாகப் படைத்த இயற்கைத் தோற்றங்களைப் பார்த்துக்கொண்டே கீழிறங்கி மலையினடிவாரத்திற்கு வந்து சேர்ந்தோம். அம்மலையடிவாரத்தின் பக்கத்தே வேட்டுவர் குடிசைகள் பற்பல இருந்தன. யாங்கள் மலையினின்றும் வந்து களைப்புத் தீரும்பொருட்டு அங்கிருந்த ஒரு மரத்தடியிற்றங்கினோம். அப்போது அங்கிருந்த குடிசைகளி லொன்றிலிருந்து ஆண் மயிலொன்று வெளிவந்து தன் அழகிய தோகையை விரித்து ஆடியது. ஆ! அத்தோகையின் நீலமும் பச்சையும் கலந்த கண்கள் வெயிலொளியில் மினு மினு வென்று மிளிர்ந்தன. யான் பிறந்து அதுகாறும் காணாத அப்புதுமையை இன்னும் நினைவு கூர்ந்து மகிழ்கின்றேன். பின் அடுத்த நாள் விடியற்காலையிலே மலையடிவாரத்திலிருக்கும் பழைய காளத்தியப்பர் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி அக்கோயிலின் கருங்கற் சுவர்களிலுள்ள நுண்ணிய வேலைப்பாடுகளைக் கண்டு வியப்புற்றோம். பின் சத்திரத்திற்கு வந்து உணவு சமைத்து உண்டபிறகு, என் பெற்றோர் இளைப்பாற மேல்மெத்தைக்குச் சென்றனர். யான் உறங்குவதற்கு விருப்பமில்லாமல் அச்சத்திரத்தின் பின்புறத்திற் சென்றேன். அங்கே

யிருந்த ஒரு பெரிய அரசமரத்தின்மேல் பத்துப் பதி னைந்து குரங்குகள் மரக் கிளைகளில் தாவித்தாவி விளை யாடிக்கொண்டிருந்தன. இவ்விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அக்குரங்குகள் பரபரப்போடு கீழிறங்கி, எங்களுக்குப் பத்தடித் தொலைவில் நின்று கொண்டு, கைகளை நீட்டி உணவுப் பண்டங்கள் கேட்டன. உடனே யான் விரைந்து ஓடி ஓர் ஏனத்தில் சோற்றுடன் திரும்பினேன். யான் கொண்டுவந்ததனை அக்குரங்கு களினருகே சென்று கொடுக்க அஞ்சிச், சோற்றைக் காட்டிக் கூப்பிட்டேன். உடனே, அக்குரங்குகளிற் சில அச்சமின்றிக் கிட்டே வந்து கை நீட்டின. ஆனால், யான் உணவை அவைகளின் கைகளில் தருவதற்கஞ்சிக் கீழே வைத்துவிட்டு அப்புறம் வந்துவிட்டேன். அவை அவ் வுணவை உண்டபின் மரங்களில் ஏறின. யான் உணவு தருதலைப் பார்த்துக்கொண்டிருந்த தாய்க்குரங்குகளிற் சில, தம் குட்டிகளோடு என் எதிரே ஓடிவந்து தம் கைகளை நீட்டி இரங்கிய முகத்தோடு என் முகத்தை உற்றுநோக்கி உணவு கேட்டன. யான் அதன்பின் அச்சம் தெளிந்து அவைகளின் பக்கத்தே போய், அவை களின் கைகளில் சோற்றை அள்ளி வைத்தேன். அத் தாய்க் குரங்குகள், தாம் முதலில் அச்சோற்றை உண்ணு மல் தத்தம் வயிற்றடியில் பற்றிக்கொண்டிருக்கின்ற தத் தம் இளங்குழவிகட்குத் தந்து பிறகு உண்டன. இவ் வாறு மேற்கூறிய அழகிய தோற்றங்களைக் கண்டு களிப் போடு அன்றிரவும் அச்சத்திரத்திலே தங்கி விடியற்காலை யிலே காளத்தித் தங்குநிலை (ரயிலடி) க்குப் போய்ப் புகை வண்டி ஏறி வீடுவந்து சேர்ந்தோம்.

## அநுபந்தம்

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்காளத்தித் தேவாரம்

## திருநாவுக்கரசு நாயனுர்

### திருத்தாண்டகம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தார் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

## கண்ணப்ப நாயனுர்

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்

திருத்தென்குடித்திட்டை. பண்-கொல்லி.

கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவுவைத் தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக் கும்வயற் றென்குடித் திட்டையே.

## திருநாவுக்கரசு நாயனார்

**திருக்குறுக்கைவீரட்டம்** திருநேரிசை

காப்பதோர் வில்லும் அம்பும்
    கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
    தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
    குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
    குறுக்கை வீரட்ட னாரே.

திருச்சாய்க்காடு திருநேரிசை

குவப்பெருந் தடக்கை வேடன்
    கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித்
    தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
    ஒருகணை யிடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார்
    சாய்க்காடு மேவி னாரே.

திருக்கழிப்பாலை திருத்தாண்டகம்

விண்ணப்ப விச்சா தரர்கள் ஏத்த
    விரிகதிரான் எரிசுடரான் விண்ணு மாகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்துள் ளேயும்
    பசுபதி பாசுபதன் தேச மூர்த்தி
கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு கந்தார்
    கழிப்பாலை மேய கபா லப்பனார்
வண்ணப் பிணிமாய யாக்கை நீங்க
    வழிவைத்தார்க்கு அவ்வழியே போது நாமே.

## சுந்தரமூர்த்தி நாயனர்

திருநின்றியூர் பண் - தக்கேசி

அணிகொ ளாடையம் பூணணி மாலை
யமுது செய்தமு தம்பெறு தண்டி
இணைகொ ளேழெழு நூறிரும் பனுவல்
ஈன்ற வன்றிரு நாவினுக் கரையன்
கணைகொள் கண்ணப்ப னென்றிவர் பெற்ற
காத லின்னரு ளாதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியுஞ்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே.

திருவீழிமிழலை பண் - சீகாமரம்

எறிந்த சண்டி யிடந்த கண்ணப்பன்
ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன்றுளி வீசும்
திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்தம் நாள்தொறும்
நேசத் தாலுமைப் பூசிக்கு மிடம்
அறிந்து வீழி கொண்டீர் அடியேற்கும்
அருளுதிரே

## திருத்தொண்டத்தொகை

இலைமலிந்த வேனம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கு மடியேன்

அலைமலிந்த புனன்மங்கை யானையர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

---

## திருவாசகம்

### (எட்டாந் திருமுறை)

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட்
கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற
வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய்
கோத்தும்பீ.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்
போல் விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம்
ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய
மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா தோள்நோக்கம்
ஆடாமோ.

---

## திருவிசைப்பா

### ஒன்பதாந் திருமுறை

கடியார் கணம்புல்லர் கண்ணப்ப ரென்று
னடியா ரமருலக மாளநீ யாளாதே
முடியாத முத்தீவேள்வி மூவா யிரவ ரொடுங்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே.

---

## கக. ஆம் திருமுறை

### நக்கீர தேவர்

### திருக்கண்ணப்பதேவர் திருமறம்

### அகவற்பா.

கடும்பகல் வேட்டையிற் காதலித் தடித்த
உடும்பொடு சிலைகணை யுடைத்தோல் செருப்புத்
தொடர்ந்த நாயொடு தோன்றினன் றோன்றலுஞ்
செல்வன் றிருக்கா ளத்தியு ளப்பன் றிருமேனியின்
மூன்று கண்ணு யாங்கொரு கண்ணிலும்
உதிர மொழியா தொழுகவிருந்தன னாகப்
பார்த்து நடுக்குற்றுப் பதைத்து மனஞ்சுழன்று
வாய்ப்புனல் சிந்தக் கண்ணீ ரருவக்
கையி லூனொடு கணைசிலை சிந்த
நிலப்படப் புரண்டு நெடிதினிற் றேறிச்
சிலைகொடும் படைகடுத் தெடுத்திது படுத்தவர்
அடுத்தவிவ் வனத்துள ரெனத்திரிந் தாஅங்கு
இன்மை கண்டு நன்மையில்
தக்கன மருந்துகள் பிழியவும் பிழிதொறு
நெக்கிழி குருதியைக் கண்டுநிலை தளர்ந்தென்
அத்தனுக் கடுத்ததெ னத்தனுக்கடுத்த தென்னென்று
அன்பொடுங் கனற்றி
இத்தனை தரிக்கிலன் இதுதனைக் கண்டவென்
கண்தனை இடந்து கடவுள் தன் கண்ணுறு
புண்ணி லப்பியுங் காண்ப னென்றொரு கண்ணிடைக்
கணையது மடுத்துக் கையில் வாங்கி
அணைதர வப்பின னப்பலுங் குருதி
நிற்பதொத் துருப்பெறக் கண்டு நெஞ்சுகந்து

மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன் மடுத்தலும்
நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பவென்
அன்புடைத் தோன்றல் நில்லுகண் ணப்ப வென்று
இன்னுரை யதனெடு மெழிற் சிவலிங்கந்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் றன்கை யம்பொடு மகப்படப் பிடித்து
அருளின னருளலும்
விண்மிசை வானவர்
மலர்மழை பொழிந்தனர் வளையொலி படகந்
துந்துபி கறங்கின தொல்சீர் முனிவரும்
ஏத்தின ரின்னிசை வல்லே
சிவகதி பெற்றனன் றிருக்கண் ணப்பனே.

---

## பெரிய புராணம்

### (பன்னிரண்டாந் திருமுறை)

### திருநாவுக்கரசுநாயனர் புராணம்

மலைச்சிகரச் சிகாமணியின்
மருங்குறமுன் னேநிற்குஞ்
சிலைத்தடக்கைக் கண்ணப்பர்
திருப்பாதஞ் சேர்ந்திறைஞ்சி
அலைத்து விழுங் கண்ணருவி
யாகத்துப் பாய்ந்திழியத்
தலைக்குவித்த கையினராய்த்
தாழ்ந்துபுறம் போந்தணைந்தார்.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் புராணம்

உள்ளத்திற் றெளிகின்ற * அன்பின் மெய்ம்மை
யுருவினையும் அவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பம் பொங்கிப்
பள்ளத்தில் இழிபுனல்போற் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தின் ஞானவா ரமுத முண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்குகின்றார்.

## ஏயர்கோன்கலிக்காம நாயனர் புராணம்

(சுந்தரமூர்த்தி நாயனர் சரித்திரம்)

வணங்கி யுள்ளங் களிகூர மகிழ்ந்து
போற்றி மதுரவிசை
யணங்கு செண்டா டெனும் பதிகம்
பாடி யன்பாற் கண்ணப்பர்
மணங்கொண் மலர்ச்சே வடிபணிந்து வாழ்ந்து
போந்து மன்னுபதி
யிணங்கு தொண்ட ருடன்கெழுமி யின்புற்
றிருக்கு மந்நாளில்.

குறிப்பு:—இக்கண்ணப்பர் வரலாற்றைப் படிப்போர்க்குப் பயன்படும் பொருட்டு திருக்காளத்தித் தேவாரத்தில் ஒரு செய்யுளும், கண்ணப்பரது அன்பைப் பாராட்டிப் பாடிய பாக்கள் சிலவும் இதன்கண் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

16139

முற்றும்

* அன்பின் மெய்ம்மை யுரு = கண்ணப்பர்

UNIVERSITY EXTENSION 26 SEP 1961